

# யுகப் பிரவேசம்

புலோலியூர் க. சதாசிவம்

இந்தச் சிறுகதை நூலின் ஆசிரியர் ஒரு வைத்தியர். வைத்தியத் தொழில் தரும் அநுபவமும் பக்குவமும் ஆசிரியரின் கதைகளைப் படிக்கும் போது புலப்படு கின்றன. 'ஸ்டெத்தஸ்கோப்' மூலம் கேட்கும் தனி மனித இதய ஓசையின் பின்னணியில், ஒரு நுட்பமான கதை உண்டு என்ற சமூக இரகசியத்தை ஆசி ரியர் நன்கு அறிந்திருக்கிறார்.

ஆழ்ந்த சமூக ஆராய்ச்சியின் விளைவு கள். தெள்ளிய தமிழ் நடையில் சிறு கதை இலக்கியம் ஆக்கப்பட்ட வெற்றி முயற்சி — 'யுகப்பிரவேசம்'.

நந்தி

**

இவ்வாசிரியர் கதை சொல்லும்பாணி யில் ஒரு தனித்துவம் இருக்கிறது; தனி நயமும், கலா நுட்பமும் தொனித்துக் கொண்டேயிருக்கின்றன — கதையில் வரும் சம்பவங்களையும், மனசில் எழும் மெல்லிய சலனங்களையும், அந்தரங்கங் களையும் சொற்செட்டுடனும் அனுதா பத்துடனும் இவ்வாசிரியர் சொல்லும் நுட்பம் மெச்சத்தகுந்தது.

இவரது கதைகள் யாவும் செவ்வனே பின்னப்பட்டு, உயிர்த்துடிப்புள்ள பேச்சுத் தமிழில் இயற்கையான அமைதிபெற்று விளங்குகின்றன.

—ஈழத்துச் சிறுகதை
இலக்கிய முன்னோடி
சி. வை.

தெணியான்.

அன்பளிப்பு

பேராசிரியர் க. சதாசிவம்

24-11-73.

# யுகப் பிரவேசம்

(சிறு கதைகள்)

புலோலியூர் க. சதாசிவம்

வெளியீடு:

இளம் எழுத்தாளர் சங்கம்

'தமிழகம்', நாவலப்பிட்டி.

முதற்பதிப்பு: பிரமாதீச கார்த்திகை — 1973.

விலை ரூபா: 3-50

[உரிமை ஆக்கியோனுக்கே]

அச்சுப்பதிவு:
ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம்,
நாவலப்பிட்டி.

# YUKAP PIRAVESAM

*(A collection of Short-Stories)*

*Author:* K. SATHASIVAM

*Release:* YOUNG WRITERS ASSOCIATION,
NAWALAPITIYA.

*First Edition:* 24th November 1973.

Price Rs. 3-50.

# சமர்ப்பணம்

உற்றமணற் குரமூட்டி விதைகள் நாட்டி
உயர்ந்தபனந் துலாவோடி நீரும் பாய்ச்சி
மற்ருேரை உண்பித்துத் தானு முண்டு
மைந்தரையும் அவையினிலே முந்த வைத்த
நற்திறன்சேர் வேலப்பர் கந்தையா அன்ஞன்
நாயகியாள் அன்ணயுமை யாத்தைப் பிள்ளை
பெற்றவருட் தெய்வமிவர் இவர்க்கிந் நன்னூல்
பெருமையுடன் சமர்ப்பணம்நான்
செய்கின் றேனே.

# உள்ளே....

பக்கம்

முன்னுரை v
மதிப்புரை ix
என்னுரை xv

புதுவாழ்வு .... 1
அக்கா! ஏன் அழுகிருய்? .... 16
மண் .... 28
அலை..... 39
அஞ்சல்..... 59
நெடுஞ்சாலை..... 71
மூட்டத்தினுள்ளே....... 84
இது இவர்களுக்குத் துணை .... 96
இனி ஒரு விதி........107
யுகப் பிரவேசம்.....118
ஒரு நாட் பேர்.....136

# முன்னுரை

இந்நூல் ஆசிரியர் ஸ்ரீ க. சதாசிவம் அவர்கள் வெளியிடவிருக்கும் தனது சிறுகதைத் தொகுதிக்கு ஒரு முன்னுரை தரும்படி என்னை வந்து கேட்ட போது உண்மையில் எனக்கு வியப்பாய் இருந்தது. இந்நாட்களில் ஏதோ ஒரு வழியில் பிரபலமடைந்தவர்களைத்தான்-அவர்கள் 'பிளாக்மார்க்கெட்' வியாபாரிகளாயிருந்தாலும் - தலைமை தாங்கவோ, நூல் வெளியிடவோ அழைப்பது சம்பிரதாயமாயிருக்கிறது. ஆகவே, நானும் ஏதோ ஒரு வகையில் பிரபலம்டைந்துவிட்டேனோ வென்று ஒரு கணம் பிரமை ஏற்பட்டது.

அவர் தொடர்ந்து "நீங்கள் இலங்கையில் முதன் முதல் சிறுகதை எழுதத் தொடங்கியவர்களில் ஒருவர். இந்த வகை இலக்கியத்தைச் சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைத்த பெருமை உங்களுக்கு உரியது. ஆகவே முதியவராகிய உங்கள் ஆசியுடன் என் சிறுகதைகளை நூல்வடிவில் வெளியிட விரும்புகிறேன்" என்று சொன்னார். உடனே பிரமை தெளிந்தது. நான் சாதாரண மனிதனாக உணரலானேன். உண்மையும் இதுதான்.

அதாவது, ஆரம்ப காலத்தில் சில சிறுகதைகளை நான் எழுதியிருந்தாலும், நான் ஒரு சாதாரண எழுத்தாளனாகவே என்னைக் கருதி வந்திருக்கிறேன். நான் அதில் குறிப்பிடத்தக்க வெற்றி எதுவும் அடையவில்லை; ஆனால் இலங்கையில் சிறுகதைகளை முதன் முதல் எழுதத் தொடங்கியவர்களில் நானும் ஒருவன் என்று பிறர் குறிப்பிடும்போது எனக்குப் பெருமையாய் இருக்கிறது. அரைசகாப்தத்திற்கு முன் நாம் தொடங்கி வைத்த சிறுகதை வடிவம் இலங்கையிலே பல வழிகளிலும் வளர்ந்து வருகிறதே யென்று மகிழ்ச்சி அடைவதுண்டு.

ஒரு கருத்தைப் பொது மக்களிடத்தே பரப்புவதற்கு ஆதிகாலத்திலிருந்து மனிதன் சிறுகதைகளை ஆற்றலுள்ள ஒரு சாதனமாகவே கருதி வந்திருக்கிறான். நீதிசாஸ்திரம், ஒழுக்கம், சமயக் கருத்துக்கள் முதலியவற்றை மக்கள் மத்தியில் பரப்புவதற்குச் சிறுகதைகளையும் நம் முன்னோர் கையாண்டு வந்திருக்கிறார்கள். அதன் பின்னர் மேல்நாட்டவர் சிறுகதையை இலக்கியத்தின் ஒரு பிரிவாக்கி, அதற்கு இலக்கிய அந்தஸ்து கொடுத்து ஒரு கலையாகவே வளர்க்கத் தொடங்கினர். அவர்களைப் பின்பற்றி ஆரம்ப காலத்தில் சிறுகதைகளை எழுதத் தொடங்கிய நாங்களும் ஏதோ ஒரு கருத்தைச் சிறுகதை இலக்கணத்துக்கமையக் கற்பனை வளத்துடன் கலைநயம் குன்றாமல் சொல்ல முயன்றோம்: எங்கள் எழுத்துக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக்கிடைத்தது மாத்திரமல்ல, எங்களைப் பின்பற்றிப் பல இளைஞர்கள் எழுதவும் தொடங்கினார்கள்.

இந்நிலையில், எங்கள் மத்தியில் நிலவிவரும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஜாதிப் பிரச்சினை, சமூக ஊழல்கள் முதலியவைகளைக் கண்டு குமுறிக்கொண்டிருந்த இளைஞர் பலர் பொதுமக்களுக்கு இந்த அநீதிகளை எடுத்துச் சொல்ல, சிறுகதைகளையே சிறந்த முறையிலே கையாளத் தொடங்கினர். ஒரு குறித்த அரசியற் கோட்பாட்டின் மூலமே இந்த அநீதிகளைப் பொடியாக்கி, ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை அமைக்க முடியுமென்று கருதி, அந்த அரசியற்கோட்பாடுகளை சிறுகதை மூலம் பிரசாரஞ் செய்தும் வருகின்றனர். இந்த எழுத்துக்களினால் இளைஞர் மத்தியில், அவர்கள் சிந்தனையிலும் நோக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. இந்தக் கருத்துக்களையே மையமாக வைத்துப் பல இளைஞர்கள் வேகத்துடனும் ஆற்றலுடனும் எழுதிவருவதை இன்று காண்கிறோம். இலங்கையில் சிறுகதை இலக்கியம் தேங்கிவிடாமல் உயிர்த்துடிப்புடன் வளர்ந்து வருவதையே இது எடுத்துக்காட்டுகிறது.

இந்த வரிசையில் வந்தவர்தான் இந்நூல் ஆசிரியர் புலோலியூர் க. சதாசிவம் அவர்களும். இந்நூலில் அடங்கியிருக்கும் கதைகளைப் பார்க்கும் போது படிப்படியாக நான் மேலே குறிப்பிட்ட முற்போக்குக் கருத்துக்கள் ஆசிரியரின் சிந்தனையையும் பாதித்திருப்பதை ஓரளவுக்குக் காணமுடிகிறது. 1962-ம் ஆண்டில் காதலுணர்ச்சியை வைத்துக் கதை எழுதிய இவர் 1972-ம் ஆண்டளவில் ஜாதிப்பிரச்சினை, தொழிலாளி - முதலாளி பிரச்சினைகளிற் கவனம் செலுத்தும் அளவுக்கு மாறியிருப்பதைக் காண்கிறோம்.

இவருடைய கதைகளிலே வரும் கருத்துக்களை வைத்து இதற்கு முன்னர் பலர் எழுதியிருந்தாலும், இவ்வாசிரியர் கதை சொல்லும் பாணியில் ஒரு தனித்துவம் இருப்பதாக நான் உணர்கிறேன்; கதைகளை எல்லோரும் சொல்வது போல் அல்லாமல், இவர் சொல்வதில் தனி நயமும், கலா நுட்பமும் தொனித்துக்கொண்டே யிருக்கின்றன. பொதுவாகப் பார்க்கும் போது இவர் கதைகள் யாவும் செவ்வனே பின்னப்பட்டு, உயிர்த்துடிப்புள்ள பேச்சுத் தமிழில் இயற்கையான அமைதி பெற்று விளங்குகின்றன. ஆசிரியரின் எழுத்து வன்மைக்கு உதாரணமாக 'அக்கா ஏன் அழுகிறாய்?' என்ற கதையை மட்டும் எடுத்துப் பார்ப்போம்.

பார்வதி ஒரு ஏழைப் பெண். செல்லத்தம்பி மச்சானுக்கு அவளைக் கொடுப்பதாகப் பேச்சு இருந்து வருகிறது. பள்ளியில் சக மாணவிகள் அவளைச் "செல்லத்தம்பி, செல்லத்தம்பி'' என்று பரிகாசஞ் செய்து அவள் மனசில் ஆசையையும் வளர்த்துவிட்டிருந்தார்கள். ஆனால் செல்லத்தம்பி வேறொரு பெண்ணைக் காசுக்காக மணந்து கொள்கிறான். அவள் தங்கை, சின்னஞ் சிறிய உமாவுக்கு இவைகள் ஒன்றும் புரியாத வயசு. எதைச் சொல்லலாம் எதைச் சொல்லக் கூடாதென்று அறியாத அந்தப் பிஞ்சு உள்ளம் மனசிலே பட்டதையெல்லாம் தன் அக்காவுக்குச் சொல்லி ஆறுதல் பெற முயல்கிறது. எல்லாவற்றையும் பார்வதி கேட்டுக் கொண்டு மௌனமாய் இருக்கிறாள். ஒரு வார்த்தைதானும் அவளால் பேசமுடியாத

நிலை, அவள் உள்ளத் துடிப்பைக் குழந்தை உமாவால் அறிய முடியுமா? ஆனால் அந்தப் பேச்சற்ற பேச்சு பார்வதியின் உள்ளக் குமுறலை எவ்வளவு ஆற்றலுடன் எங்களை உணரச் செய்துவிடுகிறது. உமாவைப் பேசவைத்து, அவள் மூலம் பார்வதியின் உள்ளத்தை உணரச் செய்யும் உத்தியை ஆசிரியர் இங்கே கலா நுட்பத்துடன் கையாண்டிருக்கிறார். உமா தொடர்கிறாள். ''அக்காவின்ரை கலியாண வீட்டுக்கு வாற ஆக்களுக்கு நான்தான் சந்தனமும் குங்குமமும் குடுப்பன்... டும்...டும் .. பீபி பீபி...'' வாசகர்களாகிய எங்கள் உள்ளம் நெகிழ்ந்து போகிறது. பார்வதியின் அந்தக்கரணங்கள் யாவும் துடிக்கின்றன. அழுகையை நிறுத்த முடியாமல் கையில் குடத்துடன் கிணற்றடியை நோக்கி விரைகிறாள். கைதேர்ந்த சிற்பி ஒருவன் வடித்த சிற்பம் போல் இக்கதை விளங்குகிறது.

சமீபகாலத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் கதைகளிலே காணப்படும், அளவுக்கு மிஞ்சிய சொற்பிரயோகத்தால் சலிப்படைந்திருக்கும் உள்ளங்களுக்கு இந்நூல் ஒரு மாற்று மருந்து போல் அமைந்துள்ளது. கதையில் வரும் சம்பவங்களையும், பாத்திரங்களையும் மனசில் எழும் மெல்லிய சலனங்களையும், அந்தரங்கங்களையும் சொற்செட்டுடன், சொல்லியும் சொல்லாமலும், அனுதாபத்துடன் இவ்வாசிரியர் சொல்லும் நுட்பம் மெச்சத் தகுந்தது,

ஸ்ரீ க. சதாசிவம் அவர்களுக்கு முன்னால் காலம் நீண்டு கிடக்கிறது. கதை சொல்லும் ஆற்றலும் இவருக்கு இயற்கையாய் வாய்த்திருப்பதாக நினைக்கிறேன். இவர் சிறுகதைகளுடன் நின்றுவிடாமல் இலக்கியத்தின் பிறவடிவங்களாகிய நாடகம், நாவல் முதலிய துறைகளிலும் தம் திறமையைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். எழுத்துத் துறையில் இவருடைய எதிர்காலம் சிறப்புடன் விளங்குமென்பதில் எனக்குக் கிஞ்சித்தேனும் ஐயமில்லை.

'இனியாள்'
வெள்ளவத்தை.
17–10–73.

சி. வைத்யலிங்கம்,

## கலாநிதி க. கைலாசபதி அவர்கள்
### அளித்த
# மதிப்புரை

ஏறத்தாழப் பதினைந்து வருடங்களுக்கு முன் ஈழத்துத் தமிழ் எழுத்தாளரிடையே புதிய ஓர் இலக்கிய இயக்கம் எழுந்தது. மொழி நடை, பொருள், சமுதாயநோக்கு முதலிய பல்வேறு அம்சங்களிலும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் தமக்குரிய தனித்தன்மையுடனும் சிறப்பியல்புகளுடனும் இயங்குதல் இன்றியமையாதது என்று எடுத்துரைத்த அவ் வியக்கம், அன்றைய நிலையில் 'தேசிய இலக்கியம்' என்னும் இலக்குரையை முன் வைத்தது. தேசிய இலக்கியம் என்ற சொற்றொடர், அக்காலகட்டத்திலே ஈழத்து எழுத்தாளர் பெரும்பாலானோரின் நெஞ்சங்களில் அரும்பிக்கொண்டிருந்த உணர்வுகளை உருப்படியாகப் பிரதிபலித்தது எனலாம். ஓரளவு கருத்துருவமாக அமைந்த அச்சொற்றொடர் குறிக்கும் பொருளைப் புலன்களால் உணரத்தக்கவிதத்தில் 'மண்வாசனை இலக்கியம்' என்ற சொற்றொடரையும் சில எழுத்தாளர்கள் வழங்கலாயினர். அது வழக்கச்சொல்லாக நிலைத்துவிட்டது.

இச்சொற்றொடர்களையும் இவற்றின் உட்பொருளையும் எழுத்தாளர்கள் பற்றிக்கொண்டதும், முதன் முறையாக அவர்கள் ஈழத்து மக்களது வாழ்க்கையையும் பிரச்சினைகளை யும் பொருளாகக்கொண்டு இலக்கியம் செய்யத் தொடங் கினர். 1960-ம் ஆண்டளவில் இப்புதுநெறி இலக்கியம் தெளிவாகத் தெரியத் தொடங்கியதெனலாம்.

இன்று இதெல்லாம் வரலாறு. மேலே விவரித்த இலக்கிய வளர்ச்சிப் போக்கோடு இணைந்து செல்லாமல் ஆங்காங்கே வழிதவறிப் பின்தங்கிவிட்ட எழுத்தாளர் சிலர் இவ்வர லாற்றை எவ்வளவுதான் திரித்து எழுதமுயன்றாலும் உண்

மையை மறைத்துவிட இயலாது. இன்றுவரை — கடந்த பத்துப் பன்னிரண்டு வருடங்களாக — முற்கூறிய இலக்கிய கோஷங்கள் பொருத்தமுடையனவாய் இருப்பதே அவற்றின் தேவைக்கும் உள்ளுரத்துக்கும் தக்க சான்றாகும்.

தேசிய இலக்கிய இயக்கம் எழுத்தாளர் மத்தியில் விரிவடைந்தபொழுது சிலபல நல்விளைவுகள் ஏற்பட்டன. எழுத்தாளர் நிறுவன அடிப்படையில் இயங்கும் மனப்பான்மை உறுதிப்பட்டது; தேசிய இலக்கிய இயக்கத்தில் முன்னின்ற முற்போக்கு அணியிற் பலர் இணைந்து கொண்டனர். புதிய சஞ்சிகைகள் தோன்றின; எழுத்தாளர்களது ஆற்றலையும் ஆக்கங்களையும் வெளிக்கொணரக்கூடிய இலக்கியப் போட்டிகள் பல நடத்தப்பட்டன; கருத்தரங்குகள், கவியரங்குகள், இலக்கிய சர்ச்சைகள் என்பன அடிக்கடி நிகழ்ந்தன. பொதுவில் எழுத்தாளரிடையும் இரசிகர்களிடையும் விமர்சன நோக்கு விருத்தியடைந்தது. இவை அனைத்தினதும் திரண்ட வளர்ச்சியின் பேறாகவே 'ஈழத்துத் தமிழ் இலக்கியம்' என்று போதிய காரணத்துடனும் நியாயமான பெருமையுடனும் நாம் தற்காலத்தில் பேசிக்கொள்ளும் நிலைமை உருவாகியது.

மேலே விவரிக்கப்பட்ட வளர்ச்சி படிப்படியாக ஏற்பட்டுவந்த காலப்பகுதியில் எழுதத் தொடங்கியவர்கள் யாவரும் தவிர்க்க இயலாதவாறு ஏதோவொரு வகையில் இவ்வளர்ச்சியைப் பிரதிபலிப்பதில் வியப்பேதுமில்லை. அதாவது இவ்வளர்ச்சிப் போக்கை ஒட்டியும் வெட்டியுமே எழுத்தாளர்கள் இயங்கினர். எழுத ஆரம்பித்தகாலத்திலிருந்தே, தேசிய இலக்கியம் மண்வாசனை என்பனவற்றின் உள்ளியல்பை நன்கு உள்வாங்கிக் கொண்டு கதைகள் படைத்துவந்துள்ள எழுத்தாளரில் ஒருவர் புலோலியூர் க. சதாசிவம்.

தேசிய இலக்கிய இயக்கத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாகச் சிலகாலம் வெளிவந்த **மரகதம்** என்ற மாசிகையின் ஆதரவில் நடத்தப்பெற்ற சிறுகதைப் போட்டியில் (1961) பங்குபற்றிப்

பாராட்டுப் பரிசும் பெற்றதன் மூலம் எழுத்துலகுக்கு அறிமுக மானவர் இந்நூலாசிரியர். பரிசுபெற்ற அக்கதையே இத் தொகுதியில் முதலாவதாய் அமைந்திருக்கிறது. ''ஈழத்தில் சிறந்த பல எழுத்தாளர்கள் அறிமுகமின்றி, இலைமறைகாய் களைப் போல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு சந் தர்ப்பங்கொடுத்து ஊக்குவித்துச் சிறுகதை இலக்கியத்துக்கு ஈழத்திலும் நல்லதொரு பரம்பரையை உருவாக்கவேண்டும்'' என்று மரகதம் சஞ்சிகையில் அறிவிக்கப்பட்டிருந்தது. அவ் வாறு உருவாகிய ஒரு பரம்பரையில் இடம் பெற்றவரே இந்நூலாசிரியர்.

மரகதம் சஞ்சிகையின் ஆதரவில் நடத்தப்பெற்ற அச்சிறு கதைப் போட்டியில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் களில் ஒருவராக நானும் பணியாற்றினேன். 'புதுவாழ்வு' என்ற கதையின் மூலமாகவே புலோலியூர் க. சதாசிவம் என்னும் புது எழுத்தாளரை நான் இனங்கண்டுகொள்ள முடிந்தது. சென்ற ஆண்டு, நாவலர் நூற்று ஐம்பதாவது ஜயந்தி விழாவை முன்னிட்டு நாவலர் சபையினர் அனைத் திலங்கை அடிப்படையிலே சிறுகதைப் போட்டியொன்றை நடத்தினர். அதிலும் நடுவர்களில் ஒருவராய்க் கடமையாற் றினேன். அப்போட்டியில் முதற்பரிசு பெற்றதே இத்தொகு தியில் இறுதிக் கதையாய் அமைந்துள்ள 'ஒரு நாட் பேர்' என்பது. இவற்றைத் தவிர வேறு பல போட்டிகளிலும் சிறந்த சிறுகதைகளைத் தேர்ந்தெடுக்கும் நடுவர் குழுக்களிற் கடமையாற்றியிருக்கிறேன். அப்போட்டிகள் சிலவற்றிலே (பரிசுபெறாவிடினும்) தரமுடையனவாய்க் கணிக்கப்பட்ட சில கதைகள் இத்தொகுதியில் இடம்பெற்றிருத்தலை இப்பொழுது காண்கிறேன். உதாரணமாக 'யுகப் பிரவேசம்' என்பது அத்தகையதொன்று. ஏதோவொரு சிறுகதைப் போட்டியில் முதல் ஐந்து கதைகளுக்குள் அதுவும் ஒன்றாய்த் தேர்ந்தெடுக் கப்பட்டதாக ஞாபகம். பத்துப் பன்னிரண்டு வருடங்களாக ஆசிரியர் தொடர்ந்து இலக்கிய சிருஷ்டியில் ஈடுபட்டு வந்துள் ளமைக்குச் சான்றாக விளங்குகிறது இத்தொகுதி.

தேசிய இலக்கியம், மண்வாசனை என்னும் கருத்துரு வங்கள் பிரபலியமடைந்ததைப் போலவே எதிர்ப்பையும் பெற்றன. இக்கருத்துருவங்களை ஏற்றுக்கொண்டோர் அனை வருமே இவற்றைப் பூரணமாகப் புரிந்து கொண்டனர் என் றும் கூறவியலாது. சிலருக்கு அவை வெறுமனே கவர்ச்சி யான சொற்றொடர்களாகவே இருந்தன. (சந்தர்ப்பவாதி கள் சிலருக்கு இக்குரல்கள் வேலைவாய்ப்பானவையாய் இருந்தன என்பதும் குறிப்பிடவேண்டியதே.) வேறு சிலர், பன்னலஞ் செறிந்த இக்கருத்துருவங்களை மிகை எளிமைப் படுத்தி, அவற்றில் இரண்டொரு கூறுகளை மாத்திரம் இலக் கிய வாக்கத்திற்குப் பயன்படுத்தினர். எந்தவொரு இயக்கத் திலும் தயக்க மயக்கங்களும் ஏற்ற இறக்கங்களும் விரவி யிருத்தல் இயல்பே. ஆயினும் வலுவுள்ள ஓர் இயக்கத்தின் பெரும்பகுதி - முக்கியமான பகுதி - வீறுநலத்துடனும் தெளி வுடனும் செயற்படும் என்பதிலும் ஐயமில்லை.

இந்தப் பின்னணியில் இலக்கிய அரங்கிற் பிரவேசித் துத் தளர்ச்சியின்றி எழுதிவந்திருக்கும் இந்நூலாசிரியரின் கதைகள் எல்லாமே மண்வாசனை கமழ்வனவாய் உள்ளன. குறிப்பாகக் கிராமப்புறஞ் சார்ந்த காட்சிகளையும் உழவுத் தொழில் பற்றிய வாழ்க்கைக் கூறுகளையும் உருக்கமாகவும் நேர்மையாகவும் சித்திரிக்குந் திறன் ஆசிரியருக்கு நிறைய உண்டு. வடபகுதியின் கிராமப்புற வாழ்க்கையை முற்பட்ட கதைகளில் முறைபிசகாமல் நுணுக்கமாய்ச் சித்திரித்துள்ள ஆசிரியர், பிற்பட்ட சில கதைகளில் மலைநாட்டுத் தோட் டத் தொழிலாளர் வாழ்க்கையிற் காணும் அம்சங்கள் சில வற்றைப் பரிவுடனும் பற்றுணர்வுடனும் தீட்டியிருக்கிறார். பொதுவாகப் பேசுமிடத்து நகர வாழ்க்கையினும் நாட்டுப் புறத்து வாழ்க்கையைச் சித்திரிப்பதிலேயே ஆசிரியரது உணர்வொத்தியைபு துலக்கமாய்த் தெரிகிறது எனலாம்.

இத்தொகுதியிலுள்ள கதைகளிற் பெரும்பாலானவை சோகச்சுவை பயப்பன. ஆனால், மிகையுணர்ச்சிக்கு ஆசிரியர் இடமளிக்கவில்லை. நிகழ்ச்சிகளும் முடிவுகளும் கதைக்கருவி

லிருந்து இயல்பாக விரிகின்றன. தான் சரியாக விளங்கிக் கொள்ளாத தத்துவத்தினுலோ அல்லது தனது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட உணர்ச்சி எழுச்சியினுலோ ஆசிரியர் பாதிக்கப்படாமையை இவ்வியற்பண்பு எமக்குக் காட்டுகிறது. தற்கட்டுப்பாட்டின் விளைவான செறிவும் அமைவடக்கமும் கதைகளிற் பரவிக்கிடக்கின்றன. ஆசிரியரது தனிச்சிறப்புக்களில் இது முக்கியமானது. முதற் கதையிலேயே இப்பண்பினை நாம் கண்டுகொள்ளலாம்.

> ''யன்னலோரம் நின்ற செல்லம்மா, உருண்டோடும் அந்த அணில் கோந்திய நல்லரக மாம்பழத்தைத் தன் மருண்ட விழிகளாற் பார்த்தபடி நிற்கிருள்''

என்னும் இறுதி வாக்கியத்தில் அமைந்த குறியீடு, விக்கல்களும் விம்மல்களும் உணர்ச்சி வெடிப்புக்களும் இன்றிக் கதை சொல்லும் கவினுக்கும் மட்டமைதிக்கும் காட்டாக உள்ளது. செல்லம்மாவைப் போலவே இத்தொகுதியில் உயிர்ச்சித்திரங்களாய்த் திகழும் பார்வதி, பொன்னையா, மாணிக்கவாசகர், தங்கம்மா, பாப்பாத்தி முதலிய பாத்திரங்கள் நலங்கி மலங்கி நைந்து உளம்கலங்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் ஆசிரியர் வரம்பின்றி வார்த்தைகளை வளர்க்காமல், சொற் சுருக்கத்தைக் கடைப்பிடித்துள்ளார். 'அஞ்சல்' என்ற கதையில் திருவாசக வரிகள் குறியீடாக அமைந்து சோபையூட்டுகின்றன. 'நெடுஞ்சாலை' என்ற கதையிலும் குறியீடுகள் நேர்த்தி நயப்படக் கையாளப்பட்டுள்ளன. மொத்தத்தில் மொழி நடையையும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் ஆசிரியர் அழகாக அடக்கியாண்டிருக்கிருர்.

தமிழ்த் திரைப்படங்களிலும் பொழுது போக்குச் சஞ்சிகைகளிலும் அவற்றைச் சார்ந்த புனைகதையாசிரியர்களது படைப்புக்களிலும் மலினப்படுத்தப்படும் மனித உணர்ச்சிப் பொங்கலுக்கு ஏற்ற மாற்று மருந்தாகவும் இன்றியமையாத எதிர்ச் செயலாகவும் ஆசிரியரது உள்ளடங்கலான உணர்ச்சி வெளிப்பாடு அமைந்துள்ளது; கலைமுதிர்ச்சிக்குச் சான்று

பகரும் இவ்வமைவடக்கத்தைப் பெயர்பெற்ற எழுத்தாளர்கள் கூடச் சில வேளைகளில் நழுவவிட்டுவிடுவதுண்டு. அந்த வகையில் கலையழகு பொருந்தியனவாய் இத்தொகுதிலுள்ள கதைகள் மிளிர்கின்றன. உதாரணமாக, 'புதுவாழ்வு', 'அலை', நெடுஞ்சாலை', 'யுகப்பிரவேசம்' ஆகிய கதைகளில் பாலியற் பிரச்சினைகள் இடம்பெறுகின்றன. அவற்றை மெய்ம்மை குன்றாமல் எடுத்தாளும் ஆசிரியர் ஆபாசமோ விரசமோ தோன்றாமலும் விஷயத்தைக் கையாண்டிருக்கிறார். இது குறிப்பிடத்தக்க ஒரு சாதனையேயாகும்.

'கலையழகு' என்ற பெயரில் வார்த்தைகளில் விசிறிமடிப்பும், வேறு பல வித்தைகளும் வேடிக்கைகளும் காட்டிச் சத்தப்பிரபஞ்சத்தில் அமிழ்ந்துவிடும் சாரமற்ற எழுத்தாளர்கள் ஒருபுறமும், 'சமூகப் பிரக்ஞை' என்ற பெயரில் சிற்சில விஷயங்களையே வாய்பாடு போல் மீட்டும் மீட்டும் உரத்த குரலிற் கூறிக்கொண்டு உள்நோக்கும் உணர்வு நலமும் இழந்த பிரசங்க எழுத்தாளர்கள் மறுபுறமும் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் சூழலிலே, தேசிய இலக்கியக் கோட்பாடுகளைத் தன்னளவிற் குறிப்பிடத்தக்களவு சிரணித்துக்கொண்டு ஆரவாரமற்ற நீர்மையில் எழுத்துத் துறையில் இயங்கிவந்திருக்கிறார் ஆசிரியர்.

தேசிய இலக்கியக் கோட்பாட்டின் முனைப்புக்கூறுகள் சில இக்கதைகளில் அழுத்தம் பெறுமைக்குக் காரணம், இயக்க மையத்திலிருந்து சற்றுத் தூரத்தில் ஆசிரியர் இருந்தமை போலும். எனினும் இக்குறைபாட்டிற்குப் போதியளவு ஈடு செய்வது போல மண்வாசனையை அழுத்தமாகவும் அழகுணர்ச்சியுடனும் தமது கதைகளில் வெளிப்படுத்தியிருக்கிறார். இதுவே ஆசிரியரது வெற்றியின் அடிப்படை என்றும் கருதுகிறேன். அதாவது ஆசிரியரைப் பொறுத்தவரையில் உளக்கனிவிலிருந்தே கலை ஊற்றெடுக்கிறது என்பேன். இதுவரை 'இலைமறை காய்போல்' இருந்த ஆசிரியர் இத்தொகுதியின் மூலம் தமக்குரிய தானத்தைப் பெற்றுக்கொள்வார் என நம்புகிறேன். இந்நூலைத் தமிழிலக்கிய உலகம் தகுந்தபடி வரவேற்கும் என்பதிலும் எனக்கு எதுவித ஐயமில்லை.

# என்னுரை

இந்நூல் எனது சிறுகதைகளிலே பதினென்றைத் தாங்கி வெளிவருகிறது. 1961-ம் ஆண்டு இலக்கிய உலகிற் பிரவேசித்து, சிறுகதைத் துறையில் நான் தொடர்ந்து ஈடுபடுவதின் அறுவடையே இத்தொகுதி.

ஆற்றல் இலக்கியத் துறையில் வெளிவரும் எனது முதலாவது நூலைப் படிக்கப்போகும் வாசக அன்பர்களுடன் மனந்திறந்து சில வார்த்தைகள் பேச நான் ஆசைப்படுகிறேன்.

சமூதாயத்திலே காணப்படும் முரண்பாடுகளைப்பற்றி நான் இளமைப் பிராயத்திலிருந்தே சிந்திப்பதுண்டு. இச்சிந்தனையின் வெளிப்பாடே என்னைச் சிறு கதைகள் எழுதத் தூண்டிய முதற்காரணி எனலாம். சமுதாய முரண்பாடுகளுக்குரிய காரணங்களைப்பற்றிய சிந்தனையின் பரிணமமே என்னை ஏற்றத்தாழ்வு அற்ற, சமத்துவமுடைய ஒரு புதிய யுகத்துள்ளே பிரவேசிக்க வைத்துள்ளது.

வாழ்க்கையிலே காணப்படும் முரண்பாடுகளினடியாகத் தோன்றும் நசிந்து, நலிந்து போகும் மக்களையும், அவர்களது மனநிலைகளையும் மனிதாபிமானத்துடனும், எதிர்கால வளர்ச்சியிற் தெளிவும் நம்பிக்கையும் கொள்ளும் மனப்பான்மையுடனும் நோக்குகிறேன். நான் மனோரம்மியமான கற்பனை உலகிற் சஞ்சரிக்கவில்லை. யதார்த்த நோக்கே எனது கதைகளின் அச்சாணியான அம்சம் என்பேன். எனது ஆக்கங்கள் வெறும் பொழுது போக்கிற்காகப் படைக்கப்படவில்லை.

நான் மக்களின் வாழ்க்கையிலே தோன்றும் இன்னல் நிலைகளை எடுத்துக்காட்டும் பொழுது, அம்மக்களது வாழ்வின் பின்னணியிலேயே வைத்து நோக்குகிறேன்; ஆகவேதான் மண்வாசனை என் கதைகளிலே அடித்தளமாக-ஆதாரசுருதி

யாக—அமைந்துள்ளது. மண்வாசனை என்னும் இலக்கியப் பண்பின் உள்ளார்ந்த ஆற்றலை நான் பெரிதும் மதிப்பவன்.

சமுதாயப் பார்வையை நேர்த்தியாக வீசும் நான் தனி மனித உணர்ச்சிகளை ஒதுக்கித் தள்ளவில்லை. எனது பாத்திரங்கள் சாவியில் இயங்கும் பொம்மைகளல்ல. கதை நிகழ்ச்சிகளிலே பாத்திரங்களின் உணர்வு நிலைகளைக் காட்டுவதன் மூலம் கதைகளில் உயிர்த்துடிப்பைக் காணமுடியும் என உணர்கிறேன். அதே வேளையில் நான் எதனையும் மிகைப் படுத்திக் காட்டவில்லை; உளவியற்சார்புடன் அணுகுகிறேன். உணர்ச்சிகளை மிகைப்படுத்துவதால் யதார்த்த நிலை பாதிக்கப்படும்; எடுத்த கருத்தினை ஆழமாகநோக்க முடியாது என எண்ணுகிறேன். எனது சூழலில் வாழும்—சமுதாயப் பொது நெறிக்கு உட்பட்டு நிற்கும்—பாத்திரங்களே எனது மாம்பழ வள்ளி, பார்வதி, குத்தகைப் பொன்னையா, மாணிக்கவாசகர், அம்பிகாபதி ஐயர், தங்கம்மா, அச்சுக்கூடச் சின்னையா, கருணாவதி, கதீஜா, காளிமுத்து, பாப்பாத்தி முதலியோர். இவர்களுக்கு இன்னல்களால் ஏற்படும் அக உணர்வுகளை ஆழமாகச் சித்திரிக்கும் பொழுது இதற்குரிய புற உலகக்காரணிகளையும் தேவையான அளவு இணைத்துக்காட்ட முனைந்துள்ளேன்.

கலை - இலக்கிய கர்த்தாக்களுக்குரிய உயரிய சமுதாயப் பணியில் எனக்கு ஆழ்ந்த நம்பிக்கையுண்டு. ஆற்றல் இலக்கியம் சமுதாயப்பணிக்குக் கருவியாகும் பொழுது, அதன் வடிவம் காலத்தின் தேவைக்கும் கருத்தின் கனத்திற்கும் ஏற்ப விரிந்து கொடுக்க வேண்டுமே தவிர—உருவம் சிதைந்து, கலையழகு குன்றி வெறும் பிரசாரம் செய்யும் சாதனமாகக் கூடாது என நான் திடமாகக் கருதுகிறேன்.

தேசிய இலக்கியக் கோட்பாட்டின் நற்பண்புகளை நான் தழுவி நிற்பவன். தேசிய ஒருமைப்பாட்டினை இதனாலே சாதிக்கலாம் எனப் பூரணமாக நம்புகிறேன்.

தனித்துவமான சிறப்பியல்புகளையும், பாரம்பரியத்தையும் கொண்ட ஈழத்து இலக்கியத்தின் கனமான-காத்திரமான வளர்ச்சியில் எனது இம்முயற்சி ஒரு சிறு பங்கினை அளித்துள்ளதாக இலக்கிய உலகம் கணிக்குமாயின் நான் பெருமையும் பேருவகையும் அடைவேன்.

நான் பங்குபற்றிய சிறுகதைப் போட்டிகளின் அமைப்பாளர்களுக்கும், எனது கதைகளை அவ்வப்போது பிரசுரஞ் செய்து ஊக்குவித்த வீரகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், தமிழகத்திலிருந்து வெளிவரும் தாமரை மாசிகையின் ஆசிரியருக்கும் எனது மனம் கனிந்த நன்றி.

எனது வேண்டுகோளை அன்புடன் ஏற்று, சிரமத்தைப் பாராது இந்நூலுக்கு முன்னுரை தந்துதவிய பெரியார் சி. வைத்யலிங்கம் அவர்களுக்கும், தம்து பல்வேறு கடமைகளுக்குள்ளும் மனமுவந்து மதிப்புரை வழங்கிய கலாநிதி க. கைலாசபதி அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பாடுடையேன்.

எனது நீண்டநாளைய நண்பரும், எழுத்தாளருமான திரு. தி. ஞானசேகரன் அவர்களே எனது படைப்புக்களின் முதல் வாசகன். அவருக்கு என் அன்பு என்றும் உரியது.

எனது கதைகள் நூல்வடிவம் பெறவேண்டுமெனப் பெரிதும் விரும்பி, எனக்குப் பல வழிகளில் உதவிய நாவலப்பிட்டி இளம் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு. பி. மகாலிங்கம் அவர்களுக்கு எனது அன்பு கலந்த நன்றி.

இந்நூலை அச்சுப்பதிவாக்குவதற்கு முன் வந்துதவிய திரு. நா. முத்தையா அவர்களுக்கும், ஸ்ரீ ஆத்மஜோதி அச்சக அதிபர் திரு. நா. அருளைநாயகம் அவர்களுக்கும், மிக அழகான அட்டைப் படம் வரைந்துதவி, நூலுக்குப் பொலிவூட்டிய என் கல்லூரி நண்பன் 'ஸ்ரீகாந்'திற்கும், அச்சக ஊழியர்களின் உயர்ந்த உழைப்புக்கும் என் இதயபூர்வமான நன்றி.

புலோலி,<br>
24–11–73.

க. சதாசிவம்

# புது வாழ்வு

''பெரியவர்?''

''யாழ்ப்பாண ஆஸ்பத்திரி மோனை.''

''தம்பி?''

''நெல்லியடி.''

''ஆச்சி?''

''உனக்குக் கிழவியோடை தானடா பகுடிப் பேச்சு...... வேறை எங்கை போறது? சந்தைக்குத் தானடா மோனை.''

''அக்கா?''

''.........''

'வானு'க்கு முன் ஆசனத்தில் சாரதிக்குப் பக்கத்தில், கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்த கந்தசாமி, ஆச்சிபோல அக்காவும் ஏதாவது சொல்லுவாள் என எண்ணித் திரும்பிப் பார்க்கிறான். அக்கா மணியத்தின் கேள்விக்கு ஒன்றுமே பேசாது சிமிட்டிக் கொண்டே சிரிக்கிறாள்.

'வானி'ன் கதவுகளை அடித்துச் சாத்திக் கொண்டே 'றயிட்' என்கிறான் மணியம். 'வான்' மந்திகை முச்சந்தியை விட்டுக் கிளம்புகிறது.

'வான்' ஓட்டத்திலே பெயர்போன 'லயின்'களில் பருத்தித்துறை—யாழ்ப்பாண 'லயி'னும் ஒன்று. பருத்தித்துறை—யாழ்ப்பாண 'லயி'னுக்கு 'வான்' ஓடிப் பலர் பணக்காரர்

களாயிருக்கிறார்கள். 'காட்ஸ்' விளையாடிக்கொண்டு, காவாலியாக 'லாட்ரி' அடித்த செல்லத்துரை இன்று நான்கு 'வான்'களும், இரண்டு கார்களுமல்லவா வைத்து ஓடுகிறான்! மேலும், நல்ல வருமானம் நல்கும் 'காராஜ்' ஒன்றின் ஏகபோக உரிமையாளன் அவன்.

'வான்' நெல்லியடிக்கு வந்துவிட்டது. கைப்பெட்டியுடன் இறங்கிச் சந்தையை நோக்கி நடக்கலானாள் மாம்பழவள்ளி. ஐந்தாறு 'லோங்ஸ்' போட்டவர்கள் 'வானி'ல் ஏறுகிறார்கள்.

இது யாழ்ப்பாணக் கச்சேரியில் வேலை செய்பவர்களைச் சுமந்து செல்லும் 'கச்சேரி வான்' செல்லத்துரையின் வான்களில் இதுவும் ஒன்று. இதன் முதல் 'றிப்' காலை ஏழரை மணிக்கெல்லாம் பருத்தித்துறையில் ஆரம்பமாகும். கச்சேரியில் வேலைசெய்யும் உத்தியோகத்தர்கள்சிலர், மாம்பழவள்ளி, கனகேஸ்வரி ஆகியோர் வாடிக்கைக் காரர்கள். இடம் இருந்தால் வேறு சிலரையும் பனங்கிழங்கடுக்கியது போல் அடுக்கிக்கொண்டு நிறைமாதக் கர்ப்பிணியாக அசைந்தாடிச் செல்லும் அந்த 'வான்'. செல்லத்துரைக்கு மற்றைய 'வான்'களைவிட இந்த 'வான்'தான் அதிக பணத்தைத் தேடிக் கொடுத்தது.

மணியம் பத்து வயதாக இருக்கும் பொழுது 'கிளீனரா'கச் செல்லத்துரையின் 'வானி'ல் சேர்ந்தவன். எட்டு வருடங்கள் உருண்டோடி விட்டன. மணியத்தினுடைய 'வானில்' ஆட்கள் சேர்வது அதிகம். ஆட்கள் விழுந்தடித்துக் கொண்டு அவ்வானுக்கு வருவதின் காரணம் மணியம் என்றுதான் சொல்ல வேண்டும். அவ்வளவு ஆதரவாக ஆட்களுடன் பழகுவான் மணியம். பெரியவர், ஆச்சி, அக்கா, அண்ணை, தம்பி, தங்கச்சி என்று அடைமொழி கொண்டு முன்பு பழகியவர்கள் போலல்லவா அழைப்பான் அவன். மணியத்தை 'அருமையான பொடியன்' 'தங்கக் கம்பி' என்று எத்தனையோ பேர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

'போற வழிக்குப் புண்ணியம் கிடைக்கும் மோனே, சாத்திரியார் முருகேசர் வீட்டுக் குச்சு ஒழுங்கையில் ஒருக்கால் இறக்கிவிடு' என்று கேட்பவர்களுக்குச் செவிசாய்த்து ஒழுங்கை, வீடு முதலியவற்றின் வி ப ர ங் க ளை யு ம் சொல்வான் மணியம்.

'உன்னுனை உந்தத் தகரப் படலையிலே ஒருக்கால் மறியடா இராசா' என்று எத்தனை பேர் அவனை 'இராசா'வாக்கியிருக்கிறார்கள்.

''தம்பி! மனிசனுக்குப் புதுப்புது நோயெல்லாம் வருகுது. ருசியாக்காரன் — அமெரிக்கன் போட்ட குண்டுதான் காரணமோ?'' என்று பெரியவர் ஒருவர் ஒரு வெடி குண்டைத் தூக்கிப்போட்டு, 'வானி'ல் நிலவிய அமைதியைக் குலைக்கிறார்.

அருகிலிருந்த 'சீவ்-கிளார்க்' பதில் சொன்னார். ''ஓம் பாருங்கோ காற்றையும் நாசங்கெட்டவர்கள் நஞ்சாக்கிறுங்கள்.''

பெரியவர் தொடக்கிவிட்ட கதை வளர்ந்து கிளை விடுகிறது. கனகேஸ்வரி சுருக்கமாக இடைக்கிடை அபிப்பிராயம் தெரிவித்தாள். கந்தசாமி இதில் பங்கு கொள்ளவில்லை. எங்கோ தன் சிந்தனைக் குதிரையை மேயவிடுகிறான்.

'வான்' வல்லை வெளிக்கு வந்துவிட்டது. வேகமும் அதிகரித்து விட்டது.

காற்றிலே, கனகேஸ்வரியின் கன்னங்களில் அவள் தலைமயிர்கள் தவழ்ந்து விளையாடுகின்றன. குறும்புக் குழந்தையாக விளையாடும் மயிர்களைக் கூட்டிவிடுகிறாள் அவள்.

கனகேஸ்வரி சுமாரான அழகிதான். அவளது களை நிறைந்த முகத்திலே ஒரு தனிக் கவர்ச்சி உண்டு.

'வானி'ல் அமைதி நிலவுகிறது.

அமைதியைக் குலைத்துக் கொண்டே கந்தசாமி பேசுகிறான்.

''மணியம்! இந்தா ஒன்றை எடு'' சிகரெட் பைக்கற் ஒன்றை நீட்டுகிறான் கந்தசாமி. மணியம் வாங்க மறுக்கிறான். கனகேஸ்வரி மணியத்தை நோக்குகிறாள். மணியம் அழகான முகவெட்டுடையவன். நல்ல சிவலை. உரோமம் இல்லாத பட்டுக் கன்னம். நன்றாக ஒட்டவெட்டிய பொலிஸ் 'குறோப்'. மணியம் எப்பொழுதும் வெனியனும் சாரமும் தான் அணிந்திருப்பான்.

''பறவாயில்லை... எடு...'' கந்தசாமியின் குரலில் நளினம் ததும்புகிறது. ''வேண்டாம்''— மணியம் வெறுப்பை முகபாவனையில் வெளிப்படுத்துகிறான்.

''குடிக்கும் தொகை இன்று கூடியிருப்பதற்குக் காரணம் சிநேகிதர்களும் கூடியிருப்பவர்களும்தான்'' என்று சிமிட்டிக்கொண்டே கனகேஸ்வரி கூறுகிறாள்.

சிரித்தலைப் போன்று சிமிட்டலும் உணர்ச்சியை எடுத்துரைக்கும் கருவியாகக் கனகேஸ்வரி பாவிப்பாள். கந்தசாமி ஏதோ சொல்ல வாயெடுத்தான். ஆனால் சொல்லவில்லை. கந்தசாமியும் சாரதியும் ஏதோ குசுகுசுத்தனர்.

'வான்' யாழ்ப்பாண டவுனைத் தாண்டி வேம்படி மகளிர் பாடசாலையை நோக்கிச் செல்கிறது.

கந்தசாமிக்குக் கனகேஸ்வரியின் வீடு ஒரு மைலுக்கு அப்பால் இருந்தபோதிலும், அவளது வாழ்வில் நடைபெறுவதெல்லாம் தெரியும். அதை அறிவதில்கூட அவனுக்கு ஒரு வித ஆவல்.

மணியம் புகைப்பதுண்டு. கனகேஸ்வரியின் முன் அவன் புகைப்பதில்லை. அவளிடம் மணியத்துக்கு ஏனோ ஒருவித

மரியாதை. சில சமயங்களில் எல்லோரும் ஒருபக்கமாக நின்று மணியத்தைக் கேலி செய்வார்கள். ஆனல் அவள் மட்டும் அவன் பக்கம் நிற்பாள்.

கனகேஸ்வரியை ''அக்கா! அக்கா!'' என்று குழைவாக அன்புடன் அழைப்பான்.

வான் வேம்படி மகளிர் பாடசாலையை அடைந்து விட்டது. மணியம் கதவைத் திறக்கிருன். கனகேஸ்வரி இறங்கி நடக்கிருள். கனகேஸ்வரியின் உருவம் மறையும்வரை அவளேயே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் மணியம்.

வேலையால் வீடு திரும்பும் தந்தையிடம் வீட்டில் நடைபெற்றதை மதலை மொழியில் பேசத் தவிக்கும் குழந்தையைப்போல் எப்பொழுது கனகேஸ்வரி போவாள் மணியத்தைக் கிண்டல் செய்ய எனத் தவித்த கந்தசாமி, ''மணியம், எத்தனை நாளேக்குத் தாய்ச் சோறும் தனிப்படுக்கையுமாக இருக்கிறது...... மணியம் 'றை' பண்ணு. அக்கா உன்னிலே நல்ல அணைவாக இருக்கு. வாய்ச்சாலும் வாய்க்கும்......''

''கிளாக்கர் ஐயா! உங்கடை வாயிலே புற்றெல்லோ எழும்பப் போகுது.....? சகோதரி மாதிரிப் பிழங்கிற அக்காவை ... ''

''அக்கா, தங்கை எண்டுதான் ஆரம்பிக்கிறது. எனக்கு எத்தனை பேரத் தெரியும். உந்தப் பூனையும் பால் குடிக்குமோ என்றிருந்த ஆட்களெல்லாம்......'' எனச் சொல்லிக் கொண்டே சாரதி பீடா வெற்றிலை ஒன்றை வாய்க்குள் செலுத்துகிருன்.

''சரியாகச் சொன்னுய் றைவர் '' என்ருன் கந்தசாமி சிரிப்புடன்.

''தம்பி! இப்ப இறங்கின பெடிச்சி யார்?'' என்ருர் சமீபத்தில் கச்சேரிக்கு மாற்றப்பட்ட கிளாக்கர் ஒருவர்.

''இவள் பாருங்கோ புலோலியிலேதான் இருக்கிறவள்—'கிராட் யூ வேற்' — பட்டதாரி. வேம்படியிலே படிப்பிக்கிருள். இருபத்தொன்பது முப்பது வயதிருக்கும். நல்ல சாதி தான். ஆனுல், இன்னும் கலியாணமாகவில்லை. சொந்த மச்சான்கூடக் கலியாணம் செய்ய மறுத்து விட்டான்.''

''ஏன் பெடிச்சி ஏதாவது நடத்தை பிழையோ?''

''தெரியாதே இந்தக் காலத்து கொழும்பு கண்டிக்குப் படிக்கப் போற பெட்டைகளைப் பற்றி'' என்ருர் ஒருவர்.

''அப்படி ஒன்றுமில்லை. தகப்பன் செத்துப் போனுர். குடும்பப் பொறுப்பெல்லாம் அவளோடுதான். மச்சான் காரப் பொடியன் இருபதினுயிரம் கேட்டிருக்க வேணும். மன சார இவையெட்ட எங்காலே காசு? பொடியன் நல்ல சொத்துள்ள இடத்திலே முடித்துவிட்டான்.''

மணியத்தின் இமைகள் சிந்தனையின் பிரதிபலிப்பாகச் சிறகடிக்கின்றன. முகத்தில் சோக ரேகைகள் படர்கின்றன. அவன் பெருமூச்சொன்றை மெல்ல உதிர்க்கிருன்.

' இப்பத்தைப் பெடியள் எவ்வளவு சீதனம் வாங்குதுகள்? நாலு பெம்பிளைப் பிள்ளை பிறந்தால் அதைத்தானே பங்கு போடவேணும்?'' என்ருர் 'சீவ் கிளார்க்'.

''ஏன் நீர் காணும் அந்நேரம் விட்டனீரோ?'' என்ருர் அருகில் இருந்தவர்.

எல்லோரும் சிரிக்கின்றனர். 'வான்' கச்சேரியை அடைகிறது.

\+ \+ \+

மாம்பழவள்ளி பருத்தித்துறைச் சந்தையிலே சுறு சுறுப்புடன் கடை பரப்பிக்கொண்டிருக்கிருள். பலரக மாம்பழங்களால் கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது.

நெஞ்சின் பெரும்பரப்பு பிறந்த மேனியாக இருக்க, மார்பகங்களை மறைத்துக் கட்டியிருந்த குறுக்குச் சேலையை அவிழ்த்து இறுக்கி வரிந்து கட்டிக்கொண்டு அன்றைய வியாபாரத்தை ஆரம்பிக்கிறாள்.

தூரத்திலே பிரம்புக் கூடையுடன் வருபவன் மாம்பழத்தைத் தேடித்தான் வருகிறான் என்பதை நோட்டமிட்டு, "இராசா! எதுவேணும்? கறுத்தக் கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், பாண்டி, களைகட்டி, அலரி, கிளிமூக்கன்... இந்தா மோனை கறுத்தக் கொழும்பான் மலிவாத் தாறன். ஒரு துண்டைத் திண்டுபார். விடியக்காலத்தாலை முன்னம் முன்னம் கைவியளமாய் ஆம்பிளைப்புள்ளைக்கு..." என்று சொல்லிக் கொண்டே மாம்பழத்தை அவனது கூடைக்குள் போட்டுவிட்டு லாவகமாக விலையைக் கூறுகிறாள்.

மாம்பழவள்ளி என்ற பெயர் அவளுக்கு வியாபாரம் செய்யத் தொடங்கிய பின்புதான் கிடைத்தது. பருத்தித்துறைச் சந்தையில் மாம்பழ வியாபாரத்தின் ஏகபோக உரிமை அவளுக்கென்றே சொல்லலாம். கடந்த பதினைந்தாண்டுகளாக வியாபாரம் செய்கிறாள்.

மாம்பழவள்ளி வியாபாரத்தில் 'கட்டியடிக்கும்' அநியாயம் என்றும் இல்லை. ஆனால் 'கையைக் கடிக்கும்படி' கொள் விலையிலும் குறைத்துக் கேட்டுவிட்டால் அவளுக்குக் கோபம் வந்தால் பார்க்கவும் வேண்டுமா? அகராதியில் இல்லாதவற்றையெல்லாம் அடுக்கடுக்காகப் பேசி 'வாய்க்காறி'யாகி விடுவாள்.

சந்தையில் வியாபாரம் செய்துதான் அவள் கணவன் ஈட்டிலை விட்டிட்டுப் போன வீடு வளவை மீட்டாள். இரண்டறையில் சின்னக் கல்வீடும் கட்டிவிட்டாள், அக்கைம் பெண்.

வீடு கட்டக் கடன் கொஞ்சம் செல்லத்துரையிடம் பன்னிரண்டு வீத வட்டிக்கெடுத்தாள். அத்துடன், 'சின்னத்தம்பியாற்றை' மகளுக்கு வள்ளியின் மகளுடைய சங்கிலி அடகு.

மாம்பழவள்ளிக்கு வாழ்விலே ஒரேயொரு ஆவல். தனது ஒரேயொரு மகள் செல்லம்மாவை நல்ல இடத்திலே கலியாணம் செய்து வைத்துச் சீரும் சிறப்புடனும் பார்க்க வேண்டுமென்பதுவே அது.

ஒரு சின்ன உத்தியோகத்தனுக்காவது செல்லம்மாவைக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை அவள் உள்ளத்திலே ஒளித்திருந்தது. உத்தியோக மாப்பிள்ளையை எங்கு எடுக்கப் போகிறுள் மாம்பழவள்ளி? 'சுவீப் ரிக்கற்' போல ரொக்கப் பணம் ஆயிரக்கணக்காகக் கேட்கும் உத்தியோகத்தருக்குக் கொடுக்கப் பணம் அவளிடம் எங்கு இருக்கிறது?

'யாரும் கடைகண்ணியிலே உள்ள பெடியனைத்தான் பாக்க வேணும்' என்று முடிவுகட்டிக்கொண்டிருக்கும்பொழுதுதான், செல்லத்துரை மாம்பழவள்ளியைச் சந்தித்தது. வாட்டம் வடிவெடுத்து நின்ற மாம்பழவள்ளியின் முகத்திலே குதூகலம் குடிகொண்டது.

ஊரில் பெரும் கையாக மதிக்கப்படும் செல்லத்துரைக்குப் பெண் கொடுப்பதென்ருல் கொடுத்து வைக்க வேண்டுமல்லவா? வெள்ளை வேட்டி கட்டி பட்டுச் சால்வை போட்டு, கழுத்திலே தங்கச் சங்கிலி மின்ன, கம்பீரமாகச் செல்லத்துரை நடந்து செல்வதைக் கண்டால் அவனுக்கு முப்பத்தியாறு வயதிருக்கும் என்பதை யாரும் இலகுவில் நம்பமாட்டார்கள்.

செல்லத்துரை சாரதியாக இருந்தகாலத்தில் மாம்பழவள்ளியோடு கூடவே அவள் மகள் செல்லம்மாவும் வருவாள். செல்லத்துரை செல்லம்மாவின் அழகை 'வான்' முன் கண்ணுடியின் ஊடாக நன்ருக ரசித்திருக்கிறுன். அள்ளிப் பருகியிருக்கிறுன்.

அப்பொழுது அவளுக்கு வயது பன்னிரண்டுதான் இருக்கும். வயதுக்கு மிஞ்சி அவளது உறுப்புக்கள் வளர்ந்திருந்தன. கட்டவிழ்த்து மணம் வீசப்போகும் அழகிய மலர் ஒன்றின் மோகம் ததும்பும் மொட்டாக அவள் அப்பொழுது இருந்தாள்.

செல்லம்மா செம்மாம்பழம் போலச் சிவப்பு. நல்ல முகவெட்டும் எடுப்பான மூக்கும்.

மாம்பழவள்ளியின் மகளை மணம் புரிவதற்கு செல்லத்துரை ஒரு நிபந்தனை விதித்தான். கடும் நிபந்தனைதான் அது.

''இரண்டுமாத காலத்துக்கு நான் உனது மகளை கலியாணம் செய்த கதையை யாருக்குமே சொல்லக்கூடாது. எனது வீட்டுக்காரருக்கும் தெரியக் கூடாது. இரண்டு மாதத்திற்குப் பிறகு கலியாணத்தையும் சீதனத்தையும் எழுதலாம். வீட்டுக்காரர் என் வழியில் வரக்கொஞ்சக் காலம் புடிக்கும். அதுதான்......''

செல்லத்துரை இரவு பத்து மணிக்குப் பிறகு ஊர் உறங்கும் வேளையிலே செல்லம்மாவிடம் வருவான்.

மாம்பழவள்ளிக்கு மகளின் வாழ்வு வேதனையைக் கொடுத்தது. ஓரளவு மறைவாகச் செல்லத்துரை மகளிடம் வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

செல்லம்மாவின் வாழ்வு ஒரு தாசி வாழ்வாகவே அவளுக்குப் பட்டது. ஊரறிய மகள் குடும்பமாக வாழ வேண்டும் என்று அந்தத் தாயுள்ளம் விரும்பியதில் வியப்பில்லை.

இரண்டு மாதங்கள் பறந்தோடிவிட்டன.

செல்லம்மாவுக்கு வீட்டுத்தூரமாகும் நாள் வந்து போயிற்று, அவள் 'கரிக்கோலம்' போட்டு ஒதுங்கியிருக்கவில்லை. 'இனிக்கலியாணத்தை ஊரறியச் செய்யச் சுணக்கக்கூடாது'

என்று நினைக்கும் பொழுது, கடந்த ஒருவார காலமாகச் செல்லத்துரை செல்லம்மாவிடம் வரவில்லை என்ற உண்மையும் புலப்படுகின்றது.

\+ \+ \+

''எங்கடை கந்தையற்றை செல்லத்துரைக்கு வேம்படியிலே படிப்பிக்கிற பொடிச்சியைச் சம்பந்தம் பேசி முடிவாப் போச்சாம்'' என்று யாரோ சந்தையில் கதைத்தது மாம்பழவள்ளிவின் காதுக்கெட்டியது. மாம்பழவள்ளிக்கு யாரோ கன்னத்தில் ஐந்துவிரல்கள்படிய ஓங்கி அடித்ததுபோல் இருந்தது.

அவள் சந்தை முடிந்ததும் செல்லத்துரையின் வீட்டுக்குப் போனாள். மாம்பழவள்ளி வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததும் சுடு சொற்களே அவளை வரவேற்றன.

''எடி வேசை! என்ரை மோனைக் கெடுக்கிறதற்கு வந்து விட்டியோ? போடி வெளியிலே. உன்னாலே நான் வெளியிலே கண் முழிக்க முடியாமல் இருக்கு. மாயமருந்து போட்டிட்டியோ?

'செல்லத்துரை மகளைக் கைவிட்டால்......'?

மாம்பழவள்ளியின் நெஞ்சு வேதனையால் வெடித்து விடும் போல் இருந்தது.

செல்லத்துரை ஏமாற்றிவிட்டால் பெண்ணாகப் பிறந்த அவள் என்ன செய்வாள்? யாரிடம் சொல்வாள்? நல்ல நிலையில் இருக்கும் பொழுது சொந்தம் பாராட்டிவிட்டு, நொந்து கெட்டுப் போகும் பொழுது மறந்து வாழ்கிறார்களே, அவளுக்குச் சொந்தம் என்று சொல்லக் கூடியவர்கள் சொந்தக்காரர்கள் இருந்தாலும் கூட இந்த விடயத்தில் அவர்கள் என்ன செய்ய முடியும்? செல்லத்துரையின் சொல்லில் நம்பிக்கை வைத்தல்லவா செல்லம்மாவை மாம்பழவள்ளி அவனுக்குக் கொடுத்தது. நம்பிக்கைத் துரோகம்

செய்து விட்டால், அவளால் என்ன செய்ய முடியும்? கலியாண எழுத்து இருந்தால் கோட்டுக்காவது இழுக்கலாம்.

செல்லத்துரை வீட்டால் வந்து ''சுகமில்லை'' என்று மகளுக்குச் சொல்லி விட்டுக் கிடந்து விட்டாள் மாம்பழவள்ளி.

மகளுக்கு அவள் ஒன்றுமே சொல்லவில்லை. அவளுக்கு நெஞ்சு பெருவலி எடுக்கிறது. சென்றவருட மாம்பழக் காலத்திலே சில நாளாய் சுகவீனமாகப் பாயிலே கிடந்தாள். அப்பொழுது கூட இவ்வளவு வேதனைப்பட்டிருக்க மாட்டாள்.

''ஆத்தை!, என்னணை செய்யுது? இந்தாணை எப்பன் தேத்தண்ணியைக் குடித்துப் பார் எணை'' தேநீரைச் சிரட்டைக்குள் கொண்டு கையில் சீனியுடன் செல்லம்மா வருகிருள்.

நிலவு உச்சிக்கு வந்து விட்டது. எங்கிருந்தோ சாமக் கோழி கூவுகிறது.

ஓர் உருவம் தகரப் படலையைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் புகுகிறது.

மாம்பழவள்ளிக்கு நித்திரையில்லை. நிம்மதியற்ற உள்ளத்திலே நித்திரைக்கு இடமேது?

''யார் அது?''

''நான்தான் செல்லத்துரை''

''பிள்ளையை எழுப்பட்டே?''

''வேண்டாம். சுகமில்லாதவளை எழுப்ப வேண்டாம்.''

இப்பதிலில் இருந்து தனது மகளைக் கைவிட்டு விட்டான் செல்லத்துரை என்று எண்ணினுள் மாம்பழவள்ளி.

''எட, தம்பி! நீ இப்படிச் செய்வாய் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. நான் நம்பி எல்லொ பிழை மோசம் போட்டன்'' ஒப்பாரி ராகத்தில் அலறுகிருள் மாம்பழவள்ளி.

''ஆச்சி! மெல்லமாகக் கதையெணை. நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நாளைக்கு மணியத்துக்கும் செல்லம் மாவுக்கும் கச்சேரியில் கலியாணத்தை எழுதுவம்.''

''என்ன?''

மாம்பழவள்ளி பாம்பை மிதித்தவள்போல் திடுக்குறு கிருள்.

நிலவு வெளிச்சத்தில் மாம்பழவள்ளியின் சுருக்கு நிறைந்த முகத்தை உற்றுப் பார்க்கிறுன் செல்லத்துரை.

''ஆச்சி உண்மையைச் சொல்லிறன். நான் செல்லம் மாவை 'வைப்பு' ஆக வைத்திருக்கவே முதல் யோசித்தன். ஆனுல் தங்கமான குணமுடைய செல்லம்மாவைத் தாசி என்று உலகம் தூற்றவிட நான் விரும்பவில்லை. அத்தோடு செல்லம்மா குடும்பமாக வாழவேண்டுமென்ற உனது ஆசை யையும் நான் கெடுக்கவில்லை. அதுதான் குறுக்கு வழியில் இறங்கினனுன்.''

மாம்பழவள்ளியின் வேதனையடைந்த நெஞ்சைப் பிளந்து கொண்டு பெருமூச்சு வெளிவருகின்றது.

''நான் செய்தது குற்றம்தான் ஆச்சி. நான் செல்லம் மாவைக் கைவிட்டிட்டு ஓடவில்லை. அவளுக்குக் கலியாணம் செய்து வைக்கிறது நான் எல்லோ, உண்ணுணை ஆச்சி காலத்தாலை சாப்பிட்ட சாப்பாடுதான். இது விஷயமாகத் தான் ஓடித்திரியிறன். நான் கட்டிப்போடுவன். வீட்டிலை ஒருவருக்குமே விருப்பமில்லை. அப்படியென்ருல் உற்ருர்

பெற்ருேர் எல்லாரையும் மறக்கவேணும். அத்தோடை நாலு விஷயம் தெரிந்த நாலு பேரோடை நானும் மனிசஞக உலாவ முடியாது.''

செல்லத்துரையின் பேச்சில் தெளிவு இருக்கிறது. அவனது உள்ளக்கிடக்கு பேச்சில் எதிரொலிக்கிறது.

''என்ரை 'வானி'ல் வேலை செய்யிற பெடியன் மணியம் கரவெட்டியில் நல்ல சாதியில் பிறந்தவன், தாய் சின்ன வயதிலை செத்துப் போனுள். தேப்பன் இரண்டாந் தாரம் கட்டிப் போட்டார். தேப்பன் என்னேடை விட்டிருக்கிருர். அருமையான பெடியன். நான் சொன்னுல் கேட்பான். நீ ஒன்றுக்கும் பயப்படாதை. மணியம் நல்ல வடிவாய் குடும்பம் நடத்துவான்''

மாம்பழவள்ளி எதையோ வெறிச்சென்று பார்க்கிருள். என்னத்தையோ யோசிக்கிருள்.

''ஆச்சி! நீ ஒன்றையும் யோசியாதை. செல்லம்மா இதை ஒத்துக்கொள்வாள் ஆச்சி! நீ எனக்குத் தரவேண்டிய காசைத் தரவேண்டாம் செல்லம்மாவுடைய சங்கிலியை அடைவு எடு. செல்லம்மா பின்னுக்கு அவள் மனம்போல் நல்லாய் இருப்பாள்''

ஏனே செல்லத்துரையின் கண்கள் கலங்குகின்றன.
சில நிமிடங்கள் இருவரும் கதைக்கவில்லை. அமைதி நிலவுகின்றது.

செல்லத்துரை எதையோ சொல்ல நினைக்கிருன். எப்படிச் சொல்வது என்று அவனுக்கே புரியவில்லை.

இறுதியில் இரகசியமாக மாம்பழவள்ளிக்குச் செல்லத்துரை ஏதோ சொல்கிருன்.

''சரி, அப்ப நான் வாறன். இந்தா இப்போதையச் செலவுக்கு இதை வைத்துக் கொள். நாளைக்குக் காலமை

ஓம்பது மணிக்கு தனிக் காரிலை கச்சேரிக்கு வாருங்கோ''

செல்லத்துரை நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டுகிறான்.

\+ + +

மறுநாட்காலை கச்சேரியில் மணியத்திற்கும் செல்லம்மாவுக்கும் கலியாண எழுத்து நடந்தது.

செல்லத்துரை சாட்சியாகக் கையெழுத்திட்டான்.

அன்று இரவு பத்து மணி இருக்கும் எங்கும் நிசப்தம் நிலவிக்கொண்டிருக்கிறது.

மந்திகைச் சந்தியில் மணியத்தை இறக்கிவிட்டுச் செல்லத்துரையின் கார் செல்கிறது.

மந்திகைச் சந்தியில் இறங்கி 'பெற்றோல் செட்' அடியில் நிற்கிறான் மணியம். மந்திகைச் சந்தி மணியத்துக்கு எப்பொழுதும் வெள்ளை 'சூட்'டுடன் வரும் கந்தசாமியை நினைவூட்டுகிறது.

கந்தசாமி தன்னையும் கனகேஸ்வரி அக்காவையும் இணைத்துக் கதைப்பதை எண்ணிப்பார்க்கிறான் மணியம்.

கனகேஸ்வரியின் முகம் மணியத்தின் மனக்கண் முன் வருகிறது.

புதுவாழ்வு வாழப்போகும் கனகேஸ்வரி அக்கா மணப் பெண்ணாக நாணிக்கோணி முதலாளி செல்லத்துரையின் அருகில் நிற்கப் போகும் மணக்கோலத்தை மணியத்தின் நெஞ்சம் நினைக்கின்றது.

''வாருங்கோவன்'' என்று கூறி மாம்பழவள்ளி மணியத்தைக் கூட்டிக்கொண்டு செல்கிறாள்.

மணியன் பெண்பிள்ளை வீட்டுக்குப் போகிறான். கொட்டு மேளம் இல்லை. கூட்டம் கூட்டமாக ஆட்கள் செல்லும்

ஊர்வலமில்லை. அமைதியைக் கெடுக்கும் ஒலி பெருக்கி இல்லை. காசைக் கரியாக்கும் வாண வேடிக்கைகள் இல்லை. மாமியார் முன் செல்ல, மருமகன் பின் செல்லுகிறான்.

மணியம் ஒரு கல்லில் இரண்டு மாங்காய் விழுத்தப் போகிறான். கலியாணம் செய்தவுடன் கார் ஓட்டப் பழக்குவதாக முதலாளி உறுதியளித்து விட்டார்.

மணியத்துக்கு இனித் தாய்ச் சோறுமில்லை; தனிப்படுக்கையுமில்லை. இதோ!, வீடும் வந்துவிட்டது. தகரப்படலையைத் திறந்து கொண்டு மணியம் வீட்டிற்குச் செல்கின்றான்.

மாம்பழவள்ளி அறைக்குள் சென்று பைக்குள் ஏதோ எடுத்து வைக்கிறாள். அவள் நெஞ்சு படபடக்கிறது. வெளி விருந்தைக்குப் பையுடன் வந்து, அந்தச் சின்ன மேசைக்கு முன்னால் நிற்கிறாள்.

உருப்போட்டு வைத்ததைத் தொடர்ந்து தட்டுத்தடுமாறி ஒப்புவிக்கும் மாணவனைப் போல சொல்லுகிறாள். குரல் தடுமாறுகிறது.

"இதை முதலாளி உங்களுக்குக் கொடுக்கச் சொன்னார்"

வெள்ளைச் சாராயப் போத்தலுள்ள அந்தப் பையை மேசையில் வைக்கிறாள். அந்த அவசரத்தில் மேசையிலிருந்த ஒன்று கீழே விழுந்து உருளுகின்றது.

"செல்லம்மா ஆசையாகச் சாப்பிட எடுத்து வைத்த மாம்பழம். ரெண்டு நாளாய்ப் போச்சுது" என்று மாம்பழவள்ளி சொல்லுகிறாள்.

யன்னலோரம் நின்ற செல்லம்மா, உருண்டோடும் அந்த அணில் கோந்திய நல்ல ரக மாம்பழத்தைத் தன் மருண்ட விழிகளாற் பார்த்தபடி நிற்கிறாள்.

---

**[1961-ம் ஆண்டு 'இலக்கிய ரசிகர் குழு' நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற் பாராட்டுப்பரிசு பெற்ற கதை]**

# அக்கா!
# ஏன் அழுகிருய்?

''புள்ளோய்!''

''.......... ''

''புள்ளே! தங்கம்!''

''ஓ ! நீங்களோ? இஞ்சாலே வாருங்கோவன் மாமி. இந்தக் கட்டிலிலே இருங்கோவன். நான் கையிலே அலுவலாய் நிண்டனுன்...'' என்று கூறிக்கொண்டே கையையும் முகத்தையும் முன்ருனைத் தலைப்பால் துடைத்து, சேலையைச் சரி செய்த வண்ணம் தங்கம் வருகிருள்.

''புள்ளே! வாற புதன்கிழமை உதயத்துக்கு நாள் உங்களுக்கெல்லாம் சொல்ல வேணுமே? பெடி பெட்டைகளைக் கூட்டிக்கொண்டு செவ்வாய்க்கிழமை வந்திடுங்கோ. நாங்கள் குடிக்கு ஒருதருக்குச் சொல்லி, மெத்த மட்டாத்தான் செய்யிறம்.''

சிறிது நேரம் மெளனம் நிலவுகிறது.

வள்ளிப்பிள்ளை மாமிக்குப் பக்கத்திலே ஆண்கள் பிரதிநிதியாகச் சென்ற பொடியனும் மெளனமாக நிற்கிருன்.

மீண்டும் வள்ளிப்பிள்ளை மாமியே பேசுகிருள்.

''புள்ளே! அண்ணர் எங்கை?''

''அப்பு வெளியிலே போட்டார் மாமி!''

''அண்ணனெட்டைச் சொல்லிவிடு பிள்ளை; பந்தல் போட 'ஒருக்கால்' வந்து உதவி செய்யச் சொல்லி. பந்தல் போடத் தனியவந்து சொல்லேல்லை எண்டு அண்ணன் குறை நினைக்குதோ தெரியாது...? எங்கை புள்ளை... தனிய அவரும் ஒரு கையாலை எல்லாத்தையும் என்னெண்டு செய்யிறது..?''

''கமலா! பெத்தாத்தைக்கு வெத்திலைத் தட்டைக் கொண்டுவந்து குடு'' —என்று மகளைத் தங்கம் அழைக்கிருள்.

''வேண்டாம் புள்ளை, எல்லா வீட்டிலையும் தந்து வாய் முழுக்க வெத்திலைதானே! சரி, வெய்யில் ஏறுது, வரப்போறன்; தங்கம்! செவ்வாய்க்கிழமையே வந்து 'நாலஞ்சு' காய் பிஞ்சு அரிஞ்சு, அதுகளைக் 'கூட ஆடப்' பாக்கவேணும். இண்டைக்-கும் 'ஒருக்கால்' வாவன்; நாலஞ்சு பணியாரம் சுடப்போறம்.''

தங்கம் எல்லாவற்றுக்கும் தலையை ஆட்டுகிருள்.

''சரி வாறன் தங்கம்''

''வாஙுங்கோவன் மாமி''

'ஒன்றுவிட்ட' அண்ணன் வீட்டுப் படலையைத் திறந்து வள்ளிப்பிள்ளை மாமி ஒழுங்கைக்கு வந்துவிடுகிருள்.

அடுத்த வீடு..? மாமியின் கூடப்பிறந்த அண்ணன் வீடு.

வீட்டிலிருந்து காவோலையால் அடைக்கப்பட்ட வேலியி னூடாக மாமியின் அண்ணன் மகளான பார்வதி அயல் வீட்டில் நடப்பதைப் பார்த்த வண்ணம் நிற்கிருள்.

கொழும்பிலிருந்து மகன் கொண்டு வந்திருக்க வேண்டும், விலை உயர்ந்த நல்ல ரகச் சேலை - அது 'சரசரக்க, காதிலே 'கடுக்கன்' தூங்க, கையிலே ஒரு சிறு ஓலைக் கைப் பெட்டி யுடன், பொடியன் பின் தொடர, தங்கம் வீட்டுப் படலை யைத் திறந்து மாமி ஒழுங்கைக்கு வந்து கொண்டிருப்ப தைக் கண்டவுடன் பார்வதிக்குப் புரிந்துவிட்டது விஷயம்.

'வீட்டை வந்தால் எப்படி வரவேற்பது!' என்கிற தவிப்பில் அவளது விழிகள் மலேக்கின்றன.

உள்ளத்தையும் உடலேயும் இனம்புரியாத ஒரு நடுக்கம் பற்றிக் கொள்கிறது.

ஆனல்...?

வள்ளிப்பிள்ளே மாமி வீட்டுக்கு வரவில்லே. வீட்டுப் பக்கமே திரும்பிப் பார்க்காது, முகத்தை ஒழுங்கைக்கு நேராக வைத்துக்கொண்டு நிதானமாகவே அவ் வீட்டைத் தாண்டிச் செல்கிருள்.

மாமி ஏன் தமையன் வீட்டுக்குப் போகப் போகிருள்? 'கலியாண எழுத்துக்குச் சொல்லி ஒரு பொடியனேயும் அனுப்பி வைக்காமல் விட்டவை யெல்லோ?' என்ற அசல் காரணம் இருக்கவே இருக்கிறதே!

பார்வதிக்கு நெஞ்சிலே ஏறியிருந்த முள் ஏற்பு வலியை உண்டாக்குகிறது.

உரலிலிருந்த அரிசியைப் பார்வதி குற்றிக் கொண்டே இருக்கிருள்.

உலக்கையால் இடிக்கப்படும் உரல் அரிசியைப்போல் அவளது உள்ளம் வேதனேயால் இடிக்கப்படுகிறது.

மாமி மகன் செல்லத்தம்பியின் கைப்பிடிக்கப் போகிறவள் வேறுயாராவதாக இருந்தால் பார்வதி இவ்வளவு வேதனேப்பட்டிருக்க மாட்டாள்.

'மல்லிகா...!'

இளவயது நினேவுகள் உயிர்பெறுகின்றன.

மல்லிகா பார்வதியுடன் தமிழ் ஆரம்பப் பாடசாலேயில் கூடப் படித்தவள். மூன்ரும் வகுப்பாகத்தான் இருக்கவேண்டும். அப்பொழுதுதானே கார்த்திகேசு வாத்தியார் அவளேப் படிப்பித்தது.

ஒரு மாணவிக்குச் சோடியாக மச்சான் முறையில் யாரும் இருந்துவிட்டால் போதும், அம்மாணவியை அவன் பெயராலேயே அழைத்துப் 'பகிடி' பண்ணிச் சிரிப்பதில் அவருக்கு அலாதிப் பிரியம்.

பார்வதியைச் 'செல்லத்தம்பி' என்று அழைத்து அவளை நாணக்கோண வைப்பார் அவர்.

ஒரு நாள் பார்வதிக்கும் மல்லிகாவுக்கும் ஏதோ சண்டை வந்து விட்டது. மல்லிகா பார்வதியைச் 'செல்லத்தம்பி' என்று பழித்தாள். பார்வதி மல்லிகாவைக் 'கரிக்குருவி' என்று பழித்தாள்.

மல்லிகா நல்ல கறுப்பி. ஆகவே அவளுக்குச் சூட்டப் பட்ட பட்டம் 'கரிக்குருவி'

இருவருக்குள்ளும் வலுத்த சண்டையைக் கார்த்திகேசு வாத்தியாரின் பிரம்பே நிறுத்தியது.

பார்வதியின் உளவேதனையைச் சுமந்து கொண்டு, அவள் இதயத்திலிருந்து ஒரு பெருமுச்சு வெளிவருகின்றது.

'அப்பு இருந்தால்—?'

தந்தையை எண்ணி அவள் உள்ளம் தவியாய்த் தவிக்கிறது. அவரது முகம் அவள் மனக்கண்முன் வந்து நிற்கிறது. அந்த நாற்பது வயதிலே அவரது முகத்திலும், நெற்றியிலும் காணப்பட்ட சுருக்கங்களை மனவேதனையின் சுவடுகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

நாலு பெண் குழந்தைகளுக்குத் தந்தையான அவர் மூத்தவளை ஒரு மேசனிடம் ஒப்படைத்து விட்டு, பக்குவ வயதை நெருங்கிக் கொண்டிருந்த பார்வதியையும், சரசு, உமா ஆகிய சிறுமிகளையும் தவிக்க விட்டுப்போய் விட்டார். வேறு பணத்தையோ அல்லது சொத்தையோ அவர் வைத்து

விட்டுப் போகவில்லை. வாழும் பொழுதே வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவித்தார். அவர் இரவு பகலாய்ப் பண்படுத்திய 'நன்றிகெட்ட' புகையிலைத் தோட்டம் வருடா வருடம் அவரை ஏமாற்றியே வந்தது.

அவர் இறந்ததும், அவரது மனைவி தெய்வானை அப்பம் தோசை சுட்டு விற்று, நெல்லுக் குற்றிக் கொடுத்து, சந்தையிலே தேங்காய் வியாபாரம் செய்து, ஏதோ வாழ்க்கையை ஒரு விதமாக ஓட்டி வருகிறுள்.

இரண்டாவது மகள் பார்வதியைத் தங்கை வள்ளிப் பிள்ளையின் மகன் செல்லத்தம்பி மணம்புரிவான் என்ற நம்பிக்கை தெய்வானையின் கணவருக்கு இறுதிவரையும் இருந்தது. ஒரேயொரு தங்கை என்ற காரணத்தால், வள்ளிப்பிள்ளை மேல் அவருக்கு அளவற்ற பாசம்.

வள்ளிப்பிள்ளை மாமிக்கு நான்கு ஆண்பிள்ளைகள் நால்வரும் அரசாங்க உத்தியோகம். அவர்களில் கொழும்பில் 'கிளறிக்கல்' உத்தியோகம் பார்க்கும் இரண்டாவது மகன்தான் செல்லத்தம்பி.

தெய்வானை கணவரின் நம்பிக்கைமேல் நம்பிக்கை வைத்து, ஊரிலே நல்ல காரியம் என்ருல் முன்னுக்கு வந்து 'ஓடியாடி' அலுவல் பார்க்கும் 'நாலு விஷயம்' தெரிந்த 'பெரியவர்களைக்' கொண்டு கேட்டும் பார்த்தாள்.

என்ன என்னவோ காரணங்கள் சொன்ஞர்கள். 'தெய்வானை வாய்க்காறி, பார்வதிக்கு 'இங்கிலீசு' தெரியாது; பழக்க வழக்கம் சரியில்லை. என்னமாதிரிக் கொழும்பிலை கூட்டிக் கொண்டு போய் வச்சிருக்கிறது? படிச்ச நாலு பேருக்கு முன்ஞலை பிழங்கத் தெரியாது' எனப் பல காரணங்கள் கற்பிக்கப்பட்டன.

''அக்கா . ! அக்கா.. !!''

பார்வதியின் சிந்தனையைக் கலைத்துக்கொண்டே, மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, அவளின் இளைய தங்கை உமா ஓடிவருகிருள்.

''அக்கா! எங்களுக்கு மாமி அவை கலியாண வீட்டுக்குச் சொன்னவையோ?''

''இல்லை''

''சும்மா சொல்லுருய் அக்கா?''

''இல்லையெடி..'' — உரக்கச் சொல்கிருள்.

அவளது குரலில் வெறுப்பும் கோபமும் எதிரொலிக்கின்றன.

''ஏன் அக்கா சொல்லேல்லை? எங்களுக்கோ, கமலா அவைக்கோ மாமி அவை சொந்தங்கூட...? மாமி அப்பு-வோடை கூடப்பிறந்தவ. தங்கமக்காவுக்கு ஒண்டவிட்ட மாமிதானே...! என்ன அக்கா..? அவைக்குப் பணியாரம் சுடவும் சொன்னவவாம்.''

''எங்களிட்டைக் காசு இல்லையாம்''

''அவைக்குத் தெரியாது போலை: ஆத்தை பானைக்குள்ளை காசு போட்டு வைச்சிருக்கிரு. நான் அண்டைக்குச் சிலேட்டுப் பெஞ்சிலுக்கு இரண்டு சதம் எடுக்கத் திட்டினவ, ஏப்பைக் காம்பாலை அடிச்சவ.''

''அது அல்லடி உமா... பென்னம் பெரியவீடு, காணிபூமி, கனக்கக் காசு, நகை - நட்டு... அதுகள் இல்லையாம்''

''அப்படி எண்டால் அக்கா காசு இல்லாட்டால் சொந்-தங்கள் குறையுமோ..?''

''அது அப்படித்தானெடி!'' பார்வதி தங்கையின் கேள்விகளுக்கு முற்றுப்புள்ளியிட்டாள்.

## (2)

பங்குனிமாத வெய்யில் தகிக்கும் தணலாக எறிக்கிறது.

மல்லிகா - செல்லத்தம்பி திருமணம் வெகு சிறப்பாக நடந்தேறிவிட்டது.

அன்று சனிக்கிழமை. அயல் வீட்டிலே கமலாவுடன் விளையாடிவிட்டு, அடுக்களையை நோக்கி ஓடி வருகிருள் உமா. பார்வதியின் முகத்தைக் கண்கொட்டாமல் உற்றுப் பார்த்துப் புன்னகை பூக்கிருள்.

''அக்கா நல்ல சோக்காக் கிடக்கு!''

அந்திச் செவ்வானம் போன்ற முகம் சிவந்து, கன்னம் குழிய, மாதுளம்பழ வித்துப் போன்ற முத்துப் பல்வரிசையைக் காட்டிப் பார்வதி சிரிக்கிருள்.

பார்வதி அப்பொழுதுதான் காலை வேலைகளை எல்லாம் முடித்துக் குளித்துத் தலைவாரி, நெற்றியிலே திருநீறு பூசி மிகவும் அழகாக இருந்தாள்.

''தங்கம்மா சொன்னது சரிதான். எங்கைடை அக்கா நல்ல வடிவாய் இருக்கிரு''

''என்னடி உமா?'' — ஆச்சரியத்தால் பார்வதியின் கண்கள் அகல விரின்றன.

''தங்கம்மாவும் சீனி அப்புவும் கதைக்கினம், அக்கா! நீ நல்ல வடிவாம், கெட்டிக்காரியாம். செல்லத்தம்பி அத்தான்ரை பெண்சாதி சரியான கறிப்பியாம்.''

''..................''

''அக்கா அவை கதைக்கினம் 'பார்வதி பாவம்' எண்டு.

இண்டைக்கு மாப்பிளை-பெம்பிளை கால்மாறி வருகினமாம். பெம்பிளையை நான் பாக்கலாம் தானே?''

பார்வதி உமாவைப் பார்க்கவில்லை. எங்கோ முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிருள்.

''அக்கா! கமலா சொல்லுருள் வள்ளிப்பிள்ளை பெத்தாத்தை நல்லவவாம். கலியாண வீட்டிலே கனக்கப் பணியாரம் தந்தவவாம். இண்டைக்கும் வீட்டைக் கொண்டு வந்து கொடுத்தவவாம். எனக்கு தங்கம்க்கா அரியாரப் பணியாரம் தந்தவ. அக்கா! உனக்கும் இரண்டு கொண்டு வந்தனான்.''

பார்வதியின் கையிலே உமா பணியாரத்தை வைக் கிருள். பார்வதி கையை உதறுகிருள். பணியாரம் எரியும் நெருப்பிலே சிதறி விழுகிறது. உமா பார்வதியின் முகத்தை நோக்குகிருள். கண்களை முன்றானைத் தலைப்பால் பார்வதி துடைத்துக் கொண்டிருக்கிருள்.

''அக்கா! ஏன் அழுகிருய்?''

''..................''

''ஒண்டுமில்லை உமா! வெங்காயம் வெட்டினனான், அது தான் கண் எரியுது''

உமா நம்பிவிடுகிருள்.

அன்ெறெருநாள்.........!

அக்காவுக்கு உதவியாக வெங்காயத்தை அரிந்து கொடுத்து விட்டு, அவள் பட்டபாடு...அப்பாடா! மூன்று மணித்தியாலத்திற்குப் பிறகுதானே அவளுக்குக் கண் எரிவு மாறியது.

''அக்கா! கோபக் காறற்றை பணியாரத்தைத் தெரியாமல் வாங்கித் திண்டிட்டன். இனித் தின்னமாட்டன்.''

உமாவுக்குக் கையிலே இருந்த பணியாரம் இரும்பாகக் கனக்கிறது. வெறுப்புடன் வீசுகிருள். அது நெருப்பிலே விழுந்து பொசுங்குகிறது.

''அக்கா எனக்கு அரியாரப் பணியாரத்துக்கு ஆசையாய்க் கிடக்கு. ஒருநாளைக்குச் சுட்டுத் தாறியோ?''

உமாவின் முகத்திலே இனம்புரியாத மாற்றம் எற்படுகிறது. பட்டுக் கன்னங்களில் சிட்டுக் குருவியாகக் கண்கள் சிறகடிக்கின்றன.

தன் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட எதையோ எண்ணி ஏங்குகிறது அந்தப் பிஞ்சு உள்ளம்.

## (3)

சேவல்கள் கூவுகின்றன, குளிரும் கூதலும் நிறைந்த கொட்டும் பனி. ஏதோ சத்தம் முற்றத்திலே கேட்கிறது.

கையை மடித்துத் தலையணையாக வைத்துக் கூனிக் குறுகிப் படுத்திருந்த தெய்வானை பழஞ் சேலைப் போர்வையை விலக்கி, தலைமாட்டிலே கிடந்த நெருப்புப் பெட்டியைத் தடவி எடுத்து விளக்கை ஏற்றுகிருள்.

உயிர்த் துடிப்பற்ற அவள் வாழ்வு போல் எரிகிறது மைப்போத்தலில் உருவாகிய அந்தக் கைவிளக்கு.

மங்கிய அந்த ஒளியிலே தெய்வானை முற்றத்தைப் பார்க்கிருள். மகள் பார்வதி ஏதோ குற்றிக் கொண்டிருக்கிருள்.

''ஏன் மோனை இந்தப் பனிக்குள்ளை குத்துகிருய். விடிஞ்சாப்போலை குத்தலாம் தானே''

''இப்பத்தான் எணை ஆத்தை எழும்பினுன். கொஞ்சம் செல்ல விடியப் போகுதெணை''

ஆனுல் அவளோ சாமக்கோழி கூவமுன் எழுந்துவிட்டாள். எத்தனையோ நாட்களாகச் செய்ய நினைத்ததை இன்று செய்யப் போகிறேம் என்ற ஒரு துடிப்பு, ஊமை-உற்சாகம். வேண்டிய ஆயத்தங்களை யெல்லாம் செய்து விட்டுத்தான் நெல்லுக் குற்ற ஆரம்பித்தவள்.

தெய்வானை மறுபடியும் ஓலைப் பாயிலே கிடக்கிருள். அவளால் எழுந்திருக்க முடியவில்லை. ஓடியாடி ஓயாது உழைப்பதால் ஏற்பட்ட அலுப்புக்கு, ஓய்வுதேடி நிற்கிறது வயோதிபத்தை எட்டிப்பிடிக்கும் அவளது உடல். ஆனுல் அவளுக்கு என்றுதான் ஓய்வு கிடைக்கப் போகிறதோ?

மகளைப் பார்த்து வேதனையாகப் பெருமூச்சு ஒன்றை விடுகிருள்.

'பக்குவப்பட்டு பத்து வருஷமாய்ப் போச்சு, கண் கெட்ட கடவுள் இப்பவும் உரல் இடிக்க எழுதிப் போட்-டான்? — அவளது கண்கள் குளமாகின்றன.

''ஆத்தை! விடியப் போகுது எணை எழும்பணை. அடுப்-பிலை தேத்தண்ணி வாத்து வச்சிக்கிடக்கு 'யாழ்தேவி'க்குப் போற 'பஸ்ஸை'த் தப்பவிட்டால் சந்தைக்கு நேரத்துக்கு போகமாட்டாய்''

''புட்டளைப் பிள்ளையாரே ....''

தெய்வானையின் குரலில் வாழ்க்கைச் சுமை இழையோடுகிறது. பாயைவிட்டு அவள் கஷ்டத்துடன் எழும்புகிருள்.

உமாவின் ஆசையைப் பார்வதி இன்று நிறைவேற்றப் போகிருள். இதற்காக அவள் எத்தனை பாடுபட்டிருப்பாள்! எத்தனையோ நாட்கள் வாயை வயிற்றைக் கட்டியிருப்பாள்!!

எண்ணெய்ச் சட்டியை எடுத்து அடுப்பிலே வைத்துப் பணியாரம் சுடத் தொடங்கினுள்.

'விடியமுன் சுட்டுவிட வேண்டும்'

இளநீர் களவாடப்போன சிறுவர்களிடம் தோட்டக்-காரனை நினைக்கும் போது நிலவுமே ஒருவித பரபரப்பு-அது அவளைப்பற்றிக் கொள்கிறது.

நெஞ்சம் படபடக்கிறது. உடல் வியர்த்துக் கொட்டு கிறது.

விடிந்து விட்டது.

பார்வதி அப்பமும் தோசையும் சுட்டு, சரசு பாடசாலைக்குப் போகமுன் விற்கக் கொடுத்து விட்டாள்.

உமா எழுந்து காலைக் கடன்களைச் செய்துவிட்டு, அடுக்-களையை நோக்கி வருகிறுள்.

''உமா! உனக்கு அரியாரப் பணியாரம் சுட்டு வைச்-சிருக்கிறன். ஆத்தைக்குத் தெரியாது. தெரிஞ்சால் பேசுவா. சரசுக்கு அரிசி வாங்க வாற மனிசி தந்தது எண்டு சொல்-லுவம் ''

பார்வதி உமாமுன் பணியாரத்தை வைக்கிறுள்.

''அக்கா! உன்ரை கலியாண விட்டுக்கும் இப்படித் தானே பணியாரம் சுடுகிறது'' என்று சொல்லிக் கொண்டே ஓர் அரியாரப் பணியாரத்தை உமா எடுத்துக் கடிக்கிறுள்.

''..............''

''அக்கா சுட்டுத் தந்தது தங்கமக்கை அண்டைக்குத் தந்ததிலும் பார்க்க நல்ல சோக்காக் கிடக்கு. அக்காவின்ரை கலியாண வீட்டுக்கு மாமி அவைக்கும் அத்தான் அவைக்கும்

சொல்லக் கூடாது. அவை காசுக்காரராம். அவைக்குப் பெரிய நடப்பு. அவை காசுக்காரர் என்றால் எங்களுக் கென்ன?''

''—...—''

பார்வதி உமாமுன் இல்லை. குடத்தைத் தூக்கி இடுப் பிலே ஏந்திய வண்ணம் வெளியே போகிறாள்.

உமா சொல்வன அவளது காதுகளில் விழுகின்றன.

''அக்காவின்ரை கலியாண வீட்டுக்கு வாற ஆக்களுக்கு நான்தான் சந்தணமும் குங்குமமும் குடுப்பன். பன்னீர் தெளிப்பன். வெத்திலைத் தட்டு எடுத்துக் குடுப்பன். டும்... டும் பீபீ.. பீபீ...''

'டும் - டும்' யாரோ ஓங்கி நெஞ்சில் அடிப்பது போன்ற பிரமை பார்வதிக்கு ஏற்படுகிறது.

உமா சொல்லும் வார்த்தைகள் வெடிப்பு விழுந்த இசைத்தட்டின் கீதம் போல் பார்வதியின் காதுகளிலே மாறி மாறி ஒலிக்கின்றன.

''அக்கா கலியாண வீடு முடிய, கோயில் குளமெல்லாம் போவ. எங்கடை அக்கா நல்லவ. நான் சொன்னால் செய்வ. என்னையும் கோயில்களுக்குத் தன்னோடை கூட்டிக் கொண்டு போவ''

தேவையான தண்ணீர் இரண்டு வாளிகளிலும் நிரம்ப யிருக்க, பார்வதி ஏன் குடம் கொண்டு தண்ணீர் அள்ளக் கிணற்றடியை நோக்கிப் போகிறாள்?

''அக்கா ஏன் அழுகிறாய்?'' என்ற கேள்விக் கணையைத் தொடுத்து நிற்கும் உமாவுக்கு, அவள் கண்களிலிருந்து வழிந்தோடும் கண்ணீரைக் காட்டக் கூடாது என்பதற் காகவோ?

—1963

# மண்

''புள்ளோய்! எப்பன் தண்ணி கொண்டுவா மோனை''

குத்தகைப் பொன்னையாவின் குரல் கரகரத்து ஒலிக்கிறது.

மாசி மாதத்துப் பனி வெய்யிலின் அகோரத்தைப் பெருமூச்சுடன் ஊதித்தள்ளுகிறார். அப்பொழுது தான் தோட்டத்தால் வந்தவர், தலையைச் சுற்றியிருந்த துண்டைக் கழற்றி வெளி விருந்தைத் தூணுக்குத் தலை அணையாக வைத்து உடலைச் சரித்துக் கொள்ளுகின்றார்.

மாட்டுக்குத் தண்ணீர் வைத்துக் கொண்டிருக்கும் மகளின் மேல் அவர் பார்வை விழ, நெஞ்சம் கவலையில் ஆழ்கிறது.

அவரது முகத்திலும் நெற்றியிலும் ஓடியிருக்கும் வயோதிபத்தின் சுவடுகளை வரம்பாக்கி வேதனை பாய்கிறது.

'சீரும் சிறப்புமாக வாழ்கிற வயசு... இவளெண்டை தலையெழுத்து இப்படியாப் போச்சு'

தோட்டத்து ஆடுகால் நிழலில் சின்னத்தம்பியார் நளினமாகக் கேட்டவை குத்தகைப் பொன்னையாவின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ''கலியாண எழுத்துத் தள்ளவேணுமெண்டு மருமோன் பெடியன் ஒற்றைக் காலில் நிற்கிறானும்.''

இரண்டு வருடத்திற்குள் இப்படி நடக்குமென்று அவர் கனவிலும் எதிர்பார்க்கவில்லை.

'சொந்தத்துக்குள்ளே மருமோன் பெடியனைக் கட்டிக் குடுத்திருந்தாலும் ராசாத்திபோல என்ரை புள்ளை இருக்கும்'

'படுபாவி பரம்நாதன் என்னைக் கொண்டு போய் பாண் கிணத்துக்குள்ளே விழுத்திப் போட்டான்.'

மறுநாள் கலியாண எழுத்து. நிலவில் செம்பாட்டுத் தோட்டத்தில் புகையிலைக் கன்றுகளுக்குப் பாத்தி கட்டிக் கொண்டிருக்கும் பொழுது பரம்நாதன் அவரைத் தேடிவந்து செய்த 'கூத்து.'

'பத்தாயிரம் ரூபா எழுத்தண்டைக்கு வைக்காட்டால், உது சரிவராது எண்டு மாப்பிள்ளை குழப்புகிறார்.'

பொன்னையா பத்தாயிரம் புரட்ட இரவிரவாகப் பட்ட பாடு.

'அவன் நொத்தாரிசிட்டை நோட்டுக்கு வாங்கின காசு பத்தாயிரம் ரூபாவும் இந்தத் தையோடை எல்லை தப்பிப் போச்சு. மற்றவங்களெண்டால் இவ்வளவுக்குச் சித்தாரிச்சுக் கோட்டுக்கு இழுத்திருப்பாங்கள். நாங்கள் நாலுபேர் மதிக்க நாணயமான மனுஷராக உலாவினபடி-யால் தானே அவன் மனுஷன் விட்டிட்டிருக்கிறான்.'

சீதனமாக வந்த மண் வீட்டை இடித்துக் கல்வீடு கட்டத் தொடங்கும்பொழுது அவர் கையில் அதிகம் காசு இருக்கவில்லை. அந்த வருடம் விற்ற புகையிலைக் காசில்தான் அத்திவாரம் போட்டார்.

கீழ்க்கன்றுகள் முளை விடுவதற்குமுன், ஒரு 'பெம்பிளை'ப் பிள்ளை என்ற நினைப்பில், உழைப்பைக் காணிகளுக்குப் 'பாட்டிசம்' போடும் 'நுண்கலை'யில் கொட்டினார். சிறு

பங்குகளுக்காகப் பெரும் பணத்தைச் செலவு செய்து 'சுப்ரீம்' கோடுவரை போய் வந்திருக்கிறார்.

'என்னைப்போல தோட்டம் செய்தவை இந்த ஊரிலே ஆர்? எங்கடை தோட்ட வெளியிலே பலிக்கப் பொயிலைக் கண்டு செய்து, முதல் வெட்டி உலத்தி விக்கிறது நான் தானே. 'பொன்னையாண்ணை! என்ரை பொயிலையை ஒருக் கால் பாத்து வெட்டுங்கோ' எண்டு மடத்தடிப் பெடியங் கள் எத்தனை பேர் வீடு தேடி வந்திருப்பாங்கள். இண்டைக் கும் வருஷம் பிறந்தால் வண்டில்காரப் பெடியன் என்னெட் டைத்தானே கைவியளம் வாங்கிறது.'

பொன்னையாவுக்குக் 'குத்தகைக்காரன்' என்ற பெயர். இன்று நேற்று வந்ததல்ல. அவரது மூத்த மகள் பாக்கியம் பிறந்தவருஷமே இந்த 'விருது' அவருக்குக்கிடைத்துவிட்டது

புகையிலை உலர்த்துக் காலம் தொடங்கிவிட்டால் அவ ரது வீடு திருவிழாக்கோலம் பூண்டு விடும். குத்தகைக்குக் கொடுத்தவர்கள் அவருக்குச் 'சம்பளத்துக்கு' ஒத்தாசை செய்வார்கள். கந்தனின் கள்ளும் காத்தவராயன் கூத்துப் பாட்டும் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டும்.

பாக்கியம் பம்பரமாகச் சுழன்று எல்லோருக்கும் சமைத் துப் போடுவது தொடக்கம் புகையிலை வேலை வரையும் செய்யும் 'கயிட்டத்தைப்' பார்க்கும் பொன்னையா, 'எல் லாம் என்ரை மோளுக்குத்தானே இன்னும் எத்தனை நாளுக்கு இந்தக் கயிட்டம். நாளைக்கு உத்தியோக 'மாப்பிள்ளை'யைக் கட்டிக் கொழும்புக்குப் போய்விட்டால் அவள் 'சீமாட்டி' யெல்லோ என மனத்துள் சொல்லிக் கொள்வார்.

''அப்பு இந்தாணை தண்ணி''

இரண்டு கையாலும் வாங்கிய செம்புத் தண்ணீரை ஒரே முடறில் குடித்து விட்டு, செம்பைப் பாக்கியத்திடம் நீட்டியபொழுது ஏனோ அவர் கைகள் நடுங்கின.

'பாவம் பிறந்த வீட்டிலேதான் ஆறணிவு எண்டால், கட்டிக் கொடுத்தாய் போலையும் நாலு நாளுக்கு என்ரை புள்ளை ஆரிச்சுப் பூரிச்சு வாழக் குடுத்து வைக்கேல்லை'

நடந்து செல்லும் பாக்கியத்தில் கடந்த காலத்தைக் காண்கிறார் பொன்னையா.

அவளுக்கு மாப்பிள்ளை தேடும் படலம் ஆரம்பித்த பொழுதுதான் பரம்நாதன் அவரைச் சந்தித்தது.

''மாப்பிள்ளை நல்ல ஒழுக்கமான பெடியன், கச்சேரியில் கிளாக்கர் வேலை. வெட்டுக் கொத்தும் பிழையில்லை. நாலஞ்சு பேருக்குப் பெரியவனும்''

பரம்நாதனின் ஆசையால் உந்தப்பட்ட குத்தகைப் பொன்னையா நேரே சென்று மாப்பிள்ளையின் தாயாரையே கேட்டுவிட்டார். தகப்பன் இல்லாத காரணத்தால் சிறிய தகப்பன்மார்கள், மச்சான்மார்களின் சம்மதத்தைப் பெற அவர் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

எல்லாப் பொருத்தமும் பொருந்தி வரும்பொழுது சீத-னத்தில் சிக்கல் ஏற்பட்டது. உத்தியோக மாப்பிள்ளையை எடுக்க வேண்டுமென்ற அவசரத்தில் இளையதுகள் இரண்-டையும் எண்ணிப் பார்க்காது மனைவியின் சீதனத்தை அப்படியே 'தாரவார்த்துக்' கொடுத்துவிட்டார்.

பேர் போன பெரிய மேளம், இடைக்காட்டுச் சப்பறம், 'லையிற்-மெஷின்', வாண வேடிக்கைகள் இத்தியாதி சிறப்புடன் 'கார்ட்' அடித்துக் கொண்டாட்டம் மூன்று நாட்கள் வரை வைத்து, அந்தக் கிராமமே வாயிற் கையை வைக்கக் கூடிய அளவுக்கு, எந்தத் தோட்டக்காரனும் இதுவரை செய்யாத தனிச் சிறப்புடன் பாக்கியத்தின் திரு மணத்தைச் செய்து முடித்தார்.

'மோனே! நீ பாக்கியம் செய்தனி என்றெல்லோ எண்ணி யிருந்தன்'

கலியாணம் நடந்த வருஷம் கலியாண வீட்டுச் செல வுக்குக் கையிலே காசில்லாமல் இருந்த பொழுது, கொக்கு வில் வியாபாரி வந்து கைக்காசு கொடுத்துப் புகையிலே முழுவதையும் கட்டிக்கொண்டல்லோ போனான்.

''சூ சூ. ஹூய்.. ஹூய்... ஊரராவீட்டுக் கோழியெல்-லாம் நெல்லுக் குடிக்குது; எல்லாரும் வீட்டுக்குள்ளே படுத்-திருக்கிறியளே..? கறிக்கடையும் காத்தாப் பறக்குது. நாலஞ்சு சூடையை ஒரு கூறுக வைச்சுக் கொண்டு, அவள் கறிக்காறிச்சி முக்காறூவாச் சொல்ருள். ம் உலகமே தலை கீழாத்தானே கிடக்கு. கறிக்கடை முழுக்க ஆம்பிளைகள்தான் நிக்கிருங்கள்... சங்கக்கடையிலே நிக்கிற புதுப் பெடியன் சாமான் அளவெல்லாம் பெரிய அநியாயம் ''

மனைவி படலைக்குள் வரும் பொழுது சொல்லிக் கொண்டு வரும் வாசகங்களில் அவரது மனம் ஒன்ருது தங்கள் இரு-வரது முப்பதாண்டுச் செம்மையான இல்வாழ்வை எடை போடுகின்றது.

அவர்கள் வாழ்க்கையில் வாக்குவாதங்கள் எழுவதுண்டு. ஆனுல் அவை பிரச்சினைகளை அலசி ஆராய எழுவனவே யன்றி உள்ளன்பை எள்ளளவும் குறைக்கர்து.

அவர் குடித்திருக்கிருர் என்பதை அவள் எப்படித்தான் அறிவாளோ?

'மனுஷன் இண்டைக்கு எங்கையோ போட்டிருக்கிருர்.'

அவர் குடித்துவிட்டால் கூடாதவரல்ல. ஆனுல் செத்த பிரச்சினைகளுக்கு உயிர் கொடுப்பார்; மறந்துபோன சங்கதி களை நினைவு கூருவார். விருப்பு வெறுப்புகளை சரள நடை யில் சொல்லுவார்.

அளவு கடந்து விட்டால் அவளிடம் அவர் தப்ப முடியாது. அன்றைக்கு ஒன்றுமே பேச மாட்டாள். அடுத்த நாள் விடிந்ததும் நல்ல 'அரிச்சனை' நடக்கும்.

தலை குனிந்து நிற்பார் புகையிலைக் கன்றின் தலை இலை போல; பார்க்கப் பாவமாக இருக்கும்.

புகையிலை விற்றதும் கட்டுக்கட்டாகக் காசைக் கொண்டு வந்து அவளிடம் கொடுப்பார். வாழ்க்கைச் செலவுகளை எல்லாம் அவளே நடத்துவாள். அவர் அதில் தலையிடவே மாட்டார்.

தேவை வந்ததும் கேட்பார். வாழ்க்கையில் ஏற்படும் தேவைகளை எவ்வளவு சாதுரியமாக அவள் நிறைவேற்றுவாள்!

மூத்த மகள் பாக்கியம் வயிற்றில்..., அவர் சுமை சுகமாக இறங்க எடுத்த நேர்த்திக் கடன்கள்! தோட்டத்து இறைப் பால் வந்து சாத்திரியார் வீட்டுக்குச் சாதகத்துடன் போனது — பரிகாரியார் வீட்டுக்கு விடியப்பற நிலவோடை போய் வந்தது.

'என்ரை மோளைக் கன்னிப் புள்ளத்தாச்சி எண்டுகூட மனமிரங்காது அவன்கூட இருந்த ஏழாலை ஆக்களுக்கு முன்னலை செய்த சித்திரவதை'

கொழும்பால் வந்த பாக்கியம் பெற்ற தாய்க்குச் சொல்லி ஆறினள்.

''என்னடி! மாயங்குத்துருய், உங்கை ஒருதரும் பிள்ளைப் பெறேல்லையே? நீதான் கண்டறியாத பிள்ளைப் பெறப் போருய் ''

அவளுக்குத் தலை சுற்றும்; சத்தி வரும். இரவில் நித்திரை வராது. ஆனல் பகல் பதினொரு மணிக்கெல்லாம் அவனுக்குக் கந்தோருக்குச் சாப்பாடு கொடுத்தனுப்பி விடுவாள்.

அவள் ஆசையுடன் சில உணவுப் பொருள்களை விரும்புவாள். அவன் தேவையற்றது என அதனை ஒதுக்கித் தள்ளுவான். இது மட்டுமா? அவன் கந்தோரால் நேரம் கழித்துத் தான் வருவான்.

''மெய்யப்பா! இவ்வளவு நேரமும் எங்கை நிண்டிட்டு வாறியள். நான் தனிய இஞ்சை விசரி மாதிரி இருக்கிறன்''

''உன்ரை சிறப்பிலை உன்னோடைதான் எந்த நேரமும் இருக்க வேணுமே? ஆக்களுடன் 'சோஷலா'கப் பிழங்கத் தெரியாத பட்டிக்காடுகள். புது ஆக்களைக் கண்டால் வெக்கப்படுறது. பொயிலைத் தோட்டத்துக்குள்ளை கிடந்ததுகளைக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு வந்தால்...! சும்மாவா சொன்னான், 'நாய்க்கு நடுக்கடலிலை போனாலும் நக்குத் தண்ணிதானும்' எண்டு.''

அவன் வாயில் மது மணக்கும். மதி மயக்கத்தில் யாரோ பெண்ணின் பெயரை அவன் வாய் அடிக்கடி உச்சரிக்கும்.

சீதனமாகக் கொடுத்த பத்தாயிரம் ரூபாவை வங்கியிலிருந்து எடுப்பதற்கு அவளது கையொப்பத்தை வாங்குவதற்காக அவன் எடுத்த பிரயத்தனங்கள்...

பாக்கியம் இவ்விடயத்தில் அறவே மறுத்து விட்டாள்.

''அப்பு மண்ணடிச்சு உழைச்ச காசு இது. ஒரு சதமும் வீணாகச் செலவு செய்ய என்ரை உயிர் போனாலும் விடன்.''

'சொந்த மருமோன் பாக்கியத்தைக் கட்டியிருந்தால் அடிபடாமல், குத்துப் படாமல், ஒத்துக் கஞ்சி குடித்திருக்குங்கள்''

'சின்னத்தம்பியார் என்னைத்தேடி வலிய வந்து கேட்க, ''இதை ஒரு கதையெண்டு கேக்கிறியே விட்டிட்டு வேறை என்னத்தையும் பேசுங்காணும்'' எண்டு பாவி நான் பகிடி

பண்ணியல்லோ விட்டனுன்.'

இன்றைக்கு ஊரிலை அவனுக்கு நடக்கும் நடப்பு. உண்மையைத்தான் கந்தன் கொட்டிலில் சொன்னுன்.

''கமக்காரனுக்கு நடந்த நடப்பு மருமோனுக்கு நடக்குது- இந்த முறையும் எங்கடை பக்கத்துப் பெடியளெண்டை பொயிலையெல்லாம் அவர்தான் வெட்டப் போகுதாம். அச்சவாரம் கொடுத்திட்டுதாம் இறைக்கிற மெஷினும் இரண்டு எடுத்துப் போட்டுதுபோலை. செம்மறி ஆட்டாலையும் நல்லை வரும்படியாம்.''

அவனும் 'பெண்டிலும்' பிள்ளையார் கோவில் திருவிழாவுக்குப் போன சங்கை.

வெள்ளை வேட்டிகட்டி, பட்டுச் சால்வையைத் தோளிலே தொங்க விட்டு, நிலத்திலே தழுவி நிற்கும் மதாளித்த புகையிலைக் கன்றின் தலை இலை போலப் பரந்து உழைத்து உரம் ஏறிய தசைநார்களால் பின்னப்பட்ட வைச்சிர நெஞ்சுடன் அந்த நெஞ்சுடன் கொஞ்சிக்கொண்டிருக்கும் வரம்பிலே வளர்ந்திருக்கும் அறுகம் புல் போன்ற உரோமத்துடன்...

'இண்டைக்கும் அவன் எனக்குச் செய்யும் மரியாதை.'

'போன மாசம் ஆஸ்பத்திரிச் சந்தியிலை, குழை வண்டிலுக்கு 'அம்மான் கேட்டுப் போட்டார்' என்று எதிர்விலை கேளாது ஒதுங்கினவனல்லோ. இறைப்புக் காலத்திலை எனக்குக் கிணறு விடுவதற்காக முன் நிலவிலும் பின் நிலவிலும் அவன் இறைப்பதைப் பேசிப் புகழாத தோட்டக்காரன் ஆர்?

'கட்டிக் கொடுத்த' மருமகன் அவருக்குச் செய்யும் மரியாதை!'

அன்றுதான் மகளும் மருமகனும் கொழும்பால் ஊருக்கு வந்திருந்தார்கள். வண்டில் கணக்காகப் பறிக்கப்பட்ட

குழைக்கட்டுகள் வீட்டு முன் வாசலில் கிடந்தன.

பாக்கியத்திற்குக் குழைக்கட்டுகளைக் கண்டவுடன் பரவச மாக இருந்தது. அவள் கணவனுக்கோ 'குழை நாற்றம்' ஏதோ செய்தது.

''நாளைக்குக் கொழும்பிலையிருந்து என்னோடை கூட வேலை செய்யிற ஒருவர் வாறார்... இதென்ன வீடோ அல்லது தோட்டமோ? வீட்டை ஒழுங்காக வைச்சிருக்காட்டால் கொப்பனை வீட்டை விட்டு வெளிக்கிடித்திப் போடுவன்... ஓ... நான் சொல்லிப் போட்டன்''

அன்றிரவே குழைக்கட்டுகளை அவ்விடத்தைவிட்டு அகற்றிவிட்டார் குத்தகைப் பொன்னையா.

மறுநாள் குத்தகைப் பொன்னையா களைத்து வேர்த்து, மண்வெட்டியைத் தோளிலே ஏந்தி, செம்மண் படிந்த நாலுமுழ வேட்டியைத் தொடைக்குமேல் தூக்கித் துண்டு போலக் கட்டி 'சம்பளகாரர்கள்' பின் தொடர வீட்டு வாச லைக் கடந்து உள்ளே போகும் பொழுது...

கொழும்புக்காரனும் மருமகனும் பேசுவது புரிந்தும் புரி யாமலும் அவர் காதுகளில் விழுகின்றது.

''யாப்பாணத்து ஜனங்கள் ரொம்ப 'பேசிவிரன்ஸ்' பாருங்க; இவ்வளவு ஆழமான கிணத்திலே தண்ணீர் எடுத் துப் பயிர் நாட்டி எவ்வளவு கஷ்டப்படுறாங்க... இப்ப போனது ஆர் பாருங்க?''

''கூலியாட்கள்.''

ஒதுங்கிச் செல்லும் குத்தகைப் பொன்னையாவை வீட் டுக்கு வெகு தூரத்தில் மாட்டுக்கொட்டிலில் உள்ள அவரது மாடுகள் எல்லாம் பெரும் குரல் கொடுத்து வரவேற்கின்றன.

''ம்மா...ம்மா...''

வேப்பமர நிழலில் கறி கழுவிக்கொண்டிருக்கும் மனைவியின் முகத்தைப் பார்த்ததும் குத்தகைப் பொன்னையாவுக்குப் புரிந்து விட்டது. 'மனுஷி எதையோ யோசிக்கிறாள்?'

அவள் அதிகம் மனதை அலட்டிக் கொள்வதை அவர் விரும்புவதில்லை. பேச்சுக் கொடுத்தால் அவள் மனதைத் தேற்றலாம் என்ற நப்பாசை குருத்து விடுகிறது.

''மெய்யப்பா இண்டைக்குப் பொழுது பட்டாலும் மண்டகப்படி பூசையாகாது போலை கிடக்கு''

''நாங்கள் என்ன உத்தியோககாரரே பன்னிரண்டு மணிக்கு மேசைச் சாப்பாடு சாப்பிட.''

கெட்டு ஒடிக்கப் போய் இலை ஒடிந்துவிட்டது.

மேலும் அவளது உள்ளத்தைக் கிளற விரும்பாத அவரது மனம் சிந்தனைப் பாத்திக்குள் பாய்கிறது.

'பெடியன் பிறந்து இந்தப் பங்குனியோடை ஒருவருடம் முடியப் போகுது. பிறந்தவுடனை தந்தி அடிச்சம், பெடிச்சி போட்ட காயிதத்துக்கு ஒருவரி எழுதினனே? அவளைக் கொண்டு வந்து விட்டாப் போலை இஞ்சால் பக்கம் எட்டிப் பார்த்தானே?'

'இன்னும் வீடு கட்டின கடன் முடியேல்லை. ஈடுவைத்த ரோட்டுக் கரைக்காணியும் கல்வீட்டுக் கனகருக்கு வட்டியோடை மூழ்கப் போகுது.'

அந்தக்காணியை மீள அவர் மதியம் திரும்பிய வயதில் படும் கஷ்டம்... வளம் குறைந்த வடமராட்சி மண்ணைப் பண்படுத்தி, நாற்று நட்டு, பின் நிலவிலும் கொட்டும் பனியிலும் இளங்கன்றுகளுக்குத் தண்ணீர் ஊற்றி, பாத்தி கட்டி,

'நாலாம் முறைக்கு' இறைத்து, தலைப்பு முறித்துக் கெட்டுப் பிடுங்கி, வெட்டி நெருப்புக்குள்ளை போட்டெடுத்துப்படும் கயிறுமாலை.

''இஞ்சாருங்கோ! எங்களுக்கு இது ஒரு தலை எழுத்தாப் போச்சு, சங்கக் கடையிலை கொண்டோடி வள்ளிப்பிள்ளை நேற்றுக் கொழும்பாலை வந்தமோன் சொன்னவனும் — எங் கடை மருமோன் கொழும்பிலை குடியும் குடித்தனமுமாக இருக்கிறானும்!''

நெஞ்சுக் குமுறல்களை வார்த்தைகளாகக் கொட்டிக் கொண்டு மனைவி குசினிக்குள் செல்கிறாள்.

இறுதி வார்த்தைகள் அவரது இதயத்தை ஈட்டியாகத் தாக்கி வேதனையின் விளிம்பிற்கு இட்டுச் செல்கின்றன.

தொடர்ந்து சிந்திக்கத் திராணியற்றவராய், தன் எதிரிலுள்ள கற்சுவரை வெறித்துப் பார்த்த வண்ணம் இருக்கிறார்.

''அ.....ப்.....பூ''

மழலை மொழி நெஞ்சக் கனலுக்கு நீர் ஊற்றுகிறது.

சிறுகைகளையும் கால்களையும் பரப்பி, அவரை நோக்கிப் பேரன் தவழ்ந்து வருகிறான்.

''அப்பூ.....அப்பூ''

குழந்தை அவரைப் பார்த்துச் சிரிக்கிறது.

பேரனுக்காக முகத்திலே சிரிப்பை வலிந்து வரவழைக்கிறார்.

''அப்பூ...''

பெருமூச்சுகள் உதிர்கின்றன.

குத்தகைப் பொன்னையாவின் உழைத்து உரமேறிய காலடியில் படிந்திருக்கும் செம்மண்ணைப் பேரன் தன் குருத்துக் கைகளால் உதிர்த்துகிறான்.

—1964.

# அலை

அவளை என் கண்கள் எங்கும் தேடுகின்றன.

மருத்துவக் கல்லூரியின் நீண்ட விடுதலைக்குப் பின்பு, இன்றுதான் கொழும்புக்குத் திரும்பி வந்திருக்கிறேன். மூன்று மாதங்கள் - அப்பாடா, எவ்வளவு விரைவாகச் சென்றிருக்கின்றன! நாளை மருத்துவக் கல்லூரி ஆரம்பமாகப் போகிறது.

அவளைச் சந்தித்ததைக் கொண்டு விடுதலையைக் கணக்குப் போடும் பொழுது, நீண்ட நாட்களாகத் தெரிகின்றது. கல்லூரி மூடி, ஊருக்குப் போகப் பெட்டிகளை அடுக்கும் பொழுது எனக்கு ஒத்தாசை செய்தாளே - அது நடந்து மூன்று மாதங்களா?

நான் இன்று படிகளில் ஏறி மேல் மாடிக்கு வரும் பொழுது திரும்பிப் பார்க்கையில், அவள் என் கண்களுக்கு அகப்படவில்லை. முன்பெல்லாம் நான் ஊரிலிருந்து வருவதை எங்கிருந்தோ கண்டு, ஓடிவந்து, என்னுடன் மாடிப் படிகளில் ஏறுவாள்.

''யாப்பாணத்தில் என்னங்க புதினம்? மிச்சம் மிச்சம் கறுத்துப் போனீங்க! யாப்பாண வெயில் மிச்சம் பொல்லாததுங்க...''—இவ்வண்ணம் ஏதாவது வாயாரப் பேசிய வண்ணம் வருவாள். எனக்கு ஒரு பெருமிதம். எனது சுக துக்கங்களில் அவள் அக்கறை காட்டும் பொழுது எனக்குச் சுய கௌரவம் தலைக்கேறிவிடும்.

ஆனால் இன்று...?

எனது அறைக்குள் புகுந்து உடைகளை மாற்றி விட்டு, பெட்டிப் பொருள்களைப் பிரிக்கிறேன். அவளுக்கெனக் கொண்டுவந்த 'பார்சல்' அவளை மீண்டும் தேடவைக்கிறது. அறையைவிட்டு வெளியே வந்து, பின் மாடத்தில் நின்று பார்க்கிறேன். அதோ தெரிகிறதே அவளது கோழிக்கூடு போன்ற வீடு! ஆனால் அவள்...?

எங்காவது போயிருப்பாளோ? ஏதாவது நோயால் வாடுகிறாளோ? அல்லது அவளுக்கு ஏதாவது...?

அவளைப்பற்றிய சிந்தனைகள் மேலெழுகின்றன.

அவளது முதற் சந்திப்பு எனது மனக்கண்முன் நிழல் படமாக நிற்கிறது.

அன்றுதான் நான் மருதானை வாடகை மாடி வீட்டிற் குடி புகுந்தது. எனக்குக் கொழும்பு வாழ்க்கை புதிது. மிருகக்காட்சிச் சாலைக்கு வந்த புது மிருகமாக மேல் மாடியில் உலாவிக்கொண்டிருந்தேன்.

யாரோ சிங்களத்தில் ஏதோ கேட்கவே திரும்பிப் பார்த்தேன்.

பன்னிரண்டு அல்லது பதின் மூன்று வயதிருக்கும்—ஒரு பெண், பாத்திரம் ஒன்றுக்கு 'விம்' போட்டு மினுக்கிய வண்ணம் கேள்வியை உதிர்த்துவிட்டுப் பதிலை எதிர்பார்க்கும் பாவனையில் நின்றாள்.

"மட்ட சிங்கள தன்ன நா.." எனக்குச் சிங்களம் தெரியாது—எனச் சிங்களத்தில் நான் மனப்பாடம் செய்து வைத்திருந்த ஒரே ஒரு சிங்கள வாக்கியத்தை அவளிடம் கூறிவிட்டு, அவளை நோக்கினேன்.

யாரோ 'விம்' போட்டு மினுக்கியது போன்று அவளது முகம் மேலும் செவ்வானமாகச் சிவக்கச் சிரித்தவண்ணம் பாத்திரத்திற்கு 'விம்' போட்டு மினுக்கியபடி கூறினாள்.

''எனக்குக் கொஞ்சங் கொஞ்சம் தமில் வரும். நா யாப்பாணத்தில நம்ம அக்காவோட ஒரு இஞ்சினியர் தொர வூட்டுல கொஞ்ச நாள் வேல செஞ்சேன். யாப்பாண புலுக் கொடிய மிக்சங் மிச்சங் ஆசை.''

அவள் குயிலின் குரலிலே - குதலை மொழியிலே பேசுவது எனக்கு நகைச்சுவையை யூட்டியது.

விசிறி போன்ற விசித்திரக் கொய்யகம் தொங்க உடுத்திருந்த சேலையில் படிந்திருந்த அழுக்கு அவளை ஒரு வேலைக்காரியாக நினைக்கச் செய்தது.

''நீ இங்கு வேலைக்காரியா?''

''இல்லீங்க மாத்தியா. பொடி நோனா நம்மளுக்குச் சின்னம்மா. நம்ம அம்மா ஆஸ்பத்திரிக்கு முன்னுக்கு சாமான் விக்கிறது. தாத்தா—நம்ம தகப்பன் செத்துப் போச்சு. சின்னம்மாவுக்கு வேலை செஞ்சு குடுத்திட்டு; இங்கை தான் சாப்பாடு. நம்ம வீடு கீழேத்தான் இருக்கு.''

போஞ்சிக்காய் விரலால் கீழே சுட்டிக்காட்டினாள்.

பொடி நோனா குரல் கொடுக்கவே எமது உரையாடல் அறுபட, அவள் அறைக்குள் புகுந்து விட்டாள்.

வாழ்க்கையின் மேடு பள்ளத்தைச் சுட்டிக்காட்டுவது போல அவர்களது வாழ்க்கை. மாடி வீட்டில் அவளது சிறிய தாயின் குடியிருப்பு. மாடி வீட்டிற்கு எதிரேயுள்ள கோழிக் கூடுகள் போன்ற வீடுகளில் உள்ளஒரு அறையில் அவளது தாயின்-பொடி நோனாவின் கூடப்பிறந்த அக்காவின்-வாழ்க்கை.

பொடி நோனாவின் அறைக்குள் புகுந்த அப்பெண்ணின் வருகையை வழிமேல் விழி வைத்து, எனது அறை வாசலில்

காத்திருந்தேன். எனது அறை வாசலைத் தாண்டித்தான் அவள் தனது வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

வேலைகள் முடிந்தவுடன் வந்தாள்.

''புழுக் கொடியல் விருப்பம் என்றாயே, இந்தா! இதைக் கொண்டு போ''—இரு கைகளையும் நீட்டி அதனைப் பெற்றாள்.

அவள் வாயால் - வெறும் உதட்டசைவால் - நன்றி கூற வில்லை அவளது அகத்திலே பொங்கி வழிந்த நன்றியுணர்ச்சி முகத்திலும், கண்களிலும் வழிந்தோடியது.

''உன் பெயர் என்ன?''

அவளுக்கு உதவி செய்து விட்டேன் என்ற காரணத் தாற் போலும், என் குரலில் உரிமை ஒலித்தது.

''கருணாவதி.''

உரையாடலை நீட்ட நினைத்து, அடுத்த கேள்விக்கு ஆயத்தம் செய்தேன்.

அவள் அதற்குள் ''வாறங்க மாத்தியா'' என்று கூறி விட்டு, மானாக ஓடி மறைந்து விட்டாள்.

வாடகை மாடி வாழ்வு இருக்கிறதே - அது எவ்வளவு விசித்திரமானது! எத்தனையோ குடும்பங்கள் வாழ்கின்றன. அதுசிறு நகரம். நான் குடியிருந்த இரண்டாவது மாடியிலுள்ள அத்தனை அறைகளையும் பொடி நோனாவின் குடும்பமே எடுத் துத் தங்களுக்கொரு அறையை ஒதுக்கிவிட்டு, ஏனையவற் றை வாடகைக்குக் கொடுத்திருக்கிறது.

பொடி நோனாவுடன் அவளுக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் பேசி ஓர் அறையை நானும், நண்பன் பாலா வும் அறுபது ரூபா வாடகைக்கு எடுத்தோம். மாதமுடிவில்

பணம் பெற, நீண்ட நேரம் 'லையிற்' எரிவதைச் சுட்டிக் காட்டப் பொடிநோனு வருவாள்; மொழிப்பிரச்சினை உச்ச நிலையையடையும். எங்களுக்குச் சிங்களம் தெரியாது. கொழும்பு வாழ்வால் அவளுக்கு அரைகுறை ஆங்கிலம் தெரியும். மூன்று மொழிகளுக்கும் சம உரிமை கொடுத்துப் பேசி, நாம் மொழிப் பிரச்சினையை முறியடித்து விடுவோம். எங்களது குடும்பம், யாழ்ப்பாண மக்களின் நிலை இன்னும் எத்தனையெத்தனை விடயங்களை உரையாடியிருப்போம். கருத்துப் பரிமாறலுக்கு மொழி முட்டுக்கட்டை போட முடியுமா?

நாட்கள் நகர்ந்தன. கருணுவதி என்னைக் காணும் பொழுது ஒரு புன்சிரிப்பு உதிர்ப்பாள். சிலவேளைகளில் எனது அறையைத் தாண்டிச் செல்லும் அவளுக்காக நான் காத்திருப்பேன். ஏதாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவளுடன் உரையாடுவதில் நான் தனி விருப்பம் கண்டேன்.

எமது அடுத்த அறையில் சக மாணவர்கள் இருவர் குடி புகுந்தார்கள். ஓய்வு நேரங்களில் நண்பர்கள் எல்லோரும் கூடி உரையாடுவோம் - இல்லை, வம்பளப்போம். எமது பேச்சில் இளமைத் துடிப்பு இழையோடாமல் விடுமா?

கருணுவதியைக் கேலி செய்து, அவளை நாணக் கோர்ண வைப்பதில் நண்பர்களுக்கு அலாதிப் பிரியம்.

கருணுவதியுடன் சிவபாலா என்னும் அழகான சிறுவன் ஒருவன் வருவான். அவளது அக்காவின் குழந்தையாம். அவளது அக்கா 'எஞ்சினியர்' வீட்டில் வேலைக்காரியாக இருக்கையில் அவன் பிறந்தவனும்.

''இஞ்சினியர் தொர ரொம்ப நல்லவங்க. அக்காவுக்குக் கலியாணம் செஞ்சு கொடுத்துச் சங்கிலியும் போட்டாங்க. அம்மா சிவபாலாவை இஞ்சினியருக்குப் படிக்க வைக்கப் போறுங்க'' எனக் கருணுவதி சொன்னவற்றை மையமாகக்

கொண்டு அவளைக் கேலி செய்வார்கள் நண்பர்கள். நான் மட்டும் கருணவதியின் பக்கம் நிற்பேன். நண்பர்களின் ஆழ்ந்த உட்கருத்துக்களை அவள் புரிந்து கொண்டாளோ என்னவோ புன்னகை பூத்து நிற்பாள்.

கருணவதியின் உள்ளம் வேதனைப்படாவிட்டாலும் நண்பர்களின் சில பொருள் நயம் செறிந்த சொற்கள் எனக்கு வேதனையைக் கொடுக்கும். கதையை மாற்ற முனைவேன். நண்பர்களோ கருணவதியையும் என்னையும் இணைத்துப் பேசிக் கிண்டலை என் பக்கம் திருப்புவார்கள்.

''நீ என்சினியருடைய தம்பியடா'' என்றான் நண்பன் ஞானசேகரன்.

''கருண என் தங்கையெடா'' என்றேன் நான்.

''நவீன தங்கைக்கு இரண்டு கருத்துக்கள் உண்டு. ஒன்று ஆரம்பத்தில் தங்கையென்று சொல்லிப் பின்பு காதலியாக்குவது. மற்றது காதலில் தோல்வி கண்ட காரிகையைத் தங்கை என்பது'' —என்று கூறிய பாலா, ஏதோ ஒரு உண்மையைக் கூறிவிட்டேன் என்ற எண்ணத்தாற் போலும், அருகிலிருந்த சாமிநாதன்மேல் கண்ணோட்டத்தை விட்டான்.

நாங்கள் நால்வரும் சிரித்தோம். ஆனால் என் சிரிப்பில் உயிரில்லை.

மருத்துவக் கல்லூரி வாழ்வில் முதலாண்டு முடிந்து இறுதியாண்டு ஆரம்பமாயிற்று.

நோயாளர்களைப் பரிசோதனை செய்யும் மருத்துவப் பாடம் எமது இரண்டாமாண்டுப்படிப்பில் உண்டு. கொழும்புப் பெரியாஸ்பத்திரியில் நடைபெறும் இவ்வகுப்புக்கு நோயாளர்களுடன் உரையாடச் சிங்களம் தேவையாக இருந்தது.

நாங்கள் நால்வரும் சிங்களம் படிக்க முனைந்தோம். சிங்கள ஆசானாகக் கருணாவதியை வைப்பது என நான் கொண்டு வந்த தீர்மானம் நண்பர்களிடையே ஏகமனதாக நிறைவேறியது; பொடிநோனாவின் அனுமதியும் கிடைத்தது.

எனது அறையிற்தான் சிங்கள வகுப்பு நடைபெறும். ஆரம்பத்தில் தயக்கத்துடன் எனது அறைக்குள் புகுந்த கருணாவதி, நாளடைவில் உத்தரவின்றி உள்ளே வரத் தொடங்கி விட்டாள்.

அன்றொருநாள் நண்பர்கள் நால்வரும் கூடியிருந்தோம்.

நண்பன் ஞானசேகரன் கருணாவதியைக் கேட்ட அந்தக் கேள்வி அவள் உள்ளத்தை ஊடுருவியிருக்க வேண்டும்.

''எங்கள் நால்வரில் உனக்கு யாரில் அதிக விருப்பம்?''

அவள் ஆசிரியை முன் நிற்கும் பதில் தெரியாத மாணவி போல் விழித்தாள். அவளது கண் இமைகளின் சிறகடிப்பு அவளது சிந்தனையை வெளிப்படுத்தியது.

என் முகத்தை உற்றுப் பார்த்தாள். திடீரென்று தன் பார்வையை எங்கோ படர விட்டாள். சிறிது சென்று அருகிலிருந்த அறை நண்பன் பாலாவைப் பார்த்தாள். அடுத்து அவனைச் சதா கிண்டல் செய்யும் நண்பன் ஞானசேகரனைப் பார்த்தாள். அடுத்து நல்ல முகவெட்டும், அமைதியுமான சாமிநாதனைப் பார்த்தாள். மீண்டும் பார்வையை என்மேல் தவழ விட்டாள். தேர்தல் முடிவை எதிர்பார்த்து நிற்கும் பொதுமக்களாக நாம் நால்வரும் நின்றோம்.

''உங்கள் நால்வரையும் ஒரே அளவாகத்தான் விரும்புகிறேன்.''

பதிலைக் கூறிவிட்டு அவள் என்னை ஏற இறங்கப் பார்த்தாள்.

நான் சிரித்தேன். வேறு என்ன செய்வது?

கருணாவதி நண்பர்கள் நையாண்டி செய்வார்கள் என்ற காரணத்தினாலேபொய்தான்சொல்லியிருக்க வேண்டும். பதில் உண்மையானால், பதிலுக்கு முன்னும் பின்னும் என்னையே முதலில் நோக்கியதின் காரணம் என்ன? மேலும் அன்று வீட்டுக்குப் போகும்பொழுது, அவள் பத்திரிகை படித்துக்கொண்டிருந்த என்னைத் தேடிவந்து, ''போயிட்டு வாறன் மாத்தியா'' என்றாள். பத்திரிகைச் செய்தியில் மூழ்கியிருந்த நான் தலையை மட்டும் அசைத்தேன். மீண்டும், ''போயிட்டு வாறன்'' என்றாள். ''போயிற்று வா, கருணா!'' என்ற என் பதில் கிடைத்த பின்னரே ஓடி மறைந்தாள். 'ஒரே அளவாகத்தான் நால்வரையும் நேசிக்கிறேன்' என அவள் கூறிய பதிலில் நான் கோபம் அடைந்துவிட்டதாக எண்ணிவிட்டாள் போலும்.

இரண்டு மாதங்கள் முடியவில்லை. நாம் சக மாணவர்கள் வியக்க, 'டிக்க - டிக்க' — கொஞ்சம் கொஞ்சம் சிங்களம் பேசுமளவுக்கு முன்னேறி விட்டோம்.

பரிசோதனை மருத்துவப்பாடத்தில் நோயைக் கண்டறிய, நோயாளரது பெயர், வயது, விலாசம், விவாகம் செய்துள்ளனரா?, குடும்பநிலை, பீடித்த நோய்கள் இன்னோரன்னவை நோயாளியின் சரித்திரமென அழைக்கப்படும். ஒவ்வொரு நோயாளியின் சரித்திரமும் ஒரு சிறு கதையாய் அமையும்.

கருணாவதிக்குக் கதை கேட்பதில் எத்தனை ஆர்வம்? எமது விரிவுரை டாக்டர்கள் மறந்தாலும், திங்களும் புதனும் பரிசோதனை மருத்துவப் பாடம் இருப்பதை அவள் மறக்க மாட்டாள். அன்று வகுப்பு முடிந்து வரும் எனக்காக, நோயாளியின் சரித்திரக் கதை கேட்க எனது அறையில் காத்திருப்பாள்.

சதா சஞ்சலம், ஏக்கம், பீதி, வேதனை, விரக்தி இவற்றின் ஏகபோக ஆட்சி நடைபெறும் நோயாளியின் சரித்திரக் கதை துன்பமயமாகத்தானே இருக்கும்!

நான் சொல்லும் நோயாளியின் சரித்திரக் கதையைக் கேட்கும் பொழுது, அவளது கண்களிலே வேதனை அலை பாயும்; ஏதோ ஒரு அனுபவ முதிர்ச்சி இழையோடும். பிற ரின் நோயைத் தன் நோய் போலப் போற்றிப் பனித்த கண் களுடன், உதட்டை மடித்துச் சில வேளைகளில் காட்சி தரு வாள்.

கருணாவதியின் பிஞ்சு உள்ளத்திலே சோகக் கீற்றைப் பாய்ச்சி, அதனை முகத்திலே பிரதிபலிப்பதைக் காணும் விஞ்ஞான ரசனை எனக்கு. நோயாளி நோயால் தவிக்கும் பொழுது நோயின் குணங்களை ரசிக்கும் பயிற்சியால் ஏற் பட்ட ரசனையா இது?

கருணாவதியின் கதை கேட்கும் ஆர்வம் என்னைச் சினி மாக் கதைகளை அவளுக்குச் சொல்லத் தூண்டியது. என்ன தான் இல்லாவிட்டாலும், காதல் இல்லாமல் சினிமாக்கதை இருக்குமா? அப்பொழுதுதான் எனக்கு அந்தச் சிக்கல் ஏற் பட்டது.

கதையை ஆரம்பித்தேன் - ''அவனும் அவளும் காதல்..''

உடனே ஒரு கேள்விக்கணையுடன் நின்றாள் கருணாவதி.

''காதல் என்றால் என்ன?''

நான் சற்று மௌனமானேன். காதல் - ஒரு வார்த்தை யால் இதற்கு விளக்கம் சொல்லிவிட முடியுமா? என்றாலும் கருணாவதியிடமிருந்து தப்பிக் கொள்ள முடியாதே! பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

''ஒரு ஆணும் பெண்ணும் மிச்சம் மிச்சம் விரும்பினால் அது காதல்—'ஆலய'!''

ஏதோ அவள் கேள்விக்குப் பதில் கூறிவிட்டேன். ஆனால்

பதில் கூறிய திருப்தி எனக்கில்லை. பதிலில் முழுமையில்லையே.

கருணுவதி ஏதோ சிந்தனை செய்தாள். சிறிது நேரம் வைத்த கண் வாங்காமல் என்னைப் பார்த்தாள்; மெல்லச் சிரித்தாள். அவளது சிரிப்பின் கருத்து எனக்குப் புரியவில்லை.

தமிழ்ச் சினிமாவில் வரும் காதல் ஒரு தனி ரகம் வாய்ந்தது. ஒரு இள ஆணும் பெண்ணும் சந்திப்பார்கள், திடீரெனக் காதல் பிறந்துவிடும். பிறந்த காதல் வளர்ந்துவிடும். பூந்தோட்டம் வரும்; காதலர்கள் ஆடுவார்கள், ஓடுவார்கள், பாடுவார்கள், ஒருவரை யொருவர் தேடுவார்கள், ஓடிப் பிடிப்பார்கள், ஒழிந்து விளையாடுவார்கள், கட்டிப்புரளுவார்கள். காதலன் 'மானே', 'தேனே', 'ஊனே' என்பான்-'வாய்ச் சொல் பயன் மிகும்

நான் கருணுவதிக்குச் சினிமாக்கதை சொல்லும் போது சினிமாவில் வருவது போல வெறும் காட்சிக்கு முதலிடம் கொடுப்பதில்லை. உள்ளத்தின் உயர்வைக் காட்ட முனைவேன். எங்காவது அருமருந்தாக வரும் காட்சிகளை நீட்டி, பூதக்கண்ணுடியில் புகுத்தி அவளுக்குக் கூறுவேன்.

ஏனே கருணுவதி இன்பக் காட்சிகளை அதிகம் லயிப்பதில்லை. கதையில் வரும் சோகக் கட்டங்களில் தன்னை மறந்து லயித்து விடுவாள். சினிமாக் கதா நாயகிகளை முறியடிக்கும் அவளது முகபாவனையை ரசிப்பதில் எனக்குத் தனியானதொரு இன்பம். சோகக் கதைகளைப் பாதியில் நிறுத்திவிட்டுச் சிலவேளைகளில் அவளது முகபாவனையை ரசித்திருக்கிறேன்.

மேல் நாடுகளில் ஓவியர்கள் சித்திர அழகிகளைப் பற்பல அலங்காகர உருவங்களில் வைத்து ரசித்துச் சுவைத்துச் சித்திரம் வரைவார்களாம். அது போன்ற ரசனையா இது?

நான் படுக்கையிலிருந்து ஏதோ படித்துக் கொண்டிருந் தேன். மேசையில் கிடந்த அறுவை வைத்திய நூல் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தாள் கருணுவதி. அதிலுள்ள படவிளக் கங்களேத்தான் ரசித்துக் கொண்டிருக்க வேண்டும். எழுத்துக் களே அவளால் எப்படி வாசிக்க முடியும்?

ஒவ்வொரு பக்கமாகப் புத்தகத்தைப் புரட்டும் போது அவளது முகவானிலே எத்தனே மாற்றங்கள்! ஒரு கணம் செவ்வானமாக, மறுகணம் வெண்முகில் வானமாக, அடுத்த கணம் இருள்வானமாக. . ! இதனே நான் ரசித்துச் சுவைத் துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று கைகள் பக்கப் புரட்டலுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டன. கண்கள் ஏதோ ஒரு பக்கத்தில் ஒன்றி யிருந்தன. உலகத்திலேயுள்ள நோய்களின் வேதனேகள் ஒருங்கே அவள் முகத்திலே தோன்றுகின்றனவோ?

என்னேத் தயக்கத்துடன் நோக்கினுள். மீண்டும் புத்த கத்திற் பார்வையைச் செலுத்தினுள். பின்பு என்னேயும் புத்தகத்தையும் மாறிமாறிப் பார்த்தாள். ஏதோ என்னேக் கேட்பதற்குத்தான் பீடிகை போடுகிருள் என்பதை உணர்ந் தேன். ஆனுல் எனது படிப்புக்குத் தொந்தரவு கொடுக்கவும் அவளுக்கு விருப்பமில்லே. நான் பாடமா படித்தேன்?

நான் கற்பனேயில் மூழ்கியிருந்தேன். என் கற்பனே வேறுயாரையும் பற்றியல்ல; கருணுவதியைப் பற்றித்தான். பாடக் குறிப்புகளே வாசித்துக் கொண்டிருந்த என் மனம் எதிரேயுள்ள கருணுவதியைக் கட்டுப் புத்தங்களுடனும், கர்வ மயமான பார்வைகளுடனும் மருத்துவக் கல்லூரிப் படிகளில் ஏறியிறங்கும் மருத்துவ மாணவியாகக் கற்பனே செய்தது. ஏனே அதில் எனக்குத் திருப்தியில்லே. வெள்ளேக் கலே உடுத்தி, வெள்ளேப் பணிபூண்டுள்ள 'நேர்ஸா'கக் கற்பனே செய்து கொண்டிருந்தேன்.

''உங்களை ஒன்று கேட்கலாமா?'' - எவ்வளவோ தயக்கத்திற்குப் பின், ஏதோர் விதமாகத் தைரியத்தை வரவழைத்துக் கேட்டாள்.

தலை அசைத்தேன் நான்.

யானைக்கால் வியாதியுடைய ஒரு நோயாளியின் படத்தைக் காட்டி ''இந்த வியாதி மாறுதா?'' என்றாள்.

எனக்கு மட்டுமல்ல, மருத்துவக் கல்லூரி மாணவர் அனைவருக்குமே யானைக்கால் என்றவுடன் மருத்துவக் கல்லூரி வாசலில் வியாபாரம் செய்யும் சில்வாவே நினைவுக்கு ஓடி வரும். யானைக்கால் வியாதி நோயாளியைப்பற்றிப் படிக்க 'வார்ட் வார்ட்டா'க நாயாக அலைய வேண்டியதில்லை. அசல் உதாரணமாக சில்வா இருக்கிறானே!

''ஆரம்பத்தில் மருந்து செய்தால் மாறிவிடும். நீ யானைக்கால் வியாதியுள்ள ஒருவரையும் பாரக்கவில்லையா? உனது அம்மாவுக்குப் பக்கத்தில் வியாபாரம் செய்யும் சில்வாவுக்கு இருக்கிறதே!''

நல்லவேளையாக அப்பொழுது நண்பர்கள் ஒருவருமிருக்கவில்லை. இருந்திருந்தால் கருணாவதியைக் கலங்க வைத்திருப்பார்கள். ஓர் ஆணும் பெண்ணும் அதிகம் உரையாடுவதைக் கண்டால் புது விளக்கம் கொடுக்க முனையும் நண்பர்கள் பார்வையில் வாலிபப் பருவமுடைய சில்வாவும் வயோதிபப் பருவத்தை எட்டிப் பிடிக்கும் மங்கை நோனாவும் சிக்காமல் விடவில்லை.

கொழும்புப் பெரியாஸ்பத்திரியின் ஒரு வாசலுக்கு எதிரேயுள்ள மருத்துவக் கல்லூரியின் முன்றலிலே உள்ள அங்காடியில் - திருவிழாக் காலங்களில் தோன்றும் நிரந்தரமற்ற கடைகளை நினைவூட்டி நின்றது சில்வாவின் கடை.

சில்வாவை ஒருமுறை பார்த்தாற் போதும். அவனிடம் விற்பனையாகும் பற்பொடி ஒன்றுக்கு இலவச விளம்பரம் செய்துகொண்டே சதா வாய்க்கு வெளியே நீண்டிருக்கும் பற்கள், அவன் தினமும் 'சத்தாய' என விலை கூறி விற்கும் சீப்புக்கும் அடிபணிய மறுக்கும் வணங்கா முடிகள், அவனது கடையிலே தொங்கிக்கொண்டிருக்கும் கொண்டைமுடி போன்ற கறுப்புமேனி-இவற்றை இலகுவில் மறக்க முடியுமா?

என் நினைவில் சில்வா நீங்காமல் இருப்பதற்குக் காரணம் அவனது தோற்றம் மட்டுமல்ல, வியாபாரத் திறனுமேயாகும். 'ஐஸ் சர்பத்' நுரைக்கத் தயாரித்துக் கொண்டிருக்கும் சில்வாவின் பார்வை ஆஸ்பத்திரி வாசலில் கடுந்தவம் புரியும் - நோயாளர்களைப் பார்க்க வந்திருப்பவர்களை நோக்கும். எப்படி அவரைத் தமிழர் என்று அறிவானோ தெரியாது. ''மாத்தியா சுகமில்லாதாளைச் சும்மா பாக்கலாமா? இந்தாங்க மிச்சம் மிச்சம் நல்ல தொடாங்காய். தொரைக்கிட்ட ரொம்பக் கேக்க மாட்டன்''

காலையில் பத்திரிகை விற்கும்பொழுது ஒரு தந்திரம். மக்கள் மனதை ஈர்க்கக்கூடிய செய்திகளை உரக்கக் கூவிப் பத்திரிகைகளை விற்று விடுவான்.

ஈக்களை ஓட்டும் ஏனைய அங்காடி வியாபாரிகளுடன் ஒப்பிடும்பொழுது, உண்மையில் அவன் ஒரு தலைசிறந்த வியாபாரிதான்.

சில்வாவுக்கு அருகில் கருணவதியின் அம்மா மங்கை நோனாவின் சிறு வியாபாரம் நடைபெறும். ஓய்வு கிடைக்கும் வேளைகளில் இருவரும் உரையாடிக் கொண்டேயிருப்பார்கள்.

''பாவம் சில்வாவுக்கு இது மாறுதா?''

கருணவதி சோகம் கவிந்த முகத்துடன் என்னைப் பார்க்கிறாள். அவனுக்காக அவள் அனுதாபப்படுவது அவளின் முகத்தில் தெரிகிறது.

அன்று எமது பயிற்சி வகுப்பில் ஒரு புது நோயாளி. அவனுக்கு நரம்பு மண்டல வியாதி. அவனது கதையைக் கருணாவதிக்குச் சொல்ல வேண்டுமென்ற ஊமைத் தவிப்பு எனக்கு.

''அவனுக்குக் கை கால் எல்லாம் நடுக்கம். முப்பத்தியாறு வயதுதான் இருக்கும். தொழில் செய்ய முடியாதவனாகி விட்டான். இன்னும் கலியாணம்கூட முடியவில்லை.''

கதையைக் குறையில் நிறுத்திவிட்டு, அவளது முகத்தை உற்று நோக்குகிறேன். கதையை நல்லதொரு கட்டத்தில் நிறுத்திவிட்டுக் கதை கேட்பவர்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்வதில் ஒரு இன்பம் இருக்கிறது போலும்.

''பாவம், அவனுக்கு என்ன நடந்தது?''

கருணாவதியின் கண்கள் சிறகடிக்கின்றன.

''அவன் பதினைந்து வருடங்களுக்கு முன்பு ஒருத்தியைக் காதலித்தானாம். அப்பெண் திடீரென்று ஒரு பணக்காரனுடன் ஓடிவிட்டாளாம். அவள் நினைவு அவனை வாட்டியது. நித்திரையின்றித் தவித்தான். ஒன்றுமே நினைவில் நிற்பதில்லை. வாழ்க்கையில் பிடிப்பின்றி சில நாட்கள் வாழ்ந்தான். இப்பொழுது மீண்டும் நித்திரையின்மை, மறதி; அத்துடன் கை நடுக்கமும் உண்டாகி விட்டது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா?''

''......''

அவள் ஒன்றுமே பேசவில்லை. எப்படிப் பேசுவாள்? அவள்தான் சோகச் சாகரத்தில் சிக்கிவிட்டாளே! அவளது கண்கள் அகல விரிகின்றன.

''பதினைந்து வருடங்களுக்கு முன்னேற்பட்ட காதல் தான் காரணம்'' - என்றேன் நான் உணர்ச்சியை வெளிக் காட்டாது, பாடநூல் விடை போலச் சொன்னேன்.

''காதல் பொல்லாததா? ஒரு ஆணும் பெண்ணும் மிச்சம் மிச்சம் விரும்பினுல் காதல் என்று சொன்னீர்களே. அப்படி என்ருல் மிச்சம் மிச்சம் விரும்பக்கூடாதா'' - சிறிது நேரம் கருணுவதி நினைவிழந்து என்னையே பார்த்துக்கொண் டிருந்தாள்.

வெகு அழுத்தமாக அவள் கூறியவை என் காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தன.

மறுநாள் அவள் வந்தாள்; முகம் கூம்பியிருந்தது.

''மாத்தயா! எனக்குத் தடுமன், இருமல் தலைவலி...''

நான் டாக்டரானேன், சிங்களத்தில்-கருணுவதி கற்பித்த மொழியில்-அவளுடன் பேசினேன்.

''பெயர்...? வயது...? கலியாணமாகிவிட்டதா...?''

''...''

அவள் சிரித்தாள். முகத்திலும் காதுகளிலும் இரத்தச் சிவப்பேறியது. அவளது வாடிய முகத்திலும் வடிவு குறைய வில்லை.

அவளது நெஞ்சில் வைப்பதற்காக 'ஸ்டெதஸ்கோப்' பை எடுத்தேன். எனது பார்வை அவளது நெஞ்சிற் படிந்த போது, இவ்வளவு காலமும் சிறு பெண்ணுக இருந்த கருணு வதி இன்று பருவத்தின் படிகளிலே நிற்பவளாகப்பட்டது.

எனது முதல் நோயாளி என்ற எண்ணமோ, அல்லது அவளுடலில் என் கைபட்ட ஸ்பரிசமோ என்னவோ, அவ ளது நெஞ்சில் 'ஸ்டெதஸ்கோப்'பை வைத்ததும் ஒருவித மான இனம்புரியாத உணர்ச்சி என்னை ஒருகணம் பற்றிக் கொண்டது. என் இதயம் வேகமாகத் துடித்தது.

''கருணுவதி உனக்கு ஒருவிதக் காய்ச்சல்... 'வுளு;' இது ஒரு தொற்று வியாதி''

எனக்கு அருகில் நின்றவள் திடீரென்று பின் சென்றுள்- ''அப்படி என்றால் அது உங்களுக்கும் தொத்திவிடுமே...''

அவளுக்கு என்மேல் எவ்வளவு அக்கரை!

நாட்கள் ஓடி, வழக்கம்போல விடுதலை விடும் நாளும் வந்தது. வீட்டிற்குப் போவதற்குப் பெட்டியை அடுக்கிக் கொண்டிருந்தேன். கருணாவதி தயங்கியவண்ணம் அறைக் குட் புகுந்தாள்.

''உங்களுக்கு லீவு எவ்வளவு நாள்?''

''மூன்று மாதங்கள்''

''மூன்று மாதங்கள் எப்படிப் போகப் போகிறதோ?''- மனத்தில் நினைத்ததை ஒளிக்காமற் சொல்லி விட்டாள். பின் தன்னையே தான் தேற்றுகிருள் ''நீங்கள் வந்து ஒன் றரை வருடமாகிவிட்டது; நேற்று வந்ததுபோல் இருக்கு''

எனக்கும் அவளுக்கும் உள்ள உறவை நான் எடைபோடு கிறேன்.

''இன்னும் ஆறுமாதங்களில் உங்கள் படிப்பு முடிந்து விடும் பிறகு இங்குதானே உங்களுக்கு வேலை?''

''இலங்கையின் எந்த மூலையில் உள்ள ஆஸ்பத்திரிக்குப் போகிறேனோ?''

''பொய்...'' கொஞ்சும் குரலிற் கூறினாள்.

''பொய் இல்லைக் கருணா, உண்மையாக!''

என் குரலில் சோகம் தொனித்தது. அவள் முகம் வாடி யிருந்தது இந்நிலையிலிருந்து விடுபடக் கதையை மாற்ற முனைந்தேன்.

''நாளைக்கு இந்நேரம் வீட்டில்...''

என்ன நினைத்தாளோ தெரியவில்லை - ''உங்களுக்கு எத் தனை அக்கா, தங்கச்சி, அண்ணா, தம்பி?''

''எனது குடும்பம் பெரியது. இரண்டு அண்ணன்மார் கள், ஒரு அக்கா, இரண்டு தங்கச்சிகள், இரண்டு தம்பிமார் கள்''

''உங்களைப் போல தங்கச்சிகள் சிகப்போ?''

''உன்னைப் போல் சிவப்பும் நல்லவடிவும்.''

கருணாவதி வெட்கத்தாலே தலை குனிந்துவிட்டாள்.

அவளை என் கண்கள் உற்று நோக்கின. என்றுமில்லாத வாறு அழகுடன் அவள் நின்றாள். தலை அழகாக வாரி யிருந்தது. கழுத்திலே ஒரு அழகான முத்துமாலை அணிந் திருந்தாள்.

''நீங்க ஒவ்வொரு பயணமும் ஏதாவது கொண்டு வந்து தாறீங்க. நான் ஒன்றுமே தாறதில்லை. இந்தாங்கோ முத்து மாலை. உங்க சின்னத் ங்கச்சிக்குக் குடுங்க.''

தலையை நீட்டி முத்து மாலையைக் கழற்றுகிறாள்.

''வேண்டாம்...'' - வெறுப்புடன் சொன்னேன்.

''சும்மா வைத்திருங்கோ'' நீட்டிக் கொண்டே அருகில் வந்தாள்.

''வேண்டாம் என்று சொன்னால் கேட்கமாட்டாயா?''

கோபத்தை வரவழைத்த வண்ணம் கூறினேன். என் முகத்தில் கோபத்தைக் கண்டதும், கருணாவதி பயந்து மிரள மிரள விழித்தாள். எனக்குக் கோபம் வருவதை அவள் சற்றும் விரும்பவில்லை.

''உங்களுக்கு விருப்பம் இல்லா விட்டால் குடுக்கக் கூடாது...'' - மார்பு ஏறி இறங்கப் பெருமூச்சு உதிர்த்த வண்ணம், அடிமேல் அடி வைத்து என் அறையைவிட்டகன் றாள். அவள் மறையும் வரையும் படுக்கையிலிருந்து அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன்.

ஊருக்குச் சென்றதும் என் இளைய தங்கையே பெட்டி யைத் திறந்து பிரித்தாள்.

வழக்கம் போல என் பயணப் பெட்டியில் தங்கை 'புதை யல்' தேடுகிறாள்.

''சின்னண்ணா! இது யாருக்கு?''

அவள் கையில் ஒரு முத்துமாலை.

சிறிது நேரம் மௌனமானேன். ''வேறு யாருக்கு உனக்குத்தான்.''- தடுமாற்றத்துடன் தங்கைக்குச் சொன்னேன்.

என் தங்கை, கருணவதி அன்பளித்த மாலையுடன் என் முன் நிற்கிருள். கருணவதி தன் ஆசையை நிறைவேற்றிய புளகாங்கிதத்துடன் புன்னகை பூத்து என் மனக் கண்முன் நிற்கிருள்.

கருணவதி தன் ஆசையைப் பூர்த்தி செய்ய, நான் உறங்கிய பின்புதான் என் அறைக்குள் புகுந்து பெட்டிக்குள் மாலையை வைத்திருக்கிருள்.

விடுதலை நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்தன.

கருணவதியைப் பற்றிய நினைவுகள் என்னை ஆட்கொண்டன.

நான் சந்திக்கும் பெண்களில் கருணவதியின் ஒரு பகுதி தெரிந்தது. சிலரின் சிரிப்பு அவளது சிரிப்பை நினைவூட்டியது. சிலரின் பின்னழகு அவளது பின்னழகு போன்று தெரிந்தது. சிலரின் நடையில் அவளது நடையைக் கண்டேன்.

என்னையறியாமல் என் உள்ளம் அவளைப் பற்றிச் சிந்தித்தது. கருணவதியின் முகம் சில வேளைகளில் என் மனக் கண்முன் வந்து நிற்கும், எனக்கு இது புது அனுபவமாகப் பட்டது. இதுகாலவரை எப்பெண்ணையும் நான் மனத்தால் நினைத்தது கிடையாது.

எப்படியோ மூன்று மாதங்கள் ஓடி மறைந்து, இன்று கொழும்புக்கு வந்து விட்டேன்.

என் கண்களுக்கு அவள் அகப்படவில்லை. என் அறைக்கும் பின் கூடத்திற்கும் எத்தனை தடவைகள் நடந்தேனே தெரியாது; கருணவதியை மட்டும் காண முடியவில்லை.

அவளுக்கெனக் கொண்டுவந்த 'பார்சல்' அநாதையாக மேசையிற் கிடக்கிறது.

ஏனைய நண்பர்கள் இன்னும் கொழும்புச்குத் திரும்ப வில்லை. தனிமை என்னை வாட்டுகிறது. புத்தகத்தைப் புரட்டி ஏதாவது படிக்க முனைகின்றேன்.

அவளை ஒருமுறை சந்திக்காமல் படிப்பில் மனதைச் செலுத்த முடியாது-என்பது எனக்கு நிதர்சனமாகப் படு கிறது. மனம் அலைந்து உளைகிறது.

எங்கும் இருள் சூழ்ந்து விட்டது. மின்சார விளக்குகளை ஏற்றி விடுகிறேன். தனிமையிலிருந்து விடுபட இரவுக் கடைச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மேல் மாடிப் படிகளில் ஏறும் பொழுது, பழக்கப்பட்ட இரு குரல்கள் என் காது களுடன் மோதுகின்றன.

சில்வா மங்கை நோனுவுடன் அவளது வீட்டுப்பக்க மாகப் போகிறான். என் கண்களை என்னால் நம்பவே முடிய வில்லை. நண்பர்கள் இந்த இருவரைப்பற்றியும் இணைத்துக் கதைப்பது உண்மைதானா? மருதானை மருதானைதானா?

நான்மேல் மாடியில் நின்று பார்க்கிறேன்.

இருவரும் வீட்டிற்குள் புகுகிறார்கள். கருணாவதி எங்கே?

சிறிது நேரம் கழித்து, கருணாவதியும் சில்வாவும் வெளியே வருகிறார்கள்,

நான் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்க்கிறேன். இப்பொழுதுதான் புரிகிறது. கருணாவதி மணப் பெண்ணாக நிற்கிறாள். அவள் அருகே மாப்பிள்ளையாக சில்வா நிற் கிறான்.

மங்கை நோனுவின் பாதத்தை இருவரும் குனிந்து வணங்கிவிட்டுப் புறப்படுகிறார்கள்.

திடீரென்று என் உள்ளத்தில் ஒரு மின்னல் மின்னுகிறது. மனத்தைப் பெரிய சுமை அழுத்துகிறது.

அறுவை வைத்தியப் புத்தகத்தைப் புரட்டும் கருணாவதி என் நெஞ்சின் நினைவில் உயிர்பெறுகிறாள்.

'பாவம் சில்வாவுக்கு இந்த நோய் மாறுதா?'

என் கண்கள் பனிக்கின்றன. நரம்பு மண்டலத்தில் ஏதோ உணர்ச்சி பாய்கிறது. நிற்க முடியவில்லை.

அன்றொருநாள் கருணாவதிக்குக் கூறிய நரம்பு வியாதிக்காரன் என் மனக்கண்முன் வருகிறான்.

பாதையில் வரும் கருணாவதி மேல் மாடியைப் பார்க்கிறாள்.

யாரை இவ்வளவு நேரமும் தேடினேனோ அவளது பார்வையிற் சிக்காமல் நான் ஒரு தூணுடன் தூணாக நிற்கிறேன்

கருணாவதியும் சில்வாவும் ஒட்டிய வண்ணம் நடந்து கொண்டு மருதானை வீதிக்கு வந்து விட்டார்கள்.

நான் மெல்ல நடந்து வந்து முன் மாடியில் நின்று பார்க்கிறேன். கருணாவதியின் நினைவலைகள் என் உள்ளத்தின் அடித்தளத்தில் முடிவற்ற இசையாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அவளது உருவம் நீண்ட மருதானை வீதியிலே தேய்ந்து மறைகிறது. —1965

# அஞ்சல்

மாணிக்கவாசகர் அன்றைய கருமத்திற்கு ஆயத்தமாகி விட்டார்.

பள்ளியெழுந்து வந்த அவர் திருவாசகத்தின் அந்த வாசகங்களை வாய்விட்டுப் பாடுகிறார்.

""புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்-
எம்பெருமான்...""

திருவாசகம் இந்தக் குளிர் சுவாத்தியத்திற்கும், தனிமைக்கும் ஒரு புது இனிமை அளிக்கிறது.

மலையகத்தில் உள்ள இந்தச் சிறு தபாற்கந்தோருக்குப் 'போஸ்ட்-மாஸ்டரா'க மாணிக்கவாசகர் மாற்றுதலாகி வந்து இன்னும் ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை. பிள்ளைகளின் படிப்பையும், பொருளாதாரத்தையும் முன்னிட்டு அவரது குடும்பம் சொந்த ஊரில் இருக்கிறது. மலையகத்தின் தனிமைச் சூழல் குடும்பத்தைப் பிரிந்திருக்கும் தனிமையை முத்திரையிட்டுக் காட்டுகிறது.

இன்று வழக்கத்திற்கு மாருகப் பனி கொட்டிக் கொண் டிருக்கிறது. பனி மூட்டத்துள் எதிரேயுள்ள தேயிலை மலை கள் மூழ்கிக்கிடக்கின்றன. மாணிக்கவாசகர் அதிகாலையில் ஐந்து மணிக்கெல்லாம் விழித்தாலும், அந்தக் குளிரின் கோரப் பிடியிலிருந்து விடுபட முடியாதவராய், தன்னு டைய வாழ்க்கைப் பிரச்சனையிற் சிந்தனையை அலையவிட்டுக் கொண்டு படுக்கையிற் கிடப்பார். பால் கொண்டுவரும் காளியம்மா என்னும் தோட்டத்துச் சிறுமியோ, அல்லது அவள் தம்பி முனியாண்டியோதான் பள்ளி யெழுப்புவார் கள். ஆனல் இன்றே ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து, முன் விறுந்தையில் உள்ள நாற்காலியில் உடலை இருத்தி, உள்ளத் தை வெகு தொலைவில் உள்ள தனது கிராமத்திற்கு எடுத் துச் சென்று, தனது குடும்பத்துடன் உறவாடுகிருர். திருவா சகம் விரித்த வண்ணம் அவர் முன் இருக்கிறது.

இவ்வாரம் ஊரிலிருந்து அவருக்குக் கடிதம் வரவில்லை. அவரின் மன அஞ்சல் அதிகரிக்கிறது. மனைவிதான் கடிதம் எழுதுவாள். வாழ்க்கைப் பிரச்சினைகளை யெல்லாம் கொட் டிப் 'பட்சம் மறவாத பிரிய நாயகனுக்கு' மடல் வரைவாள். மூத்த மகளின் திருமணப் பிரச்சினை தொட்டு வயிற்றிலே வளர்ந்து வரும் குழந்தையால் ஏற்படும் பிரச்சினைவரையும் அளந்திருப்பாள்.-'இது நிற்க' சுவாத்திய நிலையும் ஊர்ப் புதினங்களும் கடிதத்தில் இருக்கும்.

மூத்த மகள் திரும்மணப் பருவம்டைந்து இன்னும் சிறை யிருப்பதையிட்டு மாணிக்கவாசகருக்கும், மனைவிக்கும் பெரும் கவலை. மூன்ருண்டுகளாக முயன்று வருகிருர்கள். வெற்றி கிட்டுவதாக இல்லை. இப்பொழுது மனைவியின் பிரசவம் வரையும் முயற்சி ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. இரண்டா வது மகன் சீனியர் 'சயன்ஸ்' படிக்கிருன். மூன்ருவது மகள் கிராமப் பள்ளிக்கூடம் போகிருள். இப்பொழுது மனைவி கருத்தரித்திருக்கிருள். ஆண் குழந்தை வேண்டுமென்று எல் லாத் தெய்வங்களையும் வேண்டியிருக்கிருள்; எத்தனை நேர்த்

திக் கடன்கள்! இருவரும் இனிக் குடும்பக் கட்டுப்பாடு செய்வதென ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிருர்கள்.

பனிப்படலத்துள் தூரத்தில் வரும் உருவம் மாணிக்கவாசகருக்குத் தெளிவாகத் தெரியவில்லை. பால் கொண்டு வருவது காளியம்மாவா? முனியாண்டியா? அருகில் வரும் பொழுதுதான் தெரிகிறது. சிறுமி காளியம்மாதான் வருகிருள்.

மீண்டும் திருவாசகம் தொடர்கிறது.

'மெய்யேயுன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'

"ஐயா!"

பியோன் பண்டாவின் குரல் அது. தபாற்கந்தோருக்குப் பியோனுக அரசாங்கம் பண்டாவை நியமித்தாலும், ஐயாவுக்குத் தொண்டுகளும் அவன் செய்ய வேண்டும்.

பண்டாதான் அவருக்குச் சமைப்பது. காலையில் பாலும் இரண்டு துண்டு பாணும் சாப்பிடுவார். மதிய உணவாகப் பண்டா சமைக்கும் சோறும் கறியும், இரவுக்குப் பாணும் பாலும்.

அரசாங்கம் கொடுத்துள்ள பங்களாவும் தபாற் கந்தோரும் இணைந்திருக்கின்றன. அவரது வீட்டு வரவேற்பறைக் கதவைத் திறந்து காலடி எடுத்து வைக்கத் தபாற்கந்தோர் சுவர்க் கடிகாரம் ஏழு தடவைகள் அடிக்கிறது.

நெற்றியிற் பட்டும் படாமலும்—குறிப்பாகப் பார்த்தால் மட்டும் கண்டறியக்கூடிய திருநீற்றுப் பூச்சு, கையிலே ஒரு யாழ்ப்பாணச் சுருட்டு; வெள்ளை 'லோங்சும்' சதா வெளியில் விடக்கூடிய பக்குவத்தில் உள்ள 'புஸ்' சேர்ட்டும் சகிதமாய் வழக்கம்போல இன்றும் மாணிக்கவாசகர் காட்சி தருகிருர்.

கந்தோர்க் கருமம் ஆரம்பமாகிறது.

இன்று அவரே முழுக் கருமமும் செய்ய வேண்டும். அவரது உதவிப் 'போஸ்ட் மாஸ்டர்' சில்வா லீவு எடுத்திருக்கிறார். இன்று சனிக்கிழமை. ஒரே மூச்சில், ஒரு மணிக்குள் எல்லாக் கருமங்களையும் முடிக்க வேண்டும்.

அன்றைய திகதியின் முத்திரையிட்ட பத்திரத்தைப் போஸ்ட்-மாஸ்டர் ஒப்பத்திற்கு வைக்கிறான் கந்தோர்ப் பியோன் பெருமாள்.

அந்தச் சுற்றுடலிலுள்ள தோட்டத் தபாற் கூலிகள் தத்தம் தோட்டத்திற்குரிய தபால்களை எடுத்துச் செல்லக் கையில் பையுடன் கூடிவிட்டார்கள்.

மாணிக்கவாசகர் முன்னிலையில் 'மெயில்' பைகள் உடைக்கப்பட்டுத் தபால்கள் பிரிக்கப்படுகின்றன.

தபால்களைப் பெற்றுக்கொண்டு தோட்டத்துத் தபாற் கூலிகள் போய்விட்டார்கள்.

''பத்துச்சத ஸ்டாம்பு ஒண்ணு''

மெல்லிய குரல் ஒன்று கவுண்டரில் ஒலிக்கிறது. மாணிக்க வாசகர் சற்றுக் கழுத்தை உயர்த்திப் பார்க்கிறார். பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும் ஒரு சிறுமி. அவரது இரண்டாவது மகளை ஒத்த தோற்றம்; வாழ்க்கைப் பிரச்சினையின் சாயல் சற்றும் படியாத சிரஞ்சீவிப் புன்னகை பூத்து நிற்கும் முகம். தோளிலே புத்தகப் பை. அச்சிறுமி குருத்துக் கரங்களை நீட்டி மாணிக்கவாசகரிடம் முத்திரையைப் பெற்று, கடிதத்தில் பக்குவமாக ஒட்டித் தபாற் பெட்டிக்குள் போடுகிறாள்.

'யாருக்கு அந்தக் கடிதம்? வேற்றூரில் வேலை செய்யும் தன் தந்தைக்கோ?'

இன்று மாணிக்கவாசகருக்கு ஊரிலிருந்து கடிதம் வர வில்லை. அவருக்குக் கடிதம் வந்தால் பியோனிடம் வாங்கிப் பைக்குள் திணித்துக்கொள்வார். உடனே படிக்கமாட்டார். முக்கிய வேலைகள் முடிந்த பின்புதான் உடைத்துப் படிப் பார். ஆனல் அன்றே பதில் எழுதிவிடுவார்.

தலைமை அலுவலகம் அனுப்பும் கேள்விப்பத்திரங்களுக் கும், கடிதங்களுக்கும் எப்பொழுதும் பிழையின்றி முதலில் பதில் அனுப்பும் 'போஸ்ட்-மாஸ்டர்' மாணிக்கவாசகரா கத்தான் இருக்கும்.

''குட் மோணிங் பி. எம்''

அவருக்குப் பழக்கப்பட்ட குரல் அது. ஓர் இளைஞன்; கந்தோருக்கு அடிக்கடி வருவான். அவன் முகத்திலே சோக ரேகைகளைக் காண்கிறார் மாணிக்கவாசகர். படிப்பை முடித்து விட்டு அவன் வேலை தேடுகிறான். 'கசெற்'றில் வெற்றிடங் களின் விபரங்களைப் பார்க்க, சோதனைகளுக்கு விண்ணப்பம் செய்ய, விலையுயர்ந்த முத்திரைகள் வாங்கி விண்ணப்பம் அனுப்பக் கந்தோருக்கு வருவான். நம்பிக்கையுடன் விண் ணப்பங்கள் அனுப்புவான். ஆனல் இன்றுவரை அவனுக்கு வெற்றி கிட்டவில்லை.

மாணிக்கவாசகருக்குத் தனது மகனின் நினைவு ஓடி வரு கிறது. அவன் இந்த வருடம் சோதனையிற் தேறுவானே? தொடர்ந்து பல்கலைக்கழகம் வரையும் படிப்பானே? அல்லது இவ்விளைஞன்போல வேலை தேடி அலைவானே?

மாணிக்கவாசகருக்குச் சிறிது ஓய்வு கிடைக்கிறது; சுருட்டு ஒன்றினைப் பற்றவைத்துக்கொண்டு வெளியே வரு கிறார். கந்தோரின் வெளி விறாந்தையிற் போடப்பட்ட உயர்ந்த மேசையிற் கையை வைத்து ஒரு வாலிபன் ஏதோ எழுதிக்கொண்டிருக்கிறன். சுற்றாடலை மறந்து யோசிப்பதும், தனக்குள் சிரிப்பதும், எழுதுவதுமாக இருக்கிறான் அவ்

வாலிபன். மாணிக்கவாசகர் கடைக்கண் பார்வையை வீசிப் பார்க்கிறார். வாட்டசாட்டமான அவ்வாலிபன் கையில் ஓர் இளம் பெண்ணின் புகைப்படம். அவருக்குப் புரிந்து விட்டது. வாலிபன் காதலாகிக் கசிகிறான். அவனது ஆசை வெட்கமறியவில்லை.

மாணிக்கவாசகரும் ஒரு காலத்தில் இப்படித்தான். அவர் அப்பொழுது வாலிபன். கொழும்பிலுள்ள பெரிய தபாற்கந்தோரில் வேலை செய்த காலம் அது. பெற்றோர் பேசி வரும் திருமணங்களையெல்லாம் மறுத்தார். கைப்பிடிக்கப் போகும் மனைவி தன்னுடன் வேலை செய்யும் நாரிமணிகளைப்போல் இருக்கவேண்டுமென்று கனவு கண்டார். பட்டிக்காட்டுப் பெண்களையும் மணப்பதா?' ஒருநாள் தந்தையிடமிருந்து உடனே வரும்படி கடிதம் வருகிறது. கலியாண எழுத்து முடிந்த பின்புதான் கொழும்புக்குத் திரும்பினார். தந்தை சொல்லைத் தட்டி, எழுத்துக்குப்பின் — திருமணத்துக்கு முன் மனைவியிடம் போய் வந்தார். அவள் அன்பால் ஆட்கொள்ளப்பட்டு விட்டார். நாரிமணிகளிடம் காண முடியாத முழுமையை அவளிடம் கண்டார். கிழமைக்குக் குறைந்தது இரண்டு கடிதங்களாவது எழுதுவாள். அவை கடிதங்களா? அஞ்சல் கொண்டுவரும் அன்புத் தூதல்லவா!

இருபதாண்டுகள் கடந்தும், இன்றுகூட அவளின் அன்பு அடிக் கரும்பாக இனிக்கிறது. மாணிக்கவாசகருடன் வேலை செய்யும் சக ஊழியர்கள் அவரை ஆழமானவர் என்று கணக்குப் போடுவார்கள். அவளோ அவரின் ஆழத்தை நன்கறிந்து, அவருக்குத் தகுந்தபடி தோன்றுவாள். தாயாய், சோதரியாய், ஆசிரியையாய், அடியவளாய், இன்னும் அவரது தேவைக்கேற்ப உருவெடுப்பாள். அவரின் தேவைகளைத் திறம்பட நிறைவேற்றுவாள்.

மாணிக்கவாசகருக்குத் திடீரென்று தனக்குக் கீழ் வேலை செய்யும் சில்வா நினைவுக்கு வருகிறான். அவன் ஏன் இன்று லீவு எடுத்திருக்கிறான் — என்பது அவருக்குத் தெரியும்.

சில்வா ஓர் ஆசிரியையைக் காதலிக்கிறன். இன்று பாட்சாலை இல்லையல்லவா? இருவரும் எங்கு சுற்றித் திரிகிறார்களோ? அவள் அடிக்கடி அவனுடன் தொலைபேசியிற் தொடர்பு கொள்வாள். உரையாடல் சிலவேளைகளில் உச்சகட்டத்தை யடைந்து விடும். இங்கிதம் தெரிந்த மாணிக்கவாசகர் வெளி விறுந்தைக்கு உலாவப் போய் விடுவார். ஒருநாள் அவனைத் தேடி அவள் இங்கேயே வந்து விட்டாள். அவர் வியப் படைந்தார்.

பெற்றோருக்குப் பிரச்சினையின்றித் தன் கணவனைத் தானே தேடிக்கொள்கிறளே!

மாணிக்கவாசகருக்குத் தனது மூத்த மகளின் நினைவு வர, சிந்தனை இழை அறுபட, உள்ளே போகிறார்.

மீண்டும் பலதரப்பட்ட கந்தோர்க் கருமங்களுள் மூழ் கிறார்.

வெளியே உரையாடல் கேட்கிறது.

''சேமிப்புப் பணம் எடுக்கவா வந்தீங்க?''

''ஆமாங்க. மூத்த மகளுக்கு கலியாணம் ஒழுங்காப் போச்சுதுங்க...நகை செய்ய சல்லி கொஞ்சம் மொடையாயி ருக்குங்க''

''ரொம்ப நாளா இந்த விஷயமாய் கஷ்டப்பட்டீங்க?''

''இந்தக் காலத்ல எடுத்ததுக்கெல்லாம் பணந்தானுங் களே... கொலங் கோத்திரமெல்லாம் இதுக்குப் பின்னுக்குத் தானுங்களே... பணமில்லாதவங்க ஒலகத்ல பொணந்தா னுங்க.''

மாணிக்கவாசகர் அந்தத் தந்தையை, நிலைக் கண்ணாடி யிற் தன் உருவத்தைப் பார்ப்பது போல, உற்றுப் பார்த் துப் பெருமூச்சு உதிர்க்கிறார்.

சேமிப்புப் பணத்தை எடுப்பதற்குரிய பத்திரத்தை நிரப்பி அவர் முன் நீட்டுகிறார் அம்மனிதர். உரிய பத்திரத்

தைப் பெற்றதும், உரியவர்தான் பணம் பெற வந்திருக்கிறாரோ என்பதை அறிய, சில குறுக்குக் கேள்விகளைக் கேட்கிறார். மாணிக்கவாசகரை யாருமே எளிதில் ஏமாற்றி விட முடியாது. எதனையும் தீர யோசித்து, பல கோணங்களிலிருந்து ஆராய்ந்துதான் செய்வார். வாழ்க்கையிற் தனக்கு இழைக்கப்படும் வஞ்சனை வரம்பு மீறும் பொழுது வெற்றிகரமாக ஒதுங்கி விடுவார். 'வல்லவனுக்கும் ஒரு வல்லவன் உலகத்தில் உண்டு' என்பார். அது சரியாகவே இருக்கும்.

ஆள் மாருட்டம் இல்லை என்பதனை உறுதி கொண்டதும், பத்திரம் நிரப்பியது நேர்த்தியாக இருக்கிறதா என்பதைக் கவனிக்கிருர். சில பிழைகள் உண்டு. அதுவே போதும் வந்தவரைத் திருப்பி அனுப்ப. அவர் அவ்வாறு செய்யாது பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்திப் பணம் கொடுத்து அனுப்புகிருர்.

'பாவம் ஒரு பெண் கரை சேரட்டும்'

ஐயாவுக்குப் பகல் உணவைச் சமைத்துவிட்டுத் தனது சிற்றூண்டியைக் கந்தோருக்கு எதிரேயுள்ள கடையில் முடித்துவிட்டு பண்டா மாணிக்கவாசகர் முன் நிற்கிருன்.

''ஐயா! இந்தாங்க மிச்சச் சல்லி''

பண்டா நீட்டிய ஏழு சதத்தை வாங்கிய மாணிக்கவாசகர் மனத்திற்குள் சாமான்களின் விலையைக் கூட்டி, கொடுத்த பணத்திலிருந்து கழித்து மிகுதியைச் சரிபார்த்துத் தலையை யாட்டுகிருர்.

பண்டா! நேற்றுச் சாமான் வாங்கியதில் கடைக்கு இரண்டு சதம் கொடுக்க வேண்டுமல்லவா?''

''பரவாயில்லீங்க ஐயா வைச்சிருங்க..''

மாணிக்கவாசகர் விட்டுவைக்கவில்லை — ''இல்லை பண்டா ஒரு சதம் என்றாலும் கடன் கடன்தானே''

பண்டா ஒன்றுமே பேசவில்லை. ஐயாவின் பண்பு அவனுக்குத் தெரியும்தானே! கையை நீட்டி இரண்டு சதத்தையும் வாங்கிக் கொண்டான்.

மாணிக்கவாசகர் யாரிடமும் எளிதில் கடன் வாங்கவும் மாட்டார், கடன் கொடுக்கவும் மாட்டார்.

கந்தோரின் மேற்கு யன்னல் ஊடாக வெய்யில் மெல்லப் புகுந்து, பொழுது சரிகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

''குட் ஆவ்ரநூன் சார்''

பென்சன் எடுப்பதற்கு மாதமொருமுறைவரும் ஆப்டீன் கவுண்டரில் நிற்கிறார். ஆப்டீன் இதே தபாற்கந்தோரில் முப்பதாண்டுகளாகப் பியோனகக் கடமையாற்றி, இப்பொழுது ஓய்வு பெற்றிருக்கிறார். ஆப்டீனுக்குப் பன்னிரண்டு குழந்தைகள். கடைசிக் குழந்தைகள் மகனும் மகளுமாக இரட்டையர்கள். சிலவேளைகளில் மகனுடன் வருவார்; சில சமயங்களில் மகளுடன் வருவார். மாணிக்கவாசகர் தலையை உயர்த்திப் பார்க்கிறார். இன்று மகள்தான் கூட வந்திருக்கிறாள்.

மாணிக்கவாசகரும் ஒரு காலத்தில் தனது கிராமத்திலுள்ள தபாற்கந்தோருக்கு ஆப்டீன் போலப் போவார். அவருடன் கடைசிப் பிள்ளையும் போகும். அது மகனா? மகளா?

அன்றைய கந்தோர்க் கருமம் முடிவின் தறுவாயை நெருங்குகிறது. தினமும் தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டிய கணக்குப் படிவங்களைத் தயாரிக்கிறார்.

பியோன்கள் தபால்களுக்குச் 'சீல்' இட்டுப் பிரித்துக் கட்டுகிறார்கள்.

"சாமி..."

வெளியே ஒரு சோகக் குரல்.

எழுந்து நின்று பார்க்கிறார் மாணிக்கவாசகர். ஒரு வயது முதிர்ந்த பெண் சோகமே உருவாகி நிற்கிறாள்.

"என்ன வேணும்?"

"சாமி... எம் புருசனுக்கு ரொம்ப வருத்தங்க எம் மவனுக்குத் தந்தி குடுக்கச் சொல்லி டக்டரய்யா சொல்லிட்டாருங்க .. எனக்கு ஒரேயொரு மவந்தானுங்க... ஒடனே வரச்சொல்லி ஒரு தந்தி குடுங்க சாமி..."

வியர்வை நாற்றமடிக்கும் ஒரு ரூபாவை அவர்முன் நீட்டுகிறாள் அந்தப் பெண்.

"தந்தி போம் எங்கே?"

"எனக்கு எழுதப் படிக்கத் தெரியாதுங்க சாமி.... ஒடனே பொறப்புடச் சொல்லி தந்தி குடுங்க சாமி..." அவள் உடலே பதறுகிறது.

பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பண்டாவைப் பார்க்கிறார் மாணிக்கவாசகர்.

ஐயாவின் குறிப்பறிந்த பண்டா, இனித் தனது அதிகாரத்தைச் செலுத்த வேண்டியதுதான். வெளியே வந்து அந்தப் பெண்ணை விரட்டி, அரசாங்கக் கட்டிடத்திலிருந்து அப்புறப் படுத்தும் பணியில் இறங்குகிறான் பண்டா.

''சாமி.. நாங்க எளியவங்க... நாதியில்லாதவங்க....
ஓங்க புள்ள குட்டிகளுக்கு புண்ணியமா போவுங்க...''
மாணிக்கவாசகரைப் பார்த்து அவள் மன்றாடுகிறாள்.

மாணிக்கவாசகரின் உள்ளம் மெழுகாக உருகுகிறது. அதனை வெளிக்காட்டிக் கொள்ளாது, ஒரு தந்திப்பத்திரத்தை எடுத்து நிரப்புகிறார்.

''எந்தத் தோட்டம்?''

''கெழவித் தோட்டமுங்க,''

அவள் தனக்குத் தெரிந்த தமிழ்ப் பெயரைச் சொல்லுகிறாள். அதற்குரிய தபாற் கந்தோரும் அவளுக்குத் தெரியாது மாணிக்கவாசகர் புத்தகத்தைப் புரட்டி, அதன் ஆங்கிலப் பதத்தைத் தேடும் திருப்பணியில் இறங்கி, அவளது வேண்டுகோளை நிறைவேற்றி அனுப்புகிறார்.

கந்தோர்க் கருமங்கள் முடிந்துவிட்டன. ஐயா சரியாக ஒரு மணிக்குத்தான் மூடுவார் என்பது பண்டாவுக்குத் தெரியும். அவன் மணிக் கூட்டைப் பார்ப்பதும் உள்ளே உலாவுவதுமாக இருக்கிறான். இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன.

தொலைபேசி மணி அடிக்கிறது.

பண்டாவுக்கு மன ஏக்கம் பிடிக்கிறது. 'ஏதாவது செய்தி வந்து வேலை ஒரு மணியைத் தாண்டிவிடுமோ?'

மாணிக்கவாசகர் கையில் ஒலிவாங்கி.

தந்திக் கந்தோரிலிருந்து அறிமுகமான யாரோ பேசுகிறார்கள்.

''எனது நல்வாழ்த்துக்கள். உங்களுக்குப் பெண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் பிள்ளையும் நல்ல சுகம்.''

"நன்றி..."

ஒலிவாங்கியைக் கீழே வைக்கிறார். ஒரு மணி அடித்து ஓய்கிறது. பண்டாவைப் பார்த்துத் தலையாட்டிவிட்டுப் பங்களாவை நோக்கிப் போகிறார்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தின் அந்த அடிகளை வாய்க்குள் மெல்ல உச்சரிக்கிறார்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்.....

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்?'

—1967

# நெடுஞ்சாலை

பேராதனைப் பூங்காவின் குறுக்குப் பாதையைத் தாண்டி வீதிக்கு வந்துவிட்டார் அம்பிகாபதி ஐயர்.

மருத்துவ மாணவனுன ஐயருக்கு இருதயம் வேகமாகத் துடிக்கிறது, உடல் வியர்த்துக் கொட்டுகிறது. வழியிற் காணும் நிகழ்ச்சிகள் யாவும் கனவுலகில் நடப்பதாகப் படுகிறது. ஆனல் அந்தச் சம்பவம் மட்டும் கனவில்லையே.

ஐயருக்குச் செய்யக் கூடா'தொன்றினைச் செய்த குற்ற உணர்வு மேலோங்கி நிற்கிறது.

'சீ... நான் எவ்வளவு மாறிவிட்டேன்! என்னை மாற்றியது யார்? நானு?... அவள்... அவள்தான்—ஜஸ்மினு?. என் நண்பன் ஆனந்தனு? சூழ்நிலைகளா? காலமாற்றமா?'

நடந்த சம்பவத்தின் சின்னமாகச் 'சேட்டி'ல் அவளது உதட்டின் சாயம் படிந்திருக்கிறது. 'சென்றி'ன் நறுமணம் அவரது முகத்தில் மெல்ல வீசுகிறது.

உதட்டின் சாயம் கறையாகவும், 'சென்றி'ன் வாசம் சவத்திற் றெளித் தெழும் நாற்றமாகவும் ஐயருக்குப்படுகிறது. 'போனவுடன் 'சேர்ட்டை'க் கழுவிப் போட வேண்டும், குளிக்க வேண்டும், சாமி கும்பிட வேண்டும்.'

விரிவுரை மண்டபத்தின் இருப்பிடத்தில் அம்பிகாபதி ஐயருக்கருகில் செல்வி ஆதர் ஜஸ்மின் வரும்பொழுது

ஐயருக்கு முதலில் அந்தரமாகத்தான் இருந்தது. சக மாண வர்கள் பொறுமைப் பட்டார்கள், சகமாணவிகள் பொறு மைப்படும் வகையில் அவளது தோற்றம்; நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, பள பளப்பான கண்கள். காற் றின் குறும்பிலே அலையும் பொன்னிறச் சிகை, இரத்தச் சிவப்பேறிய அந்தூரிய மலர் உதடு, வெண்டைக்காய் விரல் கள். புத்தகங்களை மார்போடணைத்து, 'ஸ்ரெத்தெஸ்கோப்' பை மாலையாகப் போட்டு, மருத்துவக் கல்லூரிப் படிகளி லே அவள் ஏறி இறங்கும் அழகிற் தனிக் கவர்ச்சி ததும்பும்!

'யூறேசி'யனுக்கும் பறங்கிமாதுவுக்கும் தவப்புதல்வியாய் வந்துதித்த ஜஸ்மினுக்கு ஐயரின் வெட்கம் முதலில் வியப் பைத்தான் அளித்தது. ஆரம்பத்தில் இடது பக்கத்திலுள்ள சிங்கள மாணவனுடன் தான் பேசிக்கொள்வாள்.

நாளடைவில் ஐயரின் தனித்தன்மையாலும், விரிவுரை யாளர்கள் விடுக்கும் கேள்விகளுக்கு வியந்து பாராட்டும் வண்ணம் ஐயர் பதிலளிப்பதாலும் அவர்பால் அவளுக்குத் தனி விருப்பம் ஏற்பட்டது.

அவள்தான் வலிந்து பேசுவாள். அவர் பதிலுடன் இருந்து விடுவார். அவள் அம்பிகாபதி ஐயரை 'மிஸ்டர் — ஐயர்' என்றுதான் அழைப்பாள். முழுப்பெயரும் அவள் வாய்க்குள் புகாது. நாட்கள் செல்லச்செல்ல ஐயரின் பேச்சு மெல்ல மெல்ல நீண்டது. ஐயருடன் பேசுவதில் அவளுக் குத் தனி விருப்பம். பலதும் பேசுவார்கள்.

''ஜஸ்மினிடம் தமிழ்ப் பெண்களுக்குத் தனி விருப்பம். இரண்டுக்கும் உள்ள உறவு மகத்தானது.''

ஐயர் ஆங்கிலத்திற்தான் சொன்னார். அவளுக்குப் புரிய வில்லை. புரிய வைத்தார் ஐயர். ஆங்கிலத்தில் 'ஜஸ்மின்' என்ற பெயருடைய மல்லிகையைப்பற்றியும், அதன் புனிதம் பற்றியும் சொன்னார்.

"ஏன் பெண்கள் கூந்தலுக்கு மலர் சூடுகிறார்கள்?"
— கூந்தலற்ற ஜஸ்மின் கேட்டாள்.

ஐயர் பூவும் பொட்டும் பற்றி ஒரு குட்டிப் பிரசங்கமே செய்து விட்டார்.

அவள் இடைமறித்துக் கேட்டாள்.

'ஒரு பெண்ணின் கணவன் இறந்து விட்டால் அவள் பூவும் பொட்டும் போடக்கூடாதா? அது பாவமல்லவா? கணவன் இறந்த துக்கத்தோடு இது வேறு தண்டனையா?'

ஜஸ்மினின் முகம் வாடிய மல்லிகைச் சரமாக இருந்தது. தமிழ்க்குல மாதர்களுக்காக அவள் வருந்துகிறாள்.

ஜஸ்மினின் கேள்விக்கு ஐயராற் சரியான விடையளிக்க முடியவில்லை. மீண்டும் பூவிலும் பொட்டிலும் புனிதத்தை வலிந்து புகுத்தினார்.

நடந்து வரும் ஐயருக்கு வீட்டு நினைவுகள் வர, மன அஞ்சல் அதிகரிக்கின்றது. 'இது வீட்டுக்குத் தெரிந்தால்?'

குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுத் தண்டனையை எதிர்நோக்குபவன்போல ஐயர் நிற்கிறார்.

'வீட்டிலுள்ள எல்லோரையும் நினைத்துப் பார்க்கிறார். இப்பொழுது அப்பா சந்தியாவந்தனம் செய்துவிட்டு இராப் பூசைக்காகக் கோயிலுக்குப் போயிருப்பார். தம்பி வயது முதிர்ந்த அப்பாவுக்கு உதவி செய்யச் 'சயிக்கிளி'ல் பின் சென்றிருப்பான். அம்மாவும் தங்கையும் கோயிலுடன் சம்மந்தமான வீட்டு வேலைகளைச் செய்துகொண்டிருப்பார்கள். சின்னத்தம்பி ஆங்கிலம் படிக்க மாமா வீட்டுக்குப் போயிருப்பான்.'

'அப்பாவுக்கு இது தெரிந்தால்...?'

'ஆசார சீலரான அவருக்கு நான் மகனுய்ப் பிறப்பதா?'

ஐயரின் அப்பா தண்டபாணிக் குருக்களுக்கு ஊரிலே நல்ல மதிப்பு 'சமய ஆசாரங்களில் கடுகளவும பிசகாத குருக்கள்' என்பார்கள் ஊர் மக்கள்.

'என் தந்தை எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து, மாதா மாதம் காசு அனுப்புகிருர். அந்தப் பணத்தில் வளரும் நான் இப்படிச் செய்வதா...?'

மாதமொருமுறைதான் தண்டபாணிக் குருக்கள் மகனுக்குக் கடிதம் எழுதுவார். ஐயரின் தங்கை வாரமொரு முறை எழுதும் கடிதம் போல அது இருக்காது. கோவிலைப் பற்றியும், உற்சவங்களைப்பற்றியும் செய்திகள் அதிலே கட்டாயம் இருக்கும்.

'இவற்றை எல்லாம் எனக்கு ஏன் எழுதுகிருர்? நான் தொலை தூரத்தில், புதிய துறையில் ஏதோ கற்றுக்கொண்டிருந்தாலும் எம்து குல கோத்திரங்களை விட்டுப் போவதில்லை - போகக் கூடாது என்பதைச் சொல்லாமலே சுட்டிக் காட்டுகிருரோ?'

ஐயர் மருத்துவக் கல்லூரிக்கு முதல் முறையாகப் புறப்பட்டு வந்த பொழுது எல்லோரும் பயணம் அனுப்பக் குழுமி நிற்கிருர்கள். அந்த நன்ஞளில், தண்டபாணிக் குருக்கள் கணித்து வைத்திருந்த சுபநேரமும் வந்து விட்டது. அம்மாவின் கண்கள் பனிக்கின்றன. அப்பா தோளுக்கு மேல் வளர்ந்த மகனை நேரில் நோக்காது, கூடத்திலிருந்த பூக் கூடையைப் பார்த்துக் கொண்டு சொல்கிருர்; ''தம்பி! நாலுபேரோடைபிழங்குகிறது;கவனமாய்இருக்கவேண்டும்.''

அப்பா சொன்ன அந்த வார்த்தையை ஐயரால் மறக்க முடியவில்லை. பல சந்தர்ப்பங்களில் நினைவுக்கு வரும். தீர்மானங்களுக்குப் பிரதிவாதம் செய்யும். இன்றுமட்டும் அது தோற்றுவிட்டதோ?

இளமைக்கால நினைவுகளை இப்பொழுது எண்ணிப் பார்க்கிறார் ஐயர்.

குடுமியுடன் ஆரம்ப பாடசாலைக்குப் போகிறார் ஐயர். ஐந்தாம் வகுப்புப் படித்து முடிந்தவுடன் கல்லூரிக்குப் போவதற்காக அப்பாவின் வெறுப்புடனும், அம்மாவின் அனுசரணையுடனும் ஐயரின் குடுமி 'குரோப்'பாகியது.

ஐயரின் மாமனார் பிரபல சமய அறிஞர். ஆகமங்களைக் கரைத்துக் குடித்தவர். கதாப்பிரசங்கக் கலையில் கரை கண்டவர். அவர் அம்பிகாபதியைத் தனது வாரிசாக்குப்படி-பல்கலைக்கழகப் படிப்பைத் தொடர முன், தண்டபாணிக் குருக்களைக் கேட்டார். தண்டபாணிக் குருக்களுக்குத் தன் தலைமகனை ஆண்டவன் திருப்பணிக்கு அர்ப்பணிப்பதையிட்டு உள்ளூர நல்ல விருப்பம். குருக்களின் மனைவிக்கு இதில் விருப்பமில்லை. 'என் மகன் அர்ச்சகனாவதா? இன்று இத் தொழிலின் கௌரவம் குறைந்து விட்டதே. சில கோவில்களில் மாதச் சம்பளம் கொடுத்து வேலைக்காரன் போல் அல்லவா வைத்திருக்கிறார்கள். அம்பிகாபதி அர்ச்சனைப் பணத்தையும், நைவேத்தியப் பொருட்களையும் கொண்டு புரோகித வாழ்க்கை நடாத்துவதா?'

ஐயரின் கெட்டித்தனத்தையும், படிப்பில் உள்ள ஆர்வத்தையும் கண்ட ஓர் ஆசிரியர், கோயிலுக்குச் சென்றபொழுது தண்டபாணிக் குருக்களை நேரிற் சந்தித்து, அம்பிகாபதி ஐயர் தொடர்ந்து படித்து 'டொக்டர்'ராக வரவேண்டுமென வலியுறுத்தினார்.

வைத்தியத் தொழில் என்றவுடன் குருக்கள் தனது மனத்தை மாற்றி விட்டார். தண்டபாணிக் குருக்கள் ஓய்வு நேரங்களில் விஷ வைத்தியம் செய்வார். அவரது கைராசி பல நஞ்சு தீண்டியவர்களுக்குக் கைகொடுத்து உதவியிருக்கிறது. தனது அர்ச்சகத் தொழிலில் காணாத ஓர் இனம் புரியாத இன்பத்தை விஷவைத்தியத்தில் கண்டார் குருக்கள்.

தண்டபாணிக் குருக்களின் மனம் மாறிய பொழுதிலும், மகன் படிப்புக்காக எலி வெட்டத் தொடங்கியதும், இரண்டு வீடுகள் தள்ளியிருந்த தனது மனைவியின் தம்பி வீட்டைப் படிப்புக்காக உபயோகிக்கச் சொன்னார்.

ஐயரின் சிந்தனை ஒளி மங்குகிறது. திடீரெனத் தனது நண்பன் ஆனந்தனை நினைக்கிறார்.

ஆனந்தனின் நட்பு ஐயருக்கு ஒரு புது உலகைக் காட்டியது. பல கோணங்களிலே தெளிவுடன் சிந்திக்க வைத்தது. அந்தச் சிந்தனைதான் இந்தச் சம்பவத்திற்கு வித்திட்டிருக்குமோ?

ஆனந்தனும் ஐயரும் பிரியமான நண்பர்கள். ஒன்றாகக் கலந்து படிப்பார்கள். அவர்களை அறியாமலேயே சோதனையில் யார் முதலாவதாக வருவதெனப் போட்டியிருக்கும். இருவரும் ஓய்வு நேரங்களில் வாழ்க்கையைப் பற்றிப் பேசுவார்கள். ஆனந்தன் சமுதாயத்தில் இழையோடியிருக்கும் போலித் தன்மைகளை நாசூக்காகச் சாடுவான்.

இருவரும் பேராதனைப் பூங்காவிற்கு உலாவப் போவார்கள். பூங்காவை ஊடறுத்திச் செல்லும் மகாவலிகங்கைக் கரையிலே, மனோரம்மியமான சூழலிலே மாணவர்கள் சோடி சோடியாகச் செல்வார்கள். பூங்காவில் நடைபெறும் மயிர்க் கூச்செறியும் சம்பவங்களையும், பகிரங்க முத்தங்களையும் கண்டு ஐயர் முகத்தைத் திருப்பிக் கொள்வார். அவர் உடலிலும் உள்ளத்திலும் இனம் புரியாத உணர்ச்சி பாயும். இது போன்ற உணர்ச்சிகளைப் பிரயாணங்களிலும், தியேட்டர்களிலும், சன நெருக்கடிகளிலும் உணர்ந்திருக்கிறார். உணர்ச்சி மங்கி அறிவுத் தெளிவு வந்தவுடன் ஏதோ ஒரு பாவமான செயல் செய்ததாக நினைத்து மனம் வருந்துவார்.

பூங்காச் சூழலிலே ஆனந்தனும் ஐயரும் பால் உணர்ச்சியைப்பற்றிப் பேசுவார்கள். ஆனந்தன் ஐயருக்கு உடையது விளம்புவான்.

அன்று அவனுக்கு நடந்த அந்தச் சம்பவத்தைச் சொன்னதும் ஐயர் வியப்படைந்து விட்டார். ஜஸ்மினும் ஐயரும் போல, ஆனந்தனும் அனுலாவும் விரிவுரை மண்டபத்து அயலவர்கள். அனுலா ஆனந்தனின் கருத்துக்களாற் பெரிதும் கவரப்பட்டவள்.

பேராதனைப் பூங்காவிற் தனியாக இருந்த ஆனந்தனை அணுகி அனுலா பேச்சுக் கொடுத்தாள். அவள் பார்வையிலும், பேச்சிலும் ஏதோ ஒரு மோகம் தழுவி இருப்பதாக அவன் கவனித்தான்.

ஆனந்தன் ஏதோ எல்லாம் எண்ணிவிட்டு அனுலாவுக்குச் சொன்னான், ''கல்லூரிக் காதலில் எனக்கு நம்பிக்கையில்லை. பால் உணர்ச்சியின் உந்தல்தான் அது.''

அவன் தேவையற்ற ஏதோ ஒன்றினைச் சொல்வதாக அவள் தன் முகபாவனையிற் காட்டி, எங்கோ பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் சொன்னாள், ''எனக்கும் காதலில் நம்பிக்கையில்லை. ஆனால் இயற்கையாக எழும் உணர்ச்சிகளை அளவுக்கு மேல் கட்டுப்படுத்துவது பாவம்.''

பின்பு ஆங்கிலப் படங்களில் முத்தமிடும் காட்சிகள் தனக்குத் துணை நின்றன எனச் சொன்னான் ஆனந்தன் தனக்குரிய தனி நடையில்.

''ஆனந்தா! நீயுமா...?'' அன்று புறூட்டசைக் கேட்ட சீசர் போலக் கேட்டார் ஐயர் வியப்புடன்.

'ஐயோ! இன்று நானுமா?'

ஐயரின் உடல் ஒருகணம் பதறி ஓய்கிறது.

'ஆண்கள் தவறுவதற்குச் சம்பந்தப்பட்ட பெண்களுக்கும் பெரும் பங்குண்டு' - என்று ஆனந்தன் சொன்னது உண்மைதான். அனுலா இப்பொழுதும் அடிக்கடி அவனைப் பூங்

காவிற்கு வரும்படி அழைக்கிருளாம். இன்று கூடப் போயிருப்பாளே - என்னமோ?'

'எனக்கு இன்று நடந்த சம்பவத்தில் ஜஸ்மினுக்குப் பெரும் பங்குண்டு. அவள் என்னுடன் ஏன் இவ்வளவு நெருக்கமாகப் பழகினுள்? தங்களது கலாசாரப்படி ஆண்களும் பெண்களும் நடனமாடுவதும், முத்தமிடுவதும் முறைகேடானதல்ல என்று எத்தனை நாள், எத்தனை தடவைகள் எனக்கு எடுத்துச் சொல்லியிருப்பாள். அவள்தானே என்னை ஆங்கிலப் படங்கள் பார்க்கத் தூண்டியவள். இன்று காலையில் நான் பார்த்த அந்த ஆங்கிலப் படத்தை எத்தனை தடவைகள் என்னைப் பார்க்கும்படி வற்புறுத்தினுள்!

அந்தப் படத்திலே பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவருக்கும் மாணவி ஒருத்திக்குமுள்ள தொடர்பு காட்டப்படுகிறது. அவளது பிறந்த தினக் கொண்டாட்டத்திற்குப் போன பேராசிரியர் அம் மாணவியை அவள் காதலன் முன் முத்தமிடுகிருர். இப்படத்தை ஜஸ்மின் என்னை ஏன் பார்க்கச் சொன்னுள்? அவளும் இதனை எதிர்பார்த்திருப்பாளோ? இதற்காக ஏங்கிக்கிடந்திருப்பாளோ? அல்லது நான்தான் இப்படிக் கற்பனை செய்கிறேனே?

இந்தப் படம்தான் என்னை இதற்குத் தூண்டிய முதற் குற்றவாளி.

படம் முடிந்ததும் ஐயர் விடுதிக்கு வந்தார். சாப்பாடு முடிந்ததும் மேல் மாடியில் நின்று பார்த்தார். ஜஸ்மின் தனியாகப் பூங்காவை நோக்கிப் போவதைக் கண்டார். உடனே இன்று ஜஸ்மினின் பிறந்த நாள் என்பது நினைவுக்கு வந்தது. அன்று பார்த்த படமும். அக்காட்சியும் மனத்திரையில் ஓடின.

ஐயரின் மனக் குரங்கு என்றே எண்ணியது இன்று பூதாகாரமாக நின்றது. இந்த முடிவுக்கு வந்து, தன்னை அலங்கரித்துக் கொண்டு பூங்காவுக்குப் புறப்பட்டார்.

மாணவர்கள் எல்லோரும் மதிய உணவுக்குப்பின் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பூங்காவில் இன்னும் கூட்டம் கூடவில்லை. ஐயர் தனியே நடந்து போகிறார். உடல் நடுங்குகிறது. 'திரும்பிப் போகலாமா?' என நினைக்கிறார். உடன் ஒருவிதத் துணிவை ஏற்படுத்திக் கொள்கிறார். இந்தத் துணிவு பல வேளைகளில் அவருக்குத் துணை நின்றிருக்கிறது. நேர்முகப் பரீட்சைகளில் தோற்றும் பொழுது, உயர்ந்த நிலையில் உள்ளவர்களுடன் உரையாடும் பொழுது- இப்படி ஒரு துணிவை ஏற்படுத்திக் கொள்வார். எடுத்த கருமமும் சிறப்பாக நிறைவுறும். நேற்றும் கூட, பரிசோதனை வகுப்பில் மார்பிலே கட்டியுள்ள ஓர் இளம் பெண்ணைச் சோதிக்கும் பொழுது இந்தத் துணிவுதான் துணை நின்றது.

தூரத்தே, பூங்காவின் ஒரு மூலையில் ஜஸ்மின் தனியே நிற்கிறாள். ஐயர் ஜஸ்மினை நெருங்கி விட்டார்.

''எனது பிறந்ததின வாழ்த்துக்கள்'' - ஐயரின் குரல் தடுமாறுகிறது.

''தாங்க் யூ'' - ஜஸ்மின் இனிமைக் குரலில் கூறுகிறாள்.

ஐயர் அவளை உற்றுப் பார்க்கிறார். அவள் மிக அழகாகவும் ஆடம்பரமாகவும் இருக்கிறாள்.

''இன்று எனது 'பேர்த்டே பார்ட்டி'க்கு வருகிறீர்களா...? ... பிளீஸ்.'' - அவள் அழகாக மன்றாடுகிறாள்.

''குறை நினைக்க வேண்டாம். எனக்கு வர வசதியில்லை'' இன்னும் ஐயரின் குரல் தடுமாறுகிறது.

''ஏன் தனியே நிற்கிறீர்கள்?'' - ஐயர் கேட்கிறார்.

''ஒருவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.''- முகம் புன்னகைக்க, கண்கள் சிறகடிக்க ஜஸ்மின் கூறுகிறாள்.

''நான் அவசரமாகப் போக வேண்டும்'' - ஐயர் குரலில் அவசரம் காட்டுகிறார்.

நேரத்தைக் கடத்தினால், தன்னிடம் உருவாகியுள்ள துணிவு மறைந்து எடுத்த கருமம் கைகூடா விட்டால்...!

சுற்றுமுற்றும் பார்க்கிறார் ஐயர். ''எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள்'' என்று சொல்லிக்கொண்டே ஜஸ்மின் அருகில் — மிக அருகில் சென்று.... மின்னல் வேகத்தில் மிகுதி நடந்தது.

ஐயருக்கு உடல் வியர்த்துக் கொட்டுகிறது, நடுங்குகிறது. அவளை நிமிர்ந்து நோக்கத் திராணியில்லை. ஒன்றுமே பேச முடியவில்லை. நாக்கு ஒட்டிக் கொண்டதோ? அவளது முகத்தைப் பார்க்காது ''சீயூ'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டார்.

''சேறியோ''

ஜஸ்மினின் குரலும் தடுமாறுவதுபோல ஐயருக்குக் கேட்கிறது.

'ஜஸ்மின் என்னைப்பற்றி என்ன நினைப்பாளோ? இதைப் பற்றி யாருக்கும் சொல்வாளோ? இதுகாலவரையும் அவளுக்கு என்னைப்பற்றியிருந்த நன்மதிப்பினை ஒரு நொடியில் நானே நாசமாக்கி விட்டேனே. பழைய கௌரவத்தை நான் எப்படி நிலைநிறுத்துவது? நான் அவளிடம் அடிக்கடி பேசும் 'ஆத்மா'வின் உயர்வு இதுதானா? என்னை ஒருநாள் அவள் 'மகாத்மா காந்தி' என்றாளே! நான்...? நான்...?'

ஐயரின் மனக்கண்முன் அனுலாவும் ஆனந்தனும் தோன்றுகிறார்கள். தான் கண்ட, கேட்ட இதுபோன்ற பல சம்பவங்களை நினைக்கிறார்.

'பலர் செய்கிறார்கள்; நான் செய்யக்கூடாதா?'

ஆனந்தன் என்றே சொன்னன் — 'விஞ்ஞான உண்மைகளை அறிய நாம் பரிசோதனைகள் செய்கிறோம். இது பால் உணர்ச்சியின் ஆழத்தை அறிய நான் செய்த பரிசோதனை. அனுலா பரிசோதனைப் பொருள் — அவ்வளவுதான்'

'நான் இன்று செய்ததும் பரிசோதனையா? ஜஸ்மினும் மார்பிற் கட்டியுள்ள பெண்போலப் பரிசோதனைப்பொருளா? இது விஷப் பரீட்சையா? இன்று இது செய்கிறேன். நாளை ஏதேதோ செய்ய மனம் துணியுமே. நான் எனது ஒழுக்க வரம்பினை மீறிவிட்டேனு?'

'ஆனந்தன் சாதிக்கு இது பொருந்தலாம். என் சாதிக்கு? தொழிலைக் கொண்டுதானே சாதியை வகுத்தார்கள். இன்று நானும் ஆனந்தனும் ஒரே சாதிதானே?'

ஐயருக்கு ஒன்றுமே தெளிவாகப் புரியவில்லை. ஆனந்தனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆவல் பிறக்கிறது. தெளிவு பெற, ஆனந்தன் சொன்ன கருத்துக்களை நினைத்துப் பார்க்கிருர்.

'மனித வாழ்க்கை என்றுமே தேங்கிக் கிடந்ததில்லை. கருத்தற்ற கட்டுப்பாடுகள் கால ஓட்டத்தில் வாரியடிக்கப் பட்டுவிடும். நம்மையறியாமலே நாமும் வளைந்து கொடுக்கிறோம். பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினுலே'

ஐயர் சமீபத்திற் தனது குடும்பத்தில் நடந்த சம்பவங்களை எண்ணிப் பார்க்கிருர்.

ஐயர் சமீபத்திற் தனது வீட்டில் வேளாள குலத்தைச் சேர்ந்த ஒருத்தனுடன் சமபோசனம் செய்தார். முன்பெல்லாம் ஐயர் வீட்டுக்குப் போனுல் ஆனந்தனுடன் ஐயர் சமபோசனம் செய்ய முடியாது. அன்று தண்டபாணிக் குருக்

கள் கோவிலுக்குப் போய்விட்டார். 'லோங்ஸ்' போட்டுக் கொண்டு ஐயர் வீட்டுக்கு வந்திருந்த ஆனந்தனை மேசையி லிருத்தி, ஐயரும் கூட இருந்து சாப்பிட்டார் ஐயரின் அம்மா தோள்மீது முந்தானையை இழுத்து விட்டுக்கொண்டு, தாயன்புடன் பரிமாறிக் கொண்டிருந்தாள். அவள் யாரா வது வருகிறார்களா என அடிக்கடி வீட்டு வாசலைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

இப்பொழுது ஐயரின் தங்கைக்குத் திருமணப் பேச்சு நடக்கிறது. பேசுமிடம் பிராமணர் குலம்தான். ஆனால் முன் பெல்லாம் அவர்களை இவர்கள் ஏதோ குறை உண்டென்று முழு மனதுடன் சபை சந்திக்குச் சேர்ப்பதில்லை. இப்பொ ழுது திருமணத் தொடர்பு வேறு கொள்ள முனைகிறார்கள்.

சரஸ்வதி பூஜை ஆரம்பித்தாற் புத்தகம் தொடக் கூடாதாம். ஆனால் மருத்துவ இரண்டாமாண்டுத் தேர்வும், சரஸ்வதி பூஜையும் ஒரே காலத்திற்றான் நடைபெற்றன.

இன்று நடந்த இச் சம்பவமும் இப்படி ஒரு காலமாற் றத்தின் விளைவா?

அம்பிகாபதி ஐயரின் மூளை சிந்தனைச் செறிவின் எல்லை யை அடைந்து விட்டது. தொடர்ந்து சிந்திக்க முடியவில்லை.

ஐயர் வீதியைத் தாண்டி நெடுஞ்சாலைக்கு வந்து விட் டார்.

மாட்டு வண்டி ஒன்று அவர் முன் ஊர்ந்து செல்கிறது.

கார் ஒன்று அவர் அருகில் வந்து நிற்கிறது.

ஐயர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறார்.

ஜஸ்மினுடன் ஒரு வாட்டசாட்டமான வாலிபன்.

"இவர் மிஸ்டர் ஜோன்சன், எஞ்சினியர், எனது காதலன்."

அவள் வெட்கம் எதுவுமில்லாது, ஒளிவு மறைவின்றிக் கூறுகிறாள்.

வெட்கத்துடன் ஐயர் கை குலுக்குகிறார். அதே நேரத்தில் ஐயரை அவனுக்கு அறிமுகம் செய்து வைக்கிறாள் ஜஸ்மின்.

''இவர் மிஸ்டர் ஐயர், மருத்துவக் கல்லூரி 'போய் பிறண்ட்' ''

ஐயர் ஒரு கணம் விக்கித்து நிற்கிறார். சிறிது நேரம் சம்பிரதாயமான உரையாடல் நடைபெறுகின்றது. அவன் உருவம் போலப் பேச்சும் கம்பீரமாக இருக்கின்றது.

''சந்தித்ததிற்கு மிக மகிழ்ச்சி'' என்று கூறி, மீண்டும் கைகுலுக்கி எல்லோரும் பிரிகின்றனர்.

ஐயர் அவள் கூறிய அந்த அறிமுக வார்த்தைகளை மீண்டும் நினைவுபடுத்தி எடை போடுகிறார். முன்பெல்லாம் ஐயரை யாருக்காவது அறிமுகம் செய்யும்பொழுது, 'மிஸ்டர் ஐயர் — எனது சக மாணவன்' என்றுதான் சொல்லுவாள். இன்று மட்டும் ஏனோ 'போய் பிறண்ட்' என்றாளே!

'அவள் ஏற்றி வைக்கிறாள், நான் இங்கு எனது ஒழுக்க வரம்பினை மீறித் தலை குப்புற வீழ்ந்து கிடக்கிறேன்.'

நெடுஞ்சாலையில் மெல்ல ஊர்ந்து வரும் மாட்டு வண்டியைத் தாண்டி முன்னுக்கு வந்து விட்டார் ஐயர். சிறு தூரத்தில் மிக வேகமாகச் சென்ற கார் ஒன்று திடீரென்று 'பிறேக்' போட்டு நிற்கிறது. பாதசாரியொருவன் மயிரிழையிற் தப்பிக் கரை சேர்கிறான். மீண்டும் கார் வேகமாகப் போகிறது.

ஐயரின் காதுகளில் மாட்டு வண்டியின் சில்லுகள் கல்றோட்டில் எழுப்பும் ஒலிகளும், மாட்டின் சலங்கைச் சத்தமும் தேய்ந்து ஒலிக்கின்றன ஐயர் செல்லும் அந்த நெடுஞ்சாலை நீண்டுகொண்டே போகிறது.

— 1968

# மூட்டத்தினுள்ளே...

அந்தத் தோட்டத்துப் பணியக் கணக்குக்கு இன்று அரிசி போடும் நாள். காலையிற் 'பெரட்டு'க் களமாகவும். பகலும் அந்தியும் கொழுந்து மடுவமாகவும் இருக்குமிடம் இப்பொழுது அரிசி மடுவமாகக் காட்சி தருகிறது.

தோட்டத்துப் பையன்கள், பென்சன் எடுத்த கிழடுகள், வேலைக்குப் போகாதவர்கள் கையிலே குட்டிச் சாக்கு. உறை, கடுதாசிப் 'பேக்' சகிதம் கூடி நிற்கிறார்கள். பயல்கள் போடும் காட்டுக் கூச்சல் 'ஸ்டோர்க்கீப்பர்' போடும் அதட்டலில் அமுங்குகிறது.

வாரத்தில் ஒரு முறைதான் 'ஸ்டோர்க் கீப்பர்' அரிசி போடுவார். இன்று அரிசியுடன் கொச்சிக்காயும், பருப்பும், மாசியும் — அரிசி போடும் நாளென்றால் தோட்டத்தில் ஒரே கொண்டாட்டம். அன்றைக்குச் சோறு வயிறாரச் சாப்பிடலாம். அரிசி போடுவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பே பலருக்கு அரிசி முடிந்து விடும். சோறு கண்காணாத அமுதாகி விடும். அப்புறம் சோறு அடுத்த கிழமை அரிசி போட்ட பிற்பாடுதான். இவர்கள் உழைப்பே அரிசிக்குத் தானே! இப்பொழுதெல்லாம் வேலை நாட்கள் வெகுவாகக் குறைந்து, பலரின் உழைப்பு அரிசிக்கே போதாது 'செக்றோ' வில் அரிசிக் கடனாகி விடுகிறது.

அரிசி மூட்டைகளும் மா மூட்டைகளும் சுவர் ஓரத்தில் மலையாகக் குவிந்து கிடக்கின்றன. 'ஸ்டோர்க் கீப்பர்' செக்

ருேலில் — 'பெரட்டு' வாக்கில் பேர் வாசிக்க, அரிசி போடும் பெரியசாமி நிறுத்துப் போடுகிருன். 'ஸ்டோர்க்கீப்பர்' கடைக் கண்ணுல் பெரியசாமியைப் பார்த்துக்கொண்டு, தனது பிழைப்புக்கு ஒத்துழைக்கிருனு என்பதை நோட்டமிடுகிருர்.

''மாரிமுத்துக் கங்காணி கறுப்பையா... அரிசி பன்னெண்டு... மாவு பதனெட்டு...''

''ரெண்டாவது பெரட்டு... ஒண்ணுவது மூக்காயி...''

பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும் — ஒரு பயல் கூட்டத்தை மெல்ல விலக்கி முன்வந்து, பக்குவமாகக் குட்டிச் சாக்கை விரித்து அரிசி பிடிக்கிருன்.

''ஏய்... பயலே! நீ மூக்காயி மவந்தானே... பேரு காளிமுத்துதானே...?''

அதட்டற் குரலில் வினவுகிருர் 'ஸ்டோர்க் கீப்பர்.'

''ஆமாங்கய்யா ..'' என்று கூறிவிட்டு, அரிசி, மா, கொச்சிக்காய், பருப்பு. மாசி - இவைகளையெல்லாம் மூட்டையாகக் கட்டி, மூட்டையைத் தோளில் வைத்துக்கொண்டு எங்கோ பார்வையைச் செலுத்திய ஐயாவின் கடைக்கண் பார்வை தன்மேல் விழ, ''ஐயா... செலாங்க...'' என்று பெரிய மனுஷன்போலக் கைகளை உயர்த்திக் கூனிக் குறுகி 'சலாம்' வைத்து விட்டுத் தெப்பக் குளத்து லயத்தை நோக்கி நடக்கிருன் காளிமுத்து.

அவன் முன் செல்லும் பாதையும், லயன்களும் மூட்டத்துள் மூழ்கிக் கிடக்கின்றன.

காளிமுத்துவுக்கு வாய் ஊறுகிறது. 'நான்கு நாட்களுக்குப் பிறகு இன்றைக்குச் சோறு சாப்பிடப்போகிறேனே' என்ற ஆவல்! 'கொலம்புத்தண்ணிக்கு'க் கொச்சிக்காயும், மாசியும், பருப்பும் சேரப் போகும் திருப்தி. காலையிலே சாப்பிட்ட ரொட்டி பசித் தீயிற்கு இரையாகி வயிறு காய்ந்து விட்டது.

(2)

காளிமுத்து இன்று காலை தொடக்கமே இதற்கு ஆயத்தங்கள் செய்யத் தொடங்கி விட்டான். பாப்பாப்பிள்ளையை மடுவத்தில் விட்டுவிட்டு, 'மிலாறு' பொறுக்கப் போனான். தோட்டத்தில் விறகுப் பாட்டுக்குப் பெருங் கஷ்டம். சின்னத்துரை இந்த விஷயத்தில் 'ரொம்பக்' கண்டிப்பு. தேயிலைக் காட்டில் இருந்த 'குத்துக்கட்டை'யைப் பறித்ததற்காக மேற்கணக்கில் இரண்டு பேருக்கு வேலை நிற்பாட்டப்பட்டிருக்கிறது.

'மிலார்' க்கட்டுடன் காளிமுத்து வருவதைப் பழைய மலையிற் கொழுந்தெடுத்துக் கொண்டிருந்த மூக்காயி மனப்பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறாள். மூக்காயியின் விரல்கள் மொட்டையும், அதற்கருகில் உள்ள இரண்டு இலைகளையும் லாவகமாகப் பறித்துக் கூடையை நிரப்பும் பணியில் ஈடுபடுகின்றன. அவளது மனமோ வாழ்க்கையெனும் மலைக்காட்டில் அலைகிறது.

காளிமுத்து அவனது அப்பனை உரித்து வைத்தது போன்ற தோற்றம். மூக்காயியின் கண்கள் கலங்குகின்றன.

மூக்காயி தன் கணவன் படுக்கையிற் கிடந்த அந்த ஐந்து நாட்களையும் எண்ணிப்பார்க்கிறாள்.

பத்தாம் 'நெம்பர்' கவ்வாத்து வெட்டிவிட்டு வீட்டுக்கு வந்த பழனியாண்டி இழுத்துப் போர்த்துக் கொண்டு கிடப்பதை, கொழுந்து நிறுத்துவிட்டு வந்த மூக்காயி கண்டதும் அவளுக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது.

'அவரு ஒரு நாளும் இப்புடிப் படுக்க மாட்டாரே...'

பழனியாண்டிக்கு ஒரே இடுப்புவலி, குளிர்காய்ச்சல். கிழிந்த சாக்கைக் கீழே விரித்து, அடுப்படியில் கிடந்த பல-

கைக் கட்டையைத் தலைக்கு அணையாக வைத்து, உடல் முழுவதையும் இந்த வருடம் கம்பளிக் காசில் வாங்கிய போர்வையால் மூடிக் கொண்டு ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தான். மூக்காயி போர்வையைச் சிறிது விலக்கித் தன் சில்லிட்ட கையை நெற்றியில் வைத்துப் பார்த்தாள். ''அம்மாடி... நெருப்பாயில்ல கொதிக்குது...''

மருந்துப் போத்தலை எடுத்துக்கொண்டு மேற்கணக்கி லுள்ள தோட்டத்து ஆஸ்பத்திரியில் மருந்து வாங்கிக்கொண்டு வந்து கொடுத்தாள். 'டாக்டரய்யா' கொடுத்த 'வில்லை'யை யும், மருந்தையும் குடித்ததும் பழனியாண்டிக்குச் சிறிது நேரம் உடம்பு தேவலையாக இருந்தது. அந்த வேளையில் அன்று மலையில் நடந்த சங்கதியை மனப்பூரிப்புடன் மூக் காயிக்குச் சொன்னான்.

பெரியதுரை கவ்வாத்துக் காட்டிற்கு வந்தால் லேசில் போகமாட்டார். ஒவ்வொரு மரமாகப் பார்த்துக் கொண்டு வந்தார். பழனியாண்டியின் 'பொட்டு' வெட்டு துரைக்கு 'ரொம்பப்' பிடித்துவிட்டது. மற்றவர்களின் வெட்டில் குற்றம் 'மிச்சம்' இருப்பதாகத் துரை கண்டு பிடித்து விட்டார். கவ்வாத்துக் கங்காணியை லயத்துக்கே விரட்டி விட்டார். ''ஏய்... பழனியாண்டி இந்த வேலக்காட்டுக்கு இன்னக்கி நீத்தான் கங்காணி...'' - மலையதிரச் சத்தமிட் டுச் சொன்னார் பெரியதுரை. துரை தன்னை 'டெம்பேரிக்' கங் காணியாக்கிய உயர்வை, விருது கிடைத்தது போல எண் ணிக் கொண்டே, மூக்காயிக்குச் சொன்னான்.

காய்ச்சல் மீண்டும் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது. சிறு நீருடன் இரத்தம் போகிறது. மூக்காயிக்கு இரவு தூக்கமே இல்லை. விடிந்ததும் டாக்டரய் யாவின் பங்களாவுக்குப் போய் வட்டிக்கடனாக வாங்கிய ஐந்து ரூபாவை நீட்டி ஊசி போடும்படி மன்றாடினாள். லயத்துக்கு வந்த 'டாக்டரய்யா' பழனியாண்டியின் உடம் பிற்குள் 'ஊசி மருந்தை' ஏற்றிவிட்டு மறுநாள் டவுன் ஆஸ்

பத்திரிக்கு கொண்டு போகும்படி யோசனை கூறிவிட்டு, கை யோடு லயத்தையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டுப் போய் விட் டார்.

பழனியாண்டி காய்ச்சல் வேகத்தில் ஏதோவெல்லாம் அலட்டினுன்.

''நா... கங்காணி... ஆமா பழனியாண்டிக் கங்காணி... ஏய் முனிசாமி... இழுத்து வெட்டு வெட்டாத... பொட்டு வெட்டு வெட்டு... சுலோப்பு பாரு... அசும்பு வாது வைக் காம பழய வாத எடுத்து.. புதுவாது ஒதுக்கி கரெக்கட்டா.. வெட்டு... இதானே முனிசாமி நம்மளுக்கு சோறு போடுற சீதேவி... வேலயில குத்தங் கொற இருந்தா கொழுந்து வருமா...?''

சுகமில்லாத ஆளைப்பார்க்க வந்த பெருமாள் பூசாரி பழனியாண்டிக்குக் 'கங்காணிப் பேய்' பிடித்துவிட்டது என்ற முடிவுக்கு வந்தான். மூக்காயி நம்பி விட்டாள். 'கை ராசிகார நம்ம டாக்டரய்யாவோடே ஊசிக்கும் கேக்கலியே?'

'ஆமா இந்தத் தோட்டத்ல அந்தக் கங்காணிப் பேய் ரொம்பப் பேரோட உசுர குடிச்சிருக்கு...'

பெருமாள் பூசாரியின் இலவச ஆலோசனையால் மூக்கா யிக்குப் பலவிதச் செலவுகள். அன்றிரவே சாமி பார்த்தார் கள். மறுநாட் காலை உதயமாகு முன்பே 'பேய்' ஓடிவிடு மென்ருன் பூசாரி. ஆனுல்...! மறுநாள் உதயமாகு முன்பே பழனியாண்டி இந்த உலகத்தை விட்டே ஓடிவிட்டான்.

கலங்கும் கண்களுடன் காலங்காலமாக ஐம்பொறிகளில் ஊறிப்போன சகிப்புத் தன்மையால் தெளிவு பெற்று, தூரத்தே 'கான்'களைத் தாண்டி 'மிலார்'க் கட்டுடன் வரும் மகன் காளிமுத்துவைப் பார்க்கிருள் மூக்காயி.

'காளிமுத்து தல எடுத்ட்டா ஏங் கஷ்டமெல்லாங் கொறஞ்சிடும்... பெரிய தொரயோட காலக் கையப் புடுச்சி கெஞ்சி பேரப் பதிஞ்சிட்டா... அப்பறம் எடுக்ற சம்பளத்ல வயிறு காயாம சாப்புட்டுக்கலாம்... பில்லுவெட்டு, கானு வெட்டு, முள்ளுக்குத்து, கவ்வாத்து எல்லாத்லயுமே அப்பனைப்

போல காளிமுத்தும் கெட்டியா இருப்பான்... நம்ம கையில மடியில நாலு காசு பொழங்கும்... அப்பறம் அவனுக்கு கல்யாணங் காச்சிய முடிச்சி வச்சிப்புடலாம்... அப்பறம் சின்ன புள்ளயும் தலையில கூடய போட்றும்... கடசி நேரத்ல நிம்மதியா வீட்டுல ஒக்காந்திறலாம்'

கவ்வாத்து மலையாய்க் காய்ந்து கிடக்கும் அவள் வாழ்க்கை மீண்டும் துளிர் விட்டு... புது அரும்பு கட்டி... மட்டக் கொழுந்து மலையாகி...

## (3)

காளிமுத்து ஓட்டமும் நடையுமாகத் தெப்பக்குளலயத்து அந்த அரைக் காம்பராவிற்கு வந்து விட்டான்.

தலையிலிருந்த குட்டிச் சாக்கைப் பக்குவமாக 'லைசன்ஸ்' கல்லில் இறக்கி வைத்து விட்டு, காற்சட்டைச் 'சேப்'பிலுள்ள சாவியை எடுத்து, நுனிப் பாதங்களை நிலைப்படியில் ஊன்றிக் கதவிற் சரிந்து, எக்கியபடி காம்பராக் கதவுப் பூட்டைத் திறக்கிறான். நடுக்கதவைத் தள்ளிக்கொண்டு அரிசியுடன் உள்ளே நுழைந்ததும் உட்காம்பரா இருண்ட குகை போலத் தெரிகிறது. இரவிற்கும் பகலுக்கும் வித்தியாசந் தெரியாத அந்த இருட்டறைக்குள் முன்பின் பழக்கமுள்ளவர்கள்கூட பார்த்துத்தான் நுழைய வேண்டும். மூக்காயியின் உடமைகளான தட்டுமுட்டுச் சாமான்கள், தகரப் பெட்டி, படுக்கையாகப் பயன்படும் பழைய படங்குச் சுருள், ருக்கை — இவைகள் காம்பராவின் பெரும் பகுதியை ஆக்கிரமித்துக் கொள்ள, மிகுதி உட்செல்லும் நடைபாதையாய் இருக்கிறது. இந்த நடைபாதையிற்தான் அவர்கள் இரவில் முடங்கிக் கொள்வார்கள்.

இருட்டுடன் ஐக்கியமாகிய காளிமுத்து பழக்கப் பட்ட தன் கைகளாற் தடவிக் காம்பரா மூலையில் வைக் கப்பட்டிருந்த அரிசிப் பானைக்குள் அரிசி முழுவதையும் சித றாமல் கொட்டி வைக்கிறான்.

ஆயா வருவதற்கு முன்பு அவன் வழக்கமாய்ச் செய்ய வேண்டிய வற்றைக் கவனிக்கிறான். பிள்ளை மடுவத்திலிருந்து தூக்கிக் கொண்டு வந்த பாப்பாப் பிள்ளையைக் காம்புராவுக் குள் கிடத்துகிறான். நன்றாக இருட்டிவிட்டது. 'குப்பி லாம் பை' ஏற்றி வைக்கிறான்.

இனி, சோறு ஆக்க வேண்டியதுதானே!

மூலையிற் கவிழ்த்துக் கிடந்த பானையை எடுத்துக் கழு வித் தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைக்கிறான். காலையில் கொண்டுவந்த 'மிலார்'க்கட்டை அவிழ்த்து அடுப்பை மூட்டு கிறான். அதற்கு மேல் அவன் எதுவும் செய்யமாட்டான். அவனுக்கு விருப்பம்தான். ஆனால், அவன் ஆயா விட்டாற் தானே!

இரண்டு ஆண்டுகளுக்கு முன் தீபாவளி மாதத்தில் நடந்த அந்தச் சம்பவம் காளிமுத்துவை உலைக்குப்போட அரிசி யைத் தொடவிடாது,

அன்றும் அரிசி போடும் நாட்தான். அவன் அப்பன் தவறிய அதே ஆண்டு. மிலாறுக்குப் போக, பிள்ளை பார்க்க, அரிசி பிடிக்க, தேத்தண்ணி கொண்டு போக என்ற காரணங் களிற்காகத் தோட்டப் பள்ளிக்கு விடை கொடுத்த ஆண்டு.

அரிசி மடுவத்திலே பிடித்துக் கொண்டுவந்த ஒரு வார அரிசி முழுவதையும் உலைக்குள் போட்டு விட்டான். அவ னுக்கு அளவு தெரியவில்லை. பானை கொள்ளாது பாதி அடுப் புக்குள் சிந்தி விட்டது. நடந்த பின்புதான் அவனுக்கு விஷ யம் புரிந்தது.

நல்ல கொழுந்துக் காலம் அது. மூக்காயி கொழுந்து நிறுத்துவிட்டு வீட்டுக்கு வர நன்ருக இருட்டி விட்டது. காளிமுத்துவின் கூத்தைக் கண்டதும் அவளுக்கு வயிறு பற்றி எரிந்தது. அவளுக்கு அன்று மனமும் சரியில்லே. முன்னரே அவள் முகம் வாடிய கொழுந்தாகியிருந்தது.

கொழுந்து நிறுத்துவிட்டு லயத்துக்குத் திரும்பிய மூக்காயியைக் கணக்கப்பிள்ளே கூப்பிட்டார்.

''ஏ... மூக்காயி...தவறிப்போன ரெங்கன் கெழவனேடே அரக்காம்பராவுக்கு நீ போவணும்.. ஒங்காம்பராவ அரிசி போடுற பெரியசாமிக்கி குடுக்கச் சொல்லிட்டாரு சின்ன தொர...என்னு சொல்றது வெளங்குதா...?''

''என்னுங்க சாமி...அந்த அரக்காம்பரா எனக்கு எப்புடிங்க போதும்?''

''ஒரு ஆளு வேல செய்யிற ஒனக்கு அரக்காம்பரா பத்தாதுனு... மூணு பேரு வேல செய்யிற அவுங்க குடும்பத்துக்கு ஒரு காம்பரா போதுமா? காம்பரா பத்தாதுனு சின்னவரக் கேட்டாங்க... அவரு குடுத்துட்டாரு... பட்டம் வச்சி அடிச்சிருக்கிற ரெங்கன் கெழவனேடே அரக்காம்பராவுக்கு ஒன்னேய போவச் சொல்லிட்டு, ஓங்காம்பராவ அவுங்களுக்கு குடுக்க சொல்லிட்டாரு...?

''சாமி! ஒங்க கொலந்த குட்டிங்களுக்கு ரொம்ப புண்ணியமா போவுங்க . .. எப்புடியாவது தொரைகிட்ட சொல்லிப்பாருங்க...''

மூக்காயி மன்ருடினுள்.

''தொர சொன்னு சொன்னதுதான்.... இனி எத சொன்னுலும் ஒத்துக்றமாட்டாரு.''

மூக்காயிக்கு இனி நிற்பதில் பிரயோசனமில்லே என்பது தெரிகிறது. லயத்தை நோக்கிப் போகிருள். அவளுக்கு எல்லாமே தெளிவாகப் புரிகிறது.

'காம்பராவ குடுன்னு சின்ன தொர சொல்லி இருக்க மாட்டாரு... கணக்கப்புள்ள அவரோட இஷ்டத்துக்கு செஞ் சிப்புட்டு தொரய சாட்ருரு'

கொஞ்சநாட்களாகப் பெரியசாமியின்சம்சாரமான வீரம் மாவைக் கணக்கப்பிள்ளை 'சுத்திக்கிட்டு'த் திரிந்தார். அந்திக் கொழுந்துக்கு வரும்போது அவள் ஆட்களோடு வருவதில்லை. பிந்தித்தான் வருவாள்; தொங்கலிலேதான் நிரை பிடிப்பாள்

'எங்க வூட்டுக்காரரு உசுரோட இருந்தா கணக்கப்புள்ள இப்புடிச் செஞ்சிருப்பாரா...? தட்டிக்கேக்க ஆளு இல்லன்னு தெரிஞ்சதும், தான் நெனச்சமாதிரி செய்யிருரு... இதப் போயி தொரை கிட்ட சொன்னு கணக்கப்புள்ள நெதமும் கரச்ச குடுக்கத் தொவங்கிடுவாரு... அப்பறம் பத்துசீட்டை கையிலவாங்கிக்கிட்டு கறுத்தரேட்ல நிக்கவேண்டியதுதான்.'

மனதிற்குள் புகைந்து கொண்டிருந்த வேதனை மகனின் நடத்தையைப் பாரதூரமான குற்றமாக்கியது. அவள் தன்னை மறந்தாள். எரிந்து கொண்டிருந்த கொள்ளிக்கட்டை யைத் தூக்கி மகனை ஓங்கி அடித்தாள் மறுகணம் அவனை அணைத்துக்கொண்டு அவளும் அழத் தொடங்கிவிட்டாள். பகலில் நடந்த சம்பவத்தையும், மகனைத்தான் கொள்ளிக் கட்டையால் அடித்ததையும் எண்ணிப் பார்த்தவள், கால மாகிவிட்ட தன் கணவனை நினைத்து அழுது தீர்த்தாள். பின்பு மகனைத் தூக்கிக் கொண்டு மூன்று மைல்களுக்கப்பா லுள்ள தோட்ட ஆஸ்பத்திரிக்குப் போனாள்.

அன்று பொங்கிய சோற்றை இருவருமே சாப்பிடவில்லை.

## (4)

காளிமுத்து வைத்த உலை கொதித்துக்கொண்டிருக்கி றது. நல்ல கொழுந்துக் காலம். காம்புக் கரைச்சலால் மூக்கர்யி கொழுந்து நிறுத்துவிட்டு வருவதற்கிடையில் நன் ருக இருட்டி விட்டது.

மூக்காயி கூடையை வீட்டு வாசலிலே தொங்கவைத்து விட்டுக் காம்பராவிற்குள் போகிருள். படங்கை அவிழ்த்து வைத்து விட்டு, காலையில் மழையில் நனைந்து பின் உடற் சூட்டால் காய்ந்து போயிருந்த சேலையைக் கட்டிக் கொண்டு, அளவாக அரிசியைக் களைந்து, கழுவிப் போடு கிருள்.

குடத்திற் தண்ணீர் இல்லை. அவர்களது தெப்பக்குள லயத்துப் பீலிக்குக் கடந்த ஒரு வருட காலமாகத் தண்ணீர் வருவதே இல்லை. கணக்கப்பிள்ளை ஐயா, டாக்டர் ஐயா, சின்னதுரை, பெரியதுரை எல்லோருக்குமே லயத்திலுள்ள வர்கள் 'பிராது' பண்ணியும் பிரயோசனம் எதுவுமே இல்லை.

மேட்டு லயத்துப் பீலிக்குத் தண்ணீர் பிடிக்க மூக்காயி குடத்துடன் போய்க்கொண்டிருக்கிருள். தூரத்தே பாறை களுக்கிடையே ஓடி வரும் நீர் 'திடுதிடு'வென எழுப்பும் சத்தம் அந்தி நேரத்து அமைதியிற் தெளிவாய்க் கேட்கி றது.

'மிலா'ரை எடுத்து அடுப்புக்குள் திணிக்கிருன் காளி முத்து. புகை எழும்பும் அடுப்பைக் குனிந்து ஊதுகிருன். தீப்பொறிகள் 'பட்-பட்' டென்ற சத்தத்துடன் வெடித்துச் சிதறுகின்றன; கண்கள் எரிகின்றன.

'ஸ்டோர்' அடுப்பின் சத்தம் பானைக்குள்ளே கேட்கிறது. சோற்றுப் பருக்கைகள் சுழன்று சுழன்று கொதிக்கின்றன. அரிசி அவியும்போது ஏற்படும் வாசனை காளிமுத்துவின் மூக்கைக் குடைந்து, உமிழ் நீரைச் சுரக்க வைத்து, அடி வயிற்றைக் கிளறுகிறது.

பச்சை விறகினுல் மீண்டும் அடுப்பு புகையைக் கக்கு கிறது. அவனது வயிறும் எவ்வளவு நேரம்தான் பொறுத் திருக்கும்? இப்பொழுது அவனுக்கு வேண்டியது சோறு. திடீரென்று அவனது மூளையிலே ஒரு யோசனை பளிச்சிடு கிறது.

'லாம்புள இருக்ற எண்ணய அடுப்புள ஊத்துணு...'

'குப்பி லாம்பை' எடுக்கிறுன். அதற்குள் எண்ணெய் இல்லே. லாம்பிற்குள் எண்ணெய் ஊற்ற வேண்டும். எங்கு வைத்து ஊற்றுவது? 'ஸ்தோப்'பின் அரைவாசியான அடுப்புத் திண்ணேயிலே பாத்திரங்களும், வேறு சாமான்களும் ஒன்றுக்குமேல் ஒன்ருகக் கிடக்கின்றன. 'லாம்பெண்ணேக் கலனே' எடுத்து, அடுப்புக்கு மேலிருக்கும் தட்டில் 'குப்பி லாம்பை' வைத்து அதன் வயிற்றை நிரப்புகிருன்.

ஒரு கணத்திலேதான் அது நடந்தது. கை நழுவிய 'குப்பி லாம்'பும், 'லாம்பெண்ணேக்கல'னில் உள்ள எண்ணெயும் ஏக காலத்தில் அவன்மேல் தெறிக்கின்றன. நெருப்புக் குபீரென்று அவன் உடலேப் பற்றுகிறது.

''ஆயா...!ஐயோ...ஆயா...!!''

நெருப்பினுள்ளே அவன் உடல் புழுவாய்த் துடிக்கிறது.

பணியக்கணக்கு லயத்துச் சனமே கூடிவிட்டது.

'யூனியன்' தகராறினுல் பத்து வருடங்களாகப் பேச்சு வார்த்தை இல்லாமலிருந்த கறுப்பையாத் தலேவர் காளிமுத்துவைப் பற்றிய நெருப்பை அணேத்து, காந்தலேப் போக்கச் சுளகால் விசுறுகிருர்.

''ஐயோ நாம் பெத்த ராசாவே...'' என்று அலறிக்கொண்டு, கூட்டத்தை விலக்கியபடி காம்பராவிற்குள் நுழைந்த மூக்காயி மகனேக் கட்டி அணேக்கிருள்.

லொறி எடுத்து, டாக்டரைக் கூட்டிவர 'ஸ்டோ'ரை நோக்கி ஓடுகிருர் தலேவர்.

பெரிய துரையின் கன்றுக்குட்டிக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதற்காக மிருக வைத்தியரை அழைத்துவர லொறி 'டவுணு'க்குப் போய் விட்டது. பெரியதுரையும்சின்ன துரை

யும் தோட்டத்து 'வானில்' 'கிளப்'புக்குப் போய்விட்டார் கள்.

இங்கே...!தெப்பக்குள லயத்துத் தொங்கற் காம்பரா வில்...

''மவனே...என்னப் பெத்த ராசா...என்னை தனிய வுட்டுட்டு பொயிட்டியே...''

மூக்காயியின் பிரலாபக் குரல் அந்த ஆறடி அகலமுள்ள அரைக் காம்பராவிற்குள் அமுங்கித் தேய்கிறது.

—1970

# இது இவர்களுக்குத் துணை.

படுக்கு மறையில் உள்ள படிக்கும் மேசையின் அருகே உட்கார்ந்திருந்த கதீஜாவிற்குப் பாடத்திற் கவனம் செல்ல வில்லை.

பாடப் புத்தகம் அவள் முன் விரித்து வைக்கப்பட்டிருக் கிறது.

பெருநாளைக்கு இன்னும் இரண்டு நாட்கள்தான் இருக் கின்றன.

சாச்சி பெருநாளைக்கு மெஷினில் சட்டை தைத்துக் கொண்டிருப்பது இரவின் அமைதியிற் தெளிவாகக் கேட் கிறது.

இரண்டு நாட்களுக்கு முன் வேலைக்குப்போன கதீஜாவின் வாப்பா இன்னும் வீடு திரும்பவில்லை. இன்று இரவுதான் வருவதாகச் சொல்லிச் சென்றுள்ளார்.

மூலையிற் சுவர்களுடன் நெருக்கமாகப் போடப்பட் டிருந்த கட்டிலில் தூங்கிக்கொண்டிருக்கும் தனது நான்கு தங்கைகளையும் பெருமூச்சுடன் பார்க்கிருள் கதீஜா.

அவளது பார்வை, மறுமூலையிற் சாக்குக் கட்டிலிலே தன் னந்தனியாகத் தூங்கிக்கொண்டிருக்கும் சாச்சியின் மகன் மேற் செல்கிறது. வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக்கொள் கிருள்.

'ஓ... பெருநாளைக்கி சாச்சியோட பெருநாள் தொழுகைக்குப் போறல்ல... புது உடுப்பு உடுக்கிறதில்ல.'

தனது நெஞ்சிலே கடந்த நான்கு மாதங்களாக வளர்ந்து வரும் வெறுப்பை இப்படித்தான் வெளிக்காட்ட வேண்டுமெனக் கதீஜா முடிவுக்கு வந்திருக்கிறாள்.

வாப்பா இப்படி மாறுவார் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை.

'வாப்பாவ மட்டும் குத்தம் சொல்ல ஏலாது; ஆச்சிமா தான் வாப்பாவுக்கு எல்லாம் சொல்லிக் குடுத்து இப்படி மாத்திப் போட்டாங்க'

ஒருகணம் ஆச்சிமாமேல் கதீஜாவிற்கு 'ஜுவால்' வருகிறது. மறுகணம் உம்மா 'மவுத்'தானதுக்கு அப்புறம் தங்களுக்காகப் பட்டு வரும் கஷ்டங்களை எண்ணும்போது ஆச்சிமாமேல் இரக்கம் சுரக்கிறது.

உம்மாவின் 'மவுத்'துக்கு வந்த ஆச்சிமா திரும்பிப் போகவில்லை. தாய்பிள்ளைக்காரர்கள் மூன்றும் நாள் 'கத்தத்'திற்குப் பிறகு தங்களது வீடுகளுக்குத் திரும்பும் பொழுது, ஆச்சிமாவும் போய்விடுவாள் என்றுதான் கதீஜாவும் எண்ணினாள். ஆனால் ஆச்சிமா வீடு திரும்பவில்லை.

இடிந்துபோய், பைத்தியம் பிடித்தவனைப்போல உட்கார்ந்திருந்த வாப்பாவுக்கு ஆறுதல் சொல்லுவாள்.

''மகேன் காசீம் நீ இப்புடி இரிந்துக்கிட்டா புள்ளகுட்டிகள யாரு பாக்கிறது? எழுந்திரு... ஆகவேண்டியதப்பாரு''

கதறியழுத காக்காவுக்கு எவ்வளவோ புத்திமதிகள் கூறி அவன் வேலை செய்யும் இடத்திற்கு அனுப்பி வைத்தாள் ஆச்சிமா.

கதீஜாவிற்கும் அவளது நான்கு தங்கைகளுக்கும் ஆறுதலாக ஆச்சிமா அவர்கள் வீட்டில் இருந்து விட்டாள்.

''ஆச்சிமா...! எப்ப உம்மா வருவாங்க?'' என்று சின்னவள் கேட்கும் போதெல்லாம், ''ஒரு பயணம் போயிருக்காங்க நாளைக்கு வந்திடுவாங்க'' என்று எவ்வித உணர்வுமின்றிச் சொல்லுவாள் ஆச்சிமா.

காசிமின் உம்மாவின் உடன் பிறந்தவள்தான் அலிமா ஆச்சி. அவளுக்கு ஒரு மகன்தான். அவன் பெரிய வியாபாரம் செய்து சீரும் சிறப்புமாக வாழ்கிறான்.

அலிமா ஆச்சி சின்ன வயதிலே குடும்ப வாழ்க்கையை ஆரம்பித்துக் குறுகிய காலத்தில் விதவையாகி விட்டாள். அவளின் அரவணைப்பிற்தான் காசிமும், அவனது சகோதரர்களும் வாழ்ந்தார்கள்.

தன் மகன் வீட்டிற் பல வசதிகளுடன் வாழ்ந்து வந்த போதிலும் அலிமா ஆச்சிக்குக் காசிம் வீட்டுக்கு வந்தவுடன் இவர்களை விட்டுப்பிரிய மனம் வரவில்லை.

முகமதுலெப்பே ஹாஜியாரின் 'முகம்து ப்ரன்ஸ் போர்ட்டேஸ்'சில் 'றைவரா'க் காசிம் வேலை செய்கிறான்.

காசிம் எப்பொழுதும் 'லோங்றிப்'தான் ஓடுவான். சில வேளைகளில் வீட்டை விட்டுப் போய்விட்டால் மீண்டும் திரும்ப இரண்டு, மூன்று நாட்கள் செல்லும். அலிமா ஆச்சியின் பொறுப்பிற்தான் காசிமின் பிள்ளைகள் இருப்பார்கள்.

வாப்பாவின் இம் மாற்றத்திற்கு அத்திவாரமாயிருந்த அந்த உரையாடலை இப்பொழுது எண்ணிப் பார்க்கிறாள் கதீஜா.

அன்று அவள் பாடசாலையிலிருந்து வந்து உணவருந்திக் கொண்டிருக்கும் போது வாப்பாவும் ஆச்சிமாவும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

யாரோ ஒரு புதிய பெண்ணைப்பற்றி ஆச்சிமா சொல்லிக் கொண்டிருந்தாள்.

''அவ ஒரு சீதேவி... அல்லா நல்லவங்களத்தான் சோதிக்கிறுன் தங்கமான மனசு உடைய மரியம் பீபீக்கு 'சயத்தான் பிடிச்ச' ஒருத்தன் மாப்பிளையாக வந்து வாச்சான்... அந்த அநியாயக்காரனையும் மரியம் எவ்வளவு அன்பாப் பாத்திச்சு; அதையும் அல்லா பறிச்சிட்டான்... பாவம் மரியம், ஒரு ஆம்புளைப் புள்ளையையும் வச்சிக்கிட்டு கடைக்கு ஆப்பம் சுட்டுக் கொடுத்து 'ஹயா'த்தைக் கொண்டு போகுது. அவ 'இத்தா' இரிந்தத நா பாத்து வாயில கையை வச்சிட்டன்...நாங்கூட இப்புடி 'இத்தா' இரிக்கல.''

வாப்பா ஒன்றுமே பேசவில்லை; தலை குனிந்தபடி இருக்க ஆச்சிமாதான் தொடர்கிறுள்;

''மகேன் நா இன்னும் எத்தன நாளைக்கி ஒங்கூடவே இரிப்பேன்? இந்தச் சின்னஞ் சிறுசுகள அப்புறம் பாக்றதுக்கு யார் இரிக்கா? நல்லா யோசிச்சுப் பாரு... நம்ம கதீஜா ரொம்பக் கெட்டிக்காரி. ஒவ்வொரு பயணமும் கிளாஸ்ல ஒண்ணுவதா வருது. கதீஜாவை பெரிய படிப்பு படிக்க வைக்கணும்''

கதீஜா பக்கத்தில் இருப்பதைப் பற்றி யோசிக்காமல் ஆச்சிமா தன்பாட்டிலே சொல்லிக்கொண்டிருக்கிறுள்.

கதீஜாவிற்குப் புரிந்து விட்டது.

'வாப்பாவுக்கு ரெண்டாம் 'நிக்காஹ்' பண்ண ஆச்சிமா திட்டம் போடுறுங்க... எனக்கு வெளங்கல்லேன்னு அவங்க நெனக்கிறுங்க, நா எப்பவும் சின்னப் புள்ளயா? இந்த வருஷ நோன்புப் பெருநாள் முடிஞ்சாக்கா எனக்கு பதிமூணு முடிஞ்சு பதினாலு பொறக்குது... நம்ம வகுப்பிலே பாதி புள்ளைக்கு மேல ஆளாயிரிச்சு'

இந்தப் பேச்சுவார்த்தை நடந்துகொண்டிருக்கும்போது தான் அது நடந்தது.

ஹாஜியார் அந்த ஊரிலே பெரிய புள்ளி. 'டவுணி' லுள்ள பாதிக்கு மேற்பட்ட கடைக்கு அவர்தான் சொந்தக்காரரர். காசிம் வாடகைக்கு இருக்கும் இந்த வீடுகூட அவரின் சொத்துத்தான்.

ஹாஜியாருக்கு காசிமிலும் பார்க்க ஐந்தாறு வயது கூடவே இருக்கும். இப்பொழுது, நான்கு கலியாணங்களை யும் 'தலாக்' சொல்லிவிட்டு, ஐந்தாவது கலியாணமாக இதனைச் செய்கிறார்.

கதீஜாவின் சிறிய வீட்டிற்கு அண்மையிற்தான் ஹாஜியாரின் பெரிய பங்களா இருக்கிறது.

மிக ஆடம்பரமாக, ஆயிரம் ரூபாவுக்குமேல் விருந்து வைத்து ஹாஜியாரின் கலியாணம் நடைபெற்றது. மாப்பிள்ளை வீட்டிலிருந்து 'ஸலவாத்து' முழக்கத்துடன் ஆரம்பித்த கலியாண ஊர்வலத்தை வாப்பா, ஆச்சிமா இவர்களுடன் கதீஜாவும் தங்கள் வீட்டு வாசலில் நின்று பார்த்தாள்.

ஹாஜியார் இப்பொழுது கலியாணம் செய்த புது மனைவியைக் கதீஜாவிற்கு நன்றாகத் தெரியும். 'ரொம்ப' அழகானவள், ஹாஜியாரிலும் பாதி வயதுதான் இருக்கும்.

முதலாம் வகுப்பிலே கதீஜாவிற்கு ஆசிரியையாக இருந்தவள் அவள். அந்த டீச்சருக்கு ஐந்து தங்கச்சிமார்கள்; அவளது வாப்பா இளவயதிலேயே 'மவுத்'தாகி விட்டார். காக்காமாரோ தம்பிமாரோ இல்லாத டீச்சர்தான் குடும்பத்தை நடத்தி வந்தாள்.

வாப்பா இருக்கும்பொழுதே யாரோ முதலாளிக்கு ஈடு வைத்த அவர்களது வீடு காலக்கெடு முடிந்துவிட, ஹாஜி

யாரின் பிள்ளைகளுக்கு 'டியூசன்' சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த டீச்சர் அவரது பண உதவியை நாடினாள். அது இப்பொழுது கலியாணத்தில் முடிந்திருக்கிறது.

ஹாஜியாரின் கலியாணம் நடைபெற்ற அன்றிரவு, வீட்டில் நடந்த அந்த உரையாடலை உன்னிப்பாகக் கவனித்தாள் கதீஜா.

''உம்மா! பாத்தீங்களா ஹாஜியார் கல்யாணத்தை எல்லாமே மோசமா பேசுறாங்க, கேலி பண்றாங்க... அது மாதிரித்தானே நம்மளையும் நாளைக்கு மத்தவங்க கேலி பண்ணுவாங்க. .''

''மகேன் துட்டு உள்ளவங்களுக்கு கல்யாணம் ஒரு ஆடம்பரம். நம்ம நெலவரத்தில உள்ளவங்களுக்கு கல்யாணம் ஒரு தொணை... ஓ!.. நம்மளுக்கு இது ஆதரவுதர்ற குடிக்கிற கஞ்சிபோல... அவங்களுக்கு வெறிதர்ற குடிபோல''

கதீஜா விக்கித்துப்போனாள்.

'முக்காட்டை மறந்துங்கூட எடுக்காமல் இருக்கும் — சின்னவயதில் விதவையாகிவிட்ட ஆச்சிமாவா இப்படிப் பேசுறாங்க!'

ஆச்சிமா வாப்பாவை எப்படியோ சரிப்பண்ணிவிட்டாள்.

வாப்பாவை இரண்டு நாட்களுக்கு லீவுபோட்டுக் குழந்தைகளைப் பார்க்கச் சொல்லிவிட்டு ஆச்சிமா போய்விட்டாள்.

முக்காட்டை நன்றாக இழுத்துப் போட்டுக்கொண்டு புறப்படும்பொழுது ''காசிமெ ஒரு மாதிரி சரிக்கட்டி எடுத்துக்கிட்டேன். மரியம் என்ன கூத்துப்பண்ணுவாளோ?'' என்று தன்பாட்டில் முணுமுணுத்துக் கொண்டே சென்ற ஆச்சிமா திரும்பும் பொழுது சிரித்துக் கொண்டே வீட்டிற்குள் புகுந்தாள்.

வாப்பாவுக்கு ஆடம்பரம் எதுவுமின்றியே இரண்டாம் 'நிக்காஹ்' நடந்தது. இருவீட்டாரின் தாய்பிள்ளைகள் மாத்திரம் வந்திருந்தார்கள். கதீஜாவின் தங்கைகளுக்கு ஒரே கொண்டாட்டம். தன் காக்காவைக் கவனித்துப் பார்த்தாள் கதீஜா. அவனது முகத்தில் கவலை கவிந்திருந்தது. வழக்கம் போல யாரிடமும் கலகலப்பாகப் பேசவில்லை. கலியாணம் நடைபெற்ற தினத்தன்றுதான் வீட்டுக்கு வந்திருந்தான். "வேல ரொம்ப இரிக்கி, மொதலாளி ரெண்டுநாள் லீவு மட்டும்தான் கொடுத்தாரு" என்றுசொல்லிவிட்டு மறுநாளே போய்விட்டான் கதீஜாவின் காக்கா.

உம்மாவின் 'மவுத்'துக்கு வந்த ஆச்சிமா வாப்பாவின் இரண்டாவது 'நிக்காஹ்' முடிந்த உடன் தன்வீடு திரும்பி விட்டாள்.

உம்மாவின் மறைவால் ஏற்பட்ட வெற்றிடம் இன்னுமொரு பெண்ணால் நிரப்பப்படுவதை கதீஜா மனதார ஒப்ப வில்லை. சாச்சியுடனும், அவளது மகனுடனும் கதீஜா அதிகம் பழகுவதில்லை. முக்கிய தேவை இருந்தால் மட்டும் பேசுவாள். அதுவும் சுருக்கமாகவே இருக்கும்.

சாச்சி அன்பாகத்தான் எல்லோரையும் உபசரிக்கிறாள். 'புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டும்' என்று 'இங்கிலீஸ் டீச்சர்' அடிக்கடி சொல்லுவாங்க அப்படித்தான் இவங்களும் இருப்பாங்களோ?

கதீஜா மூன்று ஆண்டுகளுக்கு முன் 'மவுத்'தான தன் உம்மாவை அடிக்கடி எண்ணிப் பார்ப்பாள். வாப்பா செய்தது பெரிய குற்றமாகப்படுகிறது. சாச்சி காட்டும் அன்பு வெறும் நடிப்பாகத் தோன்றுகிறது.

"ஓ...நான் பெருநாள் தொழுகைக்கு சாச்சியோடே போகாட்டி வாப்பா ஏன் போகல்லே எண்டு யோசிப்பாங்க தானே!'

கதீஜா பாடப் புத்தகத்தை மூடி வைக்கிறாள். அவளுக்குத் தன்னால் இனித் தொடர்ந்து படிக்க முடியாதென்பது நிதர்சனமாகப் படுகிறது.

சாச்சி தையல் முடிந்து குசினிக்குள் ஏதோ செய்து கொண்டிருப்பது போலத் தெரிகிறது.

அடுத்த வீட்டுச் சுவர்க்கடிகாரம் பத்தடித்து ஓய்கிறது. கதீஜா மேசை விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கைக்குப் போகிறாள். அவளுக்குத் தூக்கம்வர மறுக்கிறது; புரண்டு புரண்டு படுக்கிறாள்.

'வாப்பா வந்திட்டாங்க போலிரிக்கி'

சாச்சியின் வரவேற்புக் குரலிலிருந்துதான் வாப்பா வீட்டுக்கு வந்திருப்பதை அவள் அறிகிறாள்.

''ரொம்ப இளைச்சுப் போனீங்களே...! வேலக்கி போறப்போ தடுமன் புடிச்சிருந்திச்சி; லேசா தலை வலிக்குதுன்னு சொன்னீங்க. நா ரொம்ப யோசிச்சுக்கிட்டு இருந்தன்... புள்ளையல் எல்லாம் நல்ல சொகமா இரிக்கி... கதீஜா இப்பதான் படிச்சிட்டு படுக்க போச்சி... இரிங்க, கொஞ்சத்தில கோப்பி ஊத்திட்டி வர்றேன்.''

வாப்பா 'ரொம்ப'க் களைத்திருக்கிறார் போலத் தெரிகிறது. ஒன்றுமே பேசவில்லை. கோப்பியுடன் திரும்பி வந்த சாச்சிதான் தொடர்ந்து பேசுகிறாள்.

''சுடுதண்ணி வைச்சிரிக்கேன் .. குளிச்சா மேலுக்கு நல்லா இரிக்கும். நா பெருநாளைக்கு புள்ளைகளுக்குச் சட்டை தைச்சிட்டேன் - நம்மளுக்கு புது உடுப்பு இல்லாட்டியும் பரவால்ல புள்ளைகள் சந்தோசமா இரிக்கணும். கதீஜாவுக்கு எங்கிட்ட இருந்த பட்டுத் துணியில சட்ட தைச்சிருக்கேன். கதீஜாவுக்கு அவளிட செகப்பு நெறத்துக்கு சட்டை ரொம்ப அழகா இரிக்கும்.''

''ஆமா...மரியம் கதீஜா ஏதோ பொஸ்தகத்துக்கு சல்லி மூணு ரூவா கேட்டிச்சி... போற அவசரத்ல மறந்துட்டேன். அப்புறம் ஒங்கக்கிட்ட கேக்கலையா?',

''நா சல்லி கொடுத்து கதீஜா பொஸ்தகம் வாங்கிரிச்சி''

''மரியம், ஒங்களுக்கு எங்கையிரிந்து சல்லி கெடைச்சிச்சி. .? அரிசி பத்தாதுன்னு பாண் வாங்க கணக்காத் தானே மூணு ரூவா கொடுத்தேன்.''

''ஓ... அதத்தான் கதீஜாகிட்டக் கொடுத்தேன். புள்ளை களுக்குச் சோறுக்க அரிசி கணக்கா இரிந்திச்சி. நா எம் பாட்ட ஒரு மாதிரி ஒப்பேத்திக்கிட்டேன். நாம நோன்பு இரிக்கிறதில்லையா?''

'இந்தா மரியம் நாம ஒழைக்கிறது வகுத்துக்குத் திங்கிற துக்குத்தானே; சொவரு இருந்தாத்தானே சித்திரம் வரைய லாம்''

''நா ஒங்கலுக்கு மொதல்லேயே சொல்ல இருந்து மறந் திட்டேன். நம்ம சின்னது பரீதா வவுத்ல பூச்சிபோல இரிக்கி சாப்பாட்டை விரும்புறு இல்ல. பெருநாள்முடியட்டும் டாக் டர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போயிட்டு காமிச்சு மருந்தெடுக் கணும்''

இவர்களது உரையாடல் கதீஜாவிற்குத் தெளிவாகக் கேட்கிறது. அவள் திகைத்துப் போகிறுள்.

முன்பெல்லாம் வாப்பா 'லோங்றிப்' வேலை முடிந்து திரும்பும் பொழுது யாருமே வரவேற்பதில்லை, ஆச்சிமா பகல் முழுவதும் ஓடியாடி உழைத்த களைப்பில் அயர்ந்து தூங்கி விடுவாள். சோர்வுடன் வரும் காசிம் எத்தனையோ நாட்கள் கதவைத்தட்டி, கதீஜாவை எழுப்பி வீட்டிற்குள் புகுந்திருப் பான்,

இப்பொழுது மரியம், காசிம் எத்தனை மணிக்கு வேலை யாற் திரும்பிவந்தாலும் அவன் வரவை வழிமேல் விழிவைத் துக் காத்திருப்பாள். காசிம் சில வேளைகளில், வருவதாகச் சொல்லிவிட்டுப்போன இரவில் தவிர்க்கமுடியாத காரணங் களால் வரமுடியாமற் போய்விடும். மரியம் அன்றிரவைத் தூங்காமலே கழித்துவிடுவாள்.

கதீஜா ஆச்சிமாவையும், அவள் சொன்னவற்றையும் இப்பொழுது எண்ணிப்பார்க்கிறாள்.

''நம்ம நெலவரத்ல உள்ளவங்களுக்கு கல்யாணம் ஒரு தொணை... ஓ..., நம்மளுக்கு இது ஆதரவு தர்ற குடிக்கிற கஞ்சிபோல...''

'ஆச்சிமா ஒலகத்தை நல்லா தெரிஞ்சு வைச்சிருக்காங்க. அவங்க கொண்டாந்த சாச்சி நல்ல கொணம் உள்ளவங்க ளாத்தானே இருப்பாங்க.'

'வாப்பாவைச் சாச்சி எப்புடியெல்லாம் கவனிக்கிறாங்க வாப்பா வேலக்கி போறப்போ லேசா தடுமன் தலைவலின்னு சொன்னாங்க. நான் ஸ்கூல் வேலையில அத மறந்துட்டேன். சாச்சி எவ்வளவு நெனவு வச்சி கேட்டாங்க; அவங்க எங்க மேல எவ்வளவு அக்கறை எடுக்கிறாங்க. பட்டினி கெடந்து நம்மல வளக்கிறாங்க. . ஆச்சிமா சொன்னாங்க சாச்சிக்கு தங்க மான மனசுன்னு. அது நெசந்தான். குடும்பங்கிறது ரொம் பக் கஷ்டமான பாடம். லேசுல விளங்கிக்க ஏலாது'

கதீஜாவின் கண்கள் கலங்குகின்றன.

இதுவரை பீடித்திருந்த விரக்தியும் மயக்க நிலையும் நீங் கிக் கதீஜாவிற்குப் புதுத்தெளிவும் நம்பிக்கையும் பிறக்கின் றன.

'பெருநாளைக்கி சாச்சி தைச்சு வச்சிருக்ற புதுச்சட்டை யைப் போட்டுக்கிட்டு நாங்க எல்லாம் தொழுகைக்குப் போவ

ணும். காக்காவையும் உடனே வரச்சொல்லிக் கடிதம் போட ணும்'

சாச்சியும் வாப்பாவும் பேசிக்கொண்டிருக்கும் விருந் தையிலிருந்து வரும் விளக்கின் ஒளியில் - சாச்சியின் மகன் அந்த அறையில் ஆதரவற்ற அனுதையாகத் தனிமையிற் சாக்குக் கட்டிலில் படுத்திருப்பது போல அவளுக்குத் தெரி கிறது.

கதீஜா மெல்ல எழுந்து வந்து அவனை அள்ளி அணைத்துத் தூங்கிக் கொண்டிருந்த தங்கைமார்களுக்கு அருகில் படுக் கப் போடுகிறுள்.

அவன் அந்த நித்திரையின் மயக்கத்திலும் அருகில் உள்ளது ஒரு மனித ஜீவன் என்பதை மானசீகமாக அறிந்த தைப் போலச் சின்னத் தங்கையின் மேல் கால்களையும் கைகளையும் பரப்பிக் கட்டி அணைக்கிறுன்.

தம்பியும் தங்கைகளுமாக அந்த ஐவர்களும் ஒரே வரிசையிலே படுத்திருக்கும் அழகை வைத்த கண் வாங்காமற் பார்த்துக்கொண்டிருக்கிறுள் கதீஜா.

— 1971

# இனி ஒரு விதி...

காந்தி அச்சகம் இரைச்சலுடன் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் வாசலில் அச்சுக்கூடச் சின்னையா கால் கடுக்க, காலை தொட்டு மதிய உணவின்றி முதலாளியின் வரவை நோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார்.

அச்சுக்கூடச் சின்னையாவுக்குப் புத்திபூர்வமாக எதனையும் சிந்திக்க முடியவில்லை. கடந்த ஒருவருட காலமாக நடந்து வரும் வில்லங்கங்களிற்குத் தனது விதிதான் காரணமாக இருக்கவேண்டுமென்று நினைக்கிறார்.

தனது காலபலனைப் பற்றிச் சாத்திரியார் முருகேசர் எழுதிக் கொடுத்தவற்றை எண்ணிப்பார்க்கிறார் அச்சுக்கூடச் சின்னையா.

'இப்பொழுது ஏழரைச்சனி நடக்கிறது. இதனால் தொழில் வகையில் சஞ்சலம், அலைச்சல், மனநிம்மதிக் குறைவு இருக்கும். பொருட்செலவு, பணநெருக்கடி, கடன்தொல்லை, குடும்பச்சிக்கல் முதலியன உண்டாகும். பிள்ளைகளினாலே கவலைகள் வரும், தேகசுகம் பாதிக்கப்படும். ஏழரைச் சனியுடன் அட்டமத்து வியாழனும் இருப்பதால் இன்னும் ஆறு மாதங்களுக்கு மிகக் கஷ்டகாலமாகும்...'

அவரை ஆட்டிப்படைக்கும் பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல. எதனையும் அவர் மனம் தாங்கினாலும் தினமும் வேலை

செய்யும் தொழிலகத்தில் அவருக்கு இருக்கும் தொல்லைகளை எண்ணும்பொழுது அவர் உள்ளம் துயரத்தில் ஆழ்கிறது.

ஐம்பத்தைந்து வயதை எட்டிப்பிடிக்கும் அவர், கடந்த நாற்பது ஆண்டுகளாகக் காந்தி அச்சகத்திற் தொழில் புரிகிறார். காந்தி அச்சுக்கூடத்தை முதலாளி கனகலிங்கம் நிறுவிய பொழுதே அவர் சேர்ந்துவிட்டார். காந்தி அச்சகத்திலேலே கனகலிங்கம் பெரிய வீடு, ஊரில் நிலபுலங்கள் இன்னும் பலவும் பெற்று, அந்த ஊரிலே பெரிய புள்ளியாக, கௌரவ மனிதனுகக் கணிக்கப்படலானார்.

மூவருடன் ஆரம்பிக்கப்பட்ட அச்சகம் முப்பது பேருக்கு மேற்பட்ட ஊழியர்கள் வேலைசெய்யும் நிறுவனமாகிவிட்டது. ஊரில் அச்சுக்கூடச் சின்னையா என்ற பேர் எடுத்து, நாளாந்தம் வேலைசெய்து, உண்மை ஊழியனுக உழைத்து, திருமணம் செய்து ஆறுபிள்ளைகளுக்குத் தந்தையாகி, கட்டிய வீட்டுக் கடன் தொல்லை தீராது வாழ்க்கையைப் போராட்டமாகக் கழித்து வருகிறார். 'இதுதான் என் தலை எழுத்து' என்பார் அவர்.

இன்று காலையில் வேலைக்கு வந்த சின்னையாவுக்கு வேலை கொடுக்க மறுத்துவிட்டார் மனேஜர். பிற்பகல் ஒரு மணிக்கு முதலாளியைச் சந்திக்க வேண்டுமென்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

நேரம் இரண்டுமணியாகிவிட்டது. இன்னும் முதலாளி வரவில்லை.

காந்தி அச்சகத்திற்கு முதலாளி கனகலிங்கத்தின் மகன் இராமலிங்கம் புதிய நிர்வாகியாக வருகிறான் என்ற செய்தி கேட்டவுடன் சின்னையா மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தார். கனகலிங்கம் உயிருடன் இருக்கும் பொழுது அளித்தவாக்குக்களை மகனுவது நிறைவேற்றி வைப்பான் என்ற நப்பாசை அவருக்கு. சீதனச் சுமையால் இன்னும் திருமணமா

காது முப்பது வயதை அடைந்துவிட்ட மூத்த மகளின் திருமணத்தை நிறைவேற்றி வைக்க, படித்துத் தொழி லின்றி அலையும் மூத்த மகனுக்கு ஒரு தொழிலைப்பெற— இவற்றுக்கெல்லாம் இராமலிங்கம் உதவுவான். நாளொரு வண்ணமாக ஏறிக்கொண்டிருக்கும் வாழ்க்கைச் செலவை ஈடு செய்ய முடியாமலிருக்கும் தனது சம்பளத்தைக் கூட்டிக் கேட்கலாம்; என்றெல்லாம் மனக்கோட்டை கட்டிவைத் திருந்தார். விடிவுகாலம் தனக்குப் பிறக்கப்போகிறது எனக் கற்பனையிலே களிப்படைந்தார்.

இராமலிங்கத்தை அவர் 'தம்பி' என்றுதான் முன்பெல் லாம் அழைப்பார். கனகலிங்க முதலாளியின் ஏக புத்தி ரன் அவன். அவர் அவனை எடுக்கி வளர்த்தவர். அச்சுக் கூடச் சின்னையா அச்சுக்கூட வேலைகளுடன் கனகலிங்கம் வீட் டில் எடுபிடி வேலை செய்ததால் இராமலிங்கத்தின் வாழ்க் கை வரலாறு அவருக்குத் தெரிந்ததே. இராமலிங்கம் பள் ளிக்கூடத்தில் படித்த காலத்தில் செய்த கூத்துக்களைக் கண்டு கனகலிங்கம் மனம் நொந்து சின்னையாவுக்குக் கூறு வார். சின்னையா 'தம்பிக்'கு எத்தனை புத்திமதிகளைச் சொல்லி யிருப்பார். வாலிபப் பிராயத்தை அடைந்துவிட்ட இராம லிங்கம் பருவக்கோளாறினால் ஒழுக்க வரம்பினை மீறிச் செய்த திருவிளையாடல்களைக்கண்டு காந்தி பக்தனான கனக லிங்கம் மகனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டார். கனக லிங்கத்தின் மனைவியின் தாயுள்ளம் களவாக அவனுக்கு உதவி செய்தது; தூதுவனாக்ச் சின்னையா இருப்பார். 'தம்பி' யின் பழக்க வழக்கங்களைக் கண்டு ஒரு தந்தைக்குள்ள சிரத் தை கொண்டு சின்னையா எத்தனை தடவைகள் நெஞ்சங் கலங்கியிருக்கிறார். இராமலிங்கம் தந்தை இறந்ததும் ஏதோ விதத்திலே திருந்தி அச்சுக்கூட நிர்வாகத் துறையில் விசேட பயிற்சிபெற அமெரிக்காவுக்குப் புறப்படும் பொழுது சின்னை யாவும் தாய் போல ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் இராமலிங்கம் அமெ ரிக்காவிலிருந்து திரும்பி வந்து நிர்வாகப் பொறுப்பினை

ஏற்ருன். பதவி ஏற்ற தினம் சின்னையா முகம் மலரச் சிரித்து ஏதோ எல்லாம் பேச நினைத்து, ''தம்பி!'' என்று அழைத் தார். இராமலிங்கம் முகத்தைச் சுழித்து, அவரை அசட் டை செய்து ஒன்றுமே பேசாது ஒதுங்கிப் போய்விட்டான். புதிதாக உண்டாக்கப்பட்ட இன்னுமொரு அச்சுக்கூடம், புத்தகக் கடை போன்ற புதிய வேலைகளாலே 'தம்பி'க்கு நேரமில்லைப்போல் இருக்கிறது என்று நினைத்தார் சின்னை யா. இராமலிங்கம் மறுநாள் வேலைக்கு வரும்பொழுது வாசலில் நின்ற சின்னையாவை நோக்காது எங்கோ தன் பார்வையைச் செலுத்திக் கொண்டு அச்சுக்கூடத்திற்குள் நுழைந்தான். அன்று பிற்பகல் மனேஜர் சின்னையாவைக் கூப்பிட்டு ''உனக்குப் பழக்க வழக்கம் தெரியாது. முதலா ளிக்கு எப்படி மரியாதை அளிப்பது என்று தெரியாது'' எனக் கண்டிப்புக் குரலில் கூறி ஒரு கடிதத்தைக் கையளித் தார், சின்னையா விக்கித்துப் போனுர். 'இராமலிங்கமா எனக்குப் பழக்க வழக்கம் சரியில்லை என்று தண்டிக்கப் புறப்பட்டுவிட்டான்!'

முன்பைவிட மனேஜர் சின்னையாவுக்கு அதிகவேலைகள் கொடுத்தார். எப்பொழுதுமே சின்னையா சக ஊழியர்களை விடச் சிறிதுநேரம் கழித்துத்தான் வருவார். ஒரு கிழமைக் குள் சின்னையாமேற் குற்றம் சுமத்தப்பட்டு பிறிதோர் கடிதம் வந்தது. எட்டு மணிக்கெல்லாம் வேலைக்கு வரவேண்டுமென் றும், சரியாக எட்டு மணித்தியாலங்கள் வேலைசெய்ய வேண் டுமென்றும் கடிதத்திலே சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அவருக்குக் கடந்த சில மாதங்களாக ஒரே தலைவலி. அத் துடன் நரம்புத்தளர்ச்சியும் உடற்சோர்வும் அடிக்கடி அவ ரைப் பீடிக்கும். வைத்தியர்கள் அவர் தினமும் அச்சுக் கோர்க்கும் எழுத்துக்கள் செய்யப்பட்டுள்ள ஈய உலோகத் தின் பாதிப்புத்தான் இந் நோய்களுக்குக் காரணமாகஇருக்க வேண்டுமென்றும், ஆஸ்பத்திரியிலே தங்கிப் பல சோதனைகள் செய்யவேண்டுமென்றும் ஆலோசனைகள் கூறினுர்கள். அவ

ருக்கு எங்கு நேரம்? ஓய்வு கிடையாது. களைத்துச் சோர்ந்து ஒன்றுமே செய்ய முடியாத நிலையில் வீடு திரும்புவார். வேலை முடிந்து வீட்டுக்குப்போக ஐந்து மணிக்கு மேலாகிவிடும்.

வீட்டிலும் அவருக்கு நிம்மதி கிடையாது. அவருக்கு எத்தனை பொறுப்புக்கள்! வளர்ந்துவரும் ஆறு பிள்ளைகளுக்குச் சாப்பிடக் கொடுக்க வேண்டும். அடிக்கடி நோய் வாய்ப்படும் மனைவியைக் கவனிக்கவேண்டும். பக்குவப்பட்டுப் பலவருடங்களாகிவிட்ட மூத்த மகளைக் கரைசேர்க்க எத்தனை படலைகள் திறந்திருப்பார்; பலன் கிடைக்கவில்லை. பள்ளிப் படிப்பு முடிந்து வீட்டுக்குப் பாரமாக இருக்கும் மூத்த மகனுக்கு ஒரு சின்னத்தொழிலைப்பெற அவர் எடுக்கும் பிரயத்தனங்களும் தோல்வியாகத்தான் இருக்கிறது. அவன் விவசாயம் செய்யலாம் என்றால் சொந்த நிலமுமில்லை.

ஏழரைச்சனி முடிய எல்லாம் சரிவரும் என்று நம்பினர். நல்லகாலம்வர தன்னைப் பீடித்துள்ள நோய்களும் மாறிவிடும் என அதனைப்பற்றிச் சிரத்தை எடுக்காது விட்டுவிட்டார். இப்பொழுது தலைவலி உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. உடற்சோர்வு தினமும் வருகிறது.

தொடர்ந்து வேலை செய்ய முடியாததாலே சக ஊழியர்களின் வேகத்திற்கு அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை. வேலையிற் கவனம் இல்லை யென்றும் வேண்டுமென்றே நேரத்தைக் கடத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டு, இதற்குப் போதிய விளக்கம் தரும்படி கேட்டு, தண்டனையாக பதினைந்து ரூபாத் தெண்டம் விதிக்கப்படுமென்றும் நீண்ட கடிதம் ஒன்று அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அச்சுக்கூடச் சின்னையா கலங்கிப்போனர். காலஞ் சென்ற கனகலிங்கத்தையும் காந்தி அச்சகத்தை உருவாக்கத் தான் பட்ட கஷ்டங்களையும் எண்ணி எண்ணி மனம் நொந்தார். கனகலிங்கம் சின்னையாவிற்கு எத்தனையோ வாக்குக்களை அளித்திருப்பார். அவருக்கு அச்சுக்கூடத்தில்

ஒரு பங்கு தருவதாக அடிக்கடி சொல்லுவார். அவர் சொல்லில் நம்பிக்கை வைத்துச் சின்னையா மாடாக உழைத்தார். ஆசை வார்த்தைகள் கூறி, அவருக்குப் பணநெருக்கடி வரும் பொழுதெல்லாம் கைமாற்ருகப் பணம் கொடுத்து ஏதோ பெரிய உதவி செய்வதாகக் காட்டிக் கனகலிங்கம் பணத்தைத் தேடி வைத்துவிட்டு மறைந்துவிட்டார். பாவம், சின்னையாவிற்கு இதோ கதி.

இராமலிங்கம் முதலாளியாக வந்த பின்பு தொழிலாளர்களிடையே ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சின்னையா அதிற் சேர்ந்து கொள்ள விரும்பவில்லை. சங்கம் என்றவுடன் அவர் பயந்துவிட்டார். கனகலிங்கம் அவருக்கு ஊட்டிய அறிவு அவரைப் பயப்படுத்தியது. 'ஏன் நமக்கு வீண் தொல்லை. எமக்கு உப்பிட்டுவரும் அச்சுக்கூடத்தை எதிர்ப்பதா? இவர்கள் இளைஞர்கள் ஏதோ அனுபவக் குறைவிஞலே செய்கிருர்கள்'; சங்கத்திற் சேருவது உண்மையான விசுவாசத்திற்கு இழுக்கு என்று எண்ணிச் சங்கத்துடன் சேராது ஒதுங்கியே இருந்தார்.

சங்கத்தலைவர் ரகுநாதனுக்கு முதலாளி அளிக்கும் மரியாதையையும் அவன் சொல்லுக்கிருக்கும் செல்வாக்கினையும் எண்ணித்தனக்குள் வியப்படைவார் அச்சுக்கூடச் சின்னையா. அங்கு எழும் பிரச்சினைகளை எல்லோரும் ரகுநாதனிடம்தான் முறையிடுவார்கள். அவன் முதலாளியிடம் பேசிச் சுமூகமாகத் தீர்த்துவைப்பான்.

நேற்றுத்தான் அது நடந்தது. மனக்குளப்பத்துடன் இருந்த சின்னையா, பலமுறை திருத்தப்பட்ட 'புறாவு'க்குக் கடைசித் திருத்தம் போடும்பொழுது, பிழை முன்பு இருக்காத அடுத்தவரியிற் தவறுதலாக ஒரு எழுத்தை மாற்றிப் போட்டு—அச்சுப்பிழைவிட்டு ஒரு சமயமலரிலே பெரிய ஒரு கருத்துப்பிழையை விட்டதாலே காந்திஅச்சகத்திற்குப் பெரிய அவமானம் கிடைத்திருக்கிறது. இன்று காலை வேலைக்கு வந்த அச்சுக்கூடச் சின்னையாவிற்குக் காரணம் எதுவும் காட்டப்

படாது வேலைநிறுத்தப்பட்டு, வெளியே நிறுத்தப்பட்டிருக் கிறார்.

அச்சுயந்திரங்களின் இரைச்சல் அவரை 'உள்ளே வாவா' என்று அழைப்பதுபோல் இருக்கிறது.

காந்தி அச்சகத்திற்கு வெளியேநிற்பது அவருக்கு வேதனை கலந்த வெட்கமாக இருக்கிறது.

மீண்டும், காந்தி அச்சகத்திற்கும் தனக்கும் உள்ள தொடர்பினையும் உறவினையும் பெருமூச்சுடன் எண்ணிப் பார்க் கிறார் அச்சுக்கூடச் சின்னையா.

காந்தி அச்சுக்கூடம் ஆரம்பித்த காலத்தில் அவர்தான் அச்சுக்கோர்ப்பவர், இயந்திரம் இயக்குபவர், புத்தகம் கட் டுபவர் - எல்லாம். அப்பொழுதெல்லாம் காலால் இயக்கும் இயந்திரங்கள்தான். அவர் காலாலேதான் அவை இயங்கின. காந்தி அச்சகத்திற்கு வந்த புது இயந்திரங்கள் எல்லாமே அவர் கையாற்தான் முதல் முதலில் இயங்கும். எத்தனையோ நாட்கள் வேலை அதிகமாக இருக்கும்பொழுது இரவு பன்னி ரண்டு மணிக்குமேல் வேலைசெய்து 'ஓடர்'களை நேரத்திற்குக் கொடுத்துக் காந்தி அச்சகத்தின் நேர்மையைக் காப்பாற்றி யிருப்பார். சின்னையா அச்சகத்து வேலையின் ஒருபகுதி போலக் கனகலிங்கத்தின் குடும்பத்திற்குப் பணிவிடைகள் செய்வார். பல நாட்கள் தனது வீட்டிற்குப் போகாது கனகலிங்க முத லாளி வீட்டிலே தங்கிவிடுவார்.

'நான் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமா இது? இது என் விதியா?'

மூன்று மணிக்குத்தான் இராமலிங்கம் காரில் வந்தான்.

முக்கியமான வேலைகள் எல்லாம் முடிந்த பின்பு, நாலு மணி அளவில் மனேஜரால் சின்னையா முதலாளியின் புதிய அறைக்கு அழைக்கப்பட்டார்.

சின்னையாவுக்கு ஏனோ உடலும் உள்ளமும் பதை பதைக்கின்றன. புதிய அலுவலக அறையை ஒருகணம் நோட்டம் விடுகிறார். மிக ஆடம்பரமாக அந்த அறை இருக்கிறது.

சுவரில் மகாத்மாகாந்தி, முதலாளி கனகலிங்கம் ஆகியோரின் உருவப் படங்கள் தொங்குகின்றன. சுழலும் 'வானி'ன் கீழ் பெரிய மேசையின் அருகே உள்ள நாற்காலியில் ஆடம்பர உடை உடுத்தி இராமலிங்கம் வீற்றிருக்கிறான்.

இராமலிங்கம் அதட்டும் பாவனையிற் குரலை உயர்த்திக் கொண்டே பேசுகிறான்.

''சின்னையா! நீ பலதடவைகள் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டிருக்கிறாய். இந்தத்தடவை நீ செய்த குற்றம் பாரதூரமானது. இதற்காக நான் உன்னை வேலையிலிருந்து நீக்கப் போகிறேன்.''

சின்னையாவிற்கு இதனைக் கேட்டதும் தலை சுற்றுகிறது. ஒருகணம் வீட்டு நினைவுகள் ஓடிவருகின்றன; வேலையால் நீக்கப்பட்டாற் குடும்பத்தில் ஏற்படக்கூடிய இக்கட்டான நிலைகளை மனம் எண்ணி ஏங்குகிறது. இராமலிங்கம் சுழலும் நாற்காலியை மேசையிலிந்து சிறிது தூரம் தள்ளிச் சுழன்று கொண்டு 'சிகரெட்' புகைச் சுருளை ஊதிக் கொண்டிருக்கிறான்.

''உங்களுக்குத் தெரியும் தானே நான் இந்த அச்சுக் கூடத்திற்காகப் பட்ட கஷ்டங்கள். ஏதோ கால கஷ்டத்தில் இந்தத் தவறுகளைச் செய்துவிட்டேன். உங்கள் அப்பா கனகலிங்க ஐயாவிற்காகவாகுதல் என்னை மன்னிக்கக் கூடாதா?'' — கனகலிங்க முதலாளியின் உருவப்படத்தைப் பார்த்துக் கொண்டு மன்றாடும் குரலில் சொல்கிறார் சின்னையா.

"ஓ நீயே பிழையை ஒத்துக்கொள்கிறாய். எமது அச்சுக் கூடத்திற்கு உழைத்தபடியாலேதான் நான் உன்னை வேலை நீக்கம் செய்யாது ஒரு மாதச் சம்பளம் தருகிறேன். நீயே விலகிவிடு, இந்தா! இந்தக் கடிதத்திலே ஒப்பம்வை... ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் வேறு அச்சுக்கூடங்களுக்கு உனக்கு வேலை கொடுக்கும்படி அந்த முதலாளிமார்களுக்கு 'டெலிபோ'னில் சொல்கிறேன்"—உள்ளங்கைகள் இரண்டையும் தேய்த்தவாறு இராமலிங்கம் சொல்கிறான்.

சின்னையா எதனையோ யோசித்துக்கொண்டிருக்கிறார். ஒன்றுமே பேசவில்லை. அந்த மௌனத்திலே சென்ற மாதம் இப்படிச் சொல்லி வடிவேல் என்ற தொழிலாளியை வேலை நீக்கம் செய்து—அவன் வேறொரு அச்சகத்திற்கு வேலை தேடிச் சென்ற பொழுது அந்த முதலாளிக்கு இவனை எடுக்க வேண்டாமென்று 'டெலிபோனி'ல் சொல்லி—அவனை இன்னும் வேலை தேடி அலைய வைத்திருக்கும் தன் சாமர்த்தியத்தை எண்ணித் தனக்குள் மெச்சிக்கொள்கிறான்.

மனேஜர் திறந்த பேனாவுடன் 'ரைப்' அடிக்கப்பட்ட ஏதோ ஒரு கடிதத்தைக் காட்டி ஒப்பம் வைக்குமாறு சின்னையாவைக் கேட்கிறார். சின்னையாவுக்கு எல்லாமே மங்கலாகத் தெரிகிறது.

அழகிற்காகப் போடப்பட்டிருக்கும் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கைக்குட்டையாலே துடைத்துக்கொண்டு இராமலிங்கம் சொல்கிறான் "சின்னையா நீ இங்குள்ள சங்கத்தில் சேர்ந்து அவர்களது சொல்லைக்கேட்டால் உனக்கு இந்தச் சலுகையும் கிடையாது. நான் வேலைநீக்கம் செய்து விடுவேன். வேறு அச்சகத்திலும் உனக்கு வேலை கிடைக்காமல் வடிவேல் போலத் தெருத்தெருவாய் அலையவேண்டி வரும்."

சின்னையா சிறிதுநேரம் யோசித்துவிட்டுத் தைரியத்துடன் பேசுகிறார். "நான் வேலையைவிட்டு நீங்கப்போவதில்லை. நீங்கள் விரும்பியதைச் செய்யலாம்."

இராமலிங்கம் கோபத்தை வலிந்து வரவழைத்துக் கொண்டு, "நான் உன்னை வேலைநீக்கம் செய்கிறேன்" என்று சத்தமிட்டுச் சொல்கிறான்.

சின்னையா தைரியத்தை வரவழைத்துக் கொண்டு நிமிர்ந்து நிற்கிறார்.

இராமலிங்கம் மனேஜரை நோக்கி வேலைநீக்கம் செய்வதாக 'ரைப்' அடித்து வைக்கப்பட்டிக்கும் கடிதத்தை சின்னையாவிடம் கொடுக்கச் சொல்கிறான்.

மனேஜர் கொடுக்கும் கடிதத்தைச் சின்னையா வாங்க மறுக்கிறார்.

"ஐஸே... கெட் அவுட்... போ வெளியே..." பலத்த சத்தத்துடன் இராமலிங்கம் நாற்காலியைவிட்டு எழும்புகிறான்.

மௌனமாகச் சின்னையா வெளியே வருகிறார்.

+ + +

மறுநாட் காலை அங்கு வேலைசெய்யும் தொழிலாளர்களெல்லோரும் காந்தி அச்சகத்து வாசலிற் குழுமி நிற்கிறார்கள்.

அவர்கள் அருகில் இருக்கும் கால ஓட்டத்தால் உருமாறிப் போன காந்திச் சிலையிலே காகம் ஒன்றிருந்து எச்சமிடுகிறது.

முதலாளி இராமலிங்கத்தின் கார் அச்சுக்கூட வளவிற்குள் போகவிடாது தடுத்து ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

அவர்களது தொழிற்சங்கத்தின் புதிய உறுப்பினரான அச்சுக்கூடச் சின்னையா முன்வரிசையில் நிற்கிறார். இப்பொழுது அவர் தனது விதியைப்பற்றி எண்ணிப் பார்க்கவேயில்லை.

இராமலிங்கம் 'காரை'த் திருப்பிக்கொண்டு தனது உடமைகளுக்குச் சேதம் விளைவிக்கிறார்கள் என்று முறையிடப் 'பொலிஸ் ஸ்டேச'னை நோக்கிப் போகிறான்.

''சின்னையாவிற்கு வேலை கொடுத்தால் தான் நாங்கள் வேலைக்குத் திரும்புவோம்'' என்று சங்கத்தலைவர் சத்தமிட்டுச் சொல்வது முதலாளி இராமலிங்கத்தின் காதுகளுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

# யுகப்பிரவேசம்

கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் நடைபெறும் தையல் - கைப்பணி வகுப்பு முடிந்துவரும் தங்கம்மா கூட வந்த பெண்களுடன் வழக்கம் போலக் கலகலப்பாகப் பேச வில்லை.

பிள்ளையார் கோவில் மடத்தினைத் தாண்டும் பொழுது, ஊர்வம்பளக்கும் வாலிபர்கள் பேசுவது அவளுக்குத் தெளிவாகக் கேட்கிறது.

அந்த ஊரிலே சென்ற வாரம் தற்கொலை செய்து கொண்ட திருமணமாகாத பெண்ணைப் பற்றியே அவர்களது பேச்சு இருந்தது. இவர்களைக் கண்டதும் அவர்களது உரையாடல் உச்சகட்டத்தை அடைகிறது.

தங்கம்மா தையல்-கைப்பணி வகுப்பிற் சேர்ந்த சில மாதங்களுக்குப் பின், அந்தப் பெண் பயிற்சி முடித்துக் கொண்டு வெளியேறினாள். பழகிய சில நாட்களுக்குள் அவளை நன்றாகப் புரிந்து கொண்டாள் தங்கம்மா. அப்பெண் முன் கோபக்காரி; திடீரென்று ஒரு முடிவுக்கு வருபவள் தான். அவளும் தங்கம்மாவும் ஒத்த வயதினர். ஒருநாள் தனது குடும்பப் பிரச்சினையைப் பற்றித் தங்கம்மாவுக்குச் சொன்னாள். தன்னையொத்த பிரச்சினையைக் கேட்ட பொழுது தங்கம்மாவின் மனம் சிறிதளவு ஆறுதலடைந்தாலும், தன்னைப் போன்ற பெண்கள் பலர் வாழவேண்டிய வயதிற் பெருமூச்சு விட்டுக்கொண்டு பருவங்கடந்து 'சிறை'யிருக்கும்

சாபக்கேடு போன்ற கொடுமையை எண்ணி மனம் வெதும் பினாள். "எனது அக்கா பருவமடைந்த தன் மகளுக்கு ஒரு மாப்பிள்ளை தேடமுடியாதபடி ஒரு தடையாக நான் இருக்கிறேன். சிறிய தாயாரான எனக்கு முப்பது வயதாகி யும் ஒரு வழி பிறக்கவில்லையே'' என்று விம்மலுடன் சோகக் குரலில் அவள் சொல்லும் பொழுது தங்கம்மாவின் கண்கள் கலங்கின.

'பாவம்; அவள் இச்சமுதாயத்தின் கட்டுப்பாடுகளை மீறத் திராணியின்றி, அது தரும் துயரைச் சகிக்கவும் முடியாமல் தன் உயிரையே மாய்த்துவிட்டாள்'

தங்கம்மா சிந்தனையின் வெளிப்பாடாகத் தனக்குள் தலையையாட்டிக் கொள்கிறாள்.

'இன்று என்னை எதிர்நோக்கியிருக்கிறதே இக்கேள்வி— இதற்கு நான் கொடுக்கப் போகும் விடையும், நடந்து கொள்ளப் போகும் விதமும் தான் என் எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிக்கப் போகிறது'

தங்கம்மா கடந்த பத்தாண்டுகளாகத் தன் வாழ்க்கையில் நடந்த மாற்றங்களையும் அதன் தாக்கங்களையும் எண்ணிப் பார்க்கிறாள்.

இளைய தமையனார் 'டொக்ட'ராகக் கடமையாற்றத் தொடங்கிய ஆண்டே அவளது தந்தையாரான விதானையார் அவளுக்குச் சம்பந்தம் பேசத் தொடங்கி விட்டார். அவளுக்கு அப்பொழுது இருபது வயதுதான் இருக்கும். சாதி, குலம் கோத்திரம் முதலியவற்றை முன்வைத்து ஓராண்டு காலம் ஓடித் திரிந்தார். கைகூடாது போகவே 'மாற்றுச் சம்பந்தம்' செய்ய நினைத்துப் பல சாதகக் குறிப்புக்களைப் பொருத்தம் பார்த்தார். தங்கம்மாவுக்கே தகப்பனார் நாடிச் செல்லும் சில பெண்கள் தன் தமையனாரான 'டொக்ட'ருக்கு எவ்விதத்திலும் தோதில்லாததுபோற் தோன்றியது.

விதானையார் மனைவியின் மூலம் மகனிடம் தன் விருப்பத்தை வெளியிட்டபொழுது, அவன் இப்பொழுது கலியாணம் செய்வதில்லை என மறுத்து விட்டான். திடீரென்று ஒருநாள் அவனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. கொழும்பிலிருந்து முன்வந்த செய்தியும் சரியாகவே இருந்தது. அவன் தன் கூட வேலை செய்யும் வேதக்காரப் பெண் 'டொக்டர்' ஒருத்தியை மணந்து விட்டானாம்.

விதானையார் வீடே வெறிச்சோடிக் கிடந்தது. விதானையார் தலையைக் கீழே தொங்கப் போட்டுக் கொண்டார். மனைவி மூலையிலே முடங்கிக் கிடந்தாள். தந்தையின் வாரிசாக வரப்போவதாக எண்ணங் கொண்டிருந்த 'சின்ன விதானை'யெனப் பேரெடுத்த விதானையாரின் மூத்த மகன் துள்ளிக் குதித்தான். ''தம்பி அறப் படிச்சுக் கூழ் பானைக் குள்ளை விழுந்து போனான். அவனையும் பெண்டாட்டியையும் தேடிப் பிடிச்சுச் சுட்டுக் கொன்று போட்டுத்தான் மற்ற அலுவல் பாக்கிறது. ஆனையிறவுக்கு அங்காலை போனாப்போலை எங்கடை பெருமையையும் குலகோத்திரங்களையும் மறக்கிறதே. நாளைக்கு நாங்கள் ஊரிலை தலைநிமிந்து நடக்கலாமே? நாலு பெரிய மனுஷர் எங்களை மதிப்பாங்களோ''

வேதக்காரியைக் கட்டியதால் அவனைக் கைகழுவி விடுவதெனத் தகப்பனும் மகனும் ஏகமனதாகத் தீர்மானித்தனர். 'அவன் கலியாணம் செய்த பகுதி நல்ல சாதி வேதக்காரர், யாழ்ப்பாணத்திலை தொடர்பிருக்கு' என மூடி மறைத்து, பூசி மெழுகித் தங்கள் குடும்பப் பெருமைக்குக் குறை வராது ஊரிலே கூறித் திரிந்தனர். அதே ஆண்டு இளைய மகனின்மேல் அலாதி அன்பு வைத்திருந்த தாய் ஏற்கனவே பீடித்திருந்த நோய் சிக்கலாக்கி இறந்து விட்டாள்.

அதே ஆண்டுதான் அதுவும் நடந்தது. அந்த ஊர்க்கோவிலில் மூன்றும் திருவிழா தாழ்த்தப்பட்ட மக்களால் நடாத்தப்படும். கமக்காரர்களின் திருவிழாக்கள் அதற்கு எப்பொழுதுமே ஈடுகொடுக்க முடியாது. தாழ்த்தப்பட்ட மக்கள்

உபயமிட, கமக்காரர் ஒருவர் பொறுப்பேற்றுச் செய்வார். அன்று அவர்களது திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றுக்கொண்டிருந்தது. சின்னமேளச்சமா களைகட்டிவிட்டது. வழக்கத்திற்கு மாருக வானம் கறுத்துக் கோடை மழை ஒன்று பெய்தது. திருவிழாப் பார்க்க வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் கோவிற் தாழ்வாரத்திற்குள் ஒதுங்கினர். இளஞ்சிறுர்கள் சிலர் கோவிற் தூண்களுடன் தூவானம் படாது பதுங்கி நின்றனர். ஆட்களை ஒதுக்கி நாட்டாண்மை காட்டிக்கொண்டு நின்ற சின்னவிதானை இச்சிறுவர்களைப் பிடித்து, அடித்து உதைத்தான். ''கீழ்ச்சாதிக் காரரும் கோவிலுக்குள்ளை போகஅடுக்கோ? எங்கண்டை ஊரிலை இந்தப் பருப்பு அவியாது.'' சின்ன விதானையுடைய மதுவெறியுடன் சாதிவெறியும் சேர்ந்துவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்தனர். தீண்டக்கூடாத சாதியைச் சேர்ந்த வாலிபன் ஒருத்தன் சின்னவிதானையைக் கைநீட்டித் தீட்டிவிட்டான். திருவிழா அல்லோலகல்லோலப்பட்டது.

இச்சம்பவத்திற்குப்பின் பல குளப்பங்கள் நடந்தன. பல ஏழைச் சீவற் தொழிலாளர்களுக்குக் கஞ்சியூற்றும் பனம் பாளைகளை இரவிரவாக வெட்டுதல், தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளுக்குத் தீ வைத்தல் போன்ற ஓயாத தொல்லைகளைக் கொடுத்து அவர்களது முன்னேற்றத்தைக் கரு அறுப்பதெனக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த ஒரு கூட்டத்திற்குச் சின்னவிதானை தலைமை தாங்கினுன்.

அடுத்தாண்டு அரசாங்கத்தால் விதானைமுறை ஒழிக்கப்பட்டு கிராமசேவகர் முறை புகுத்தப்பட்டது. விதானையாருக்குப் 'பென்ஷன்' கொடுத்து, அக்கிராமத்து இளைஞன் ஒருவனைக் கிராமசேவகனுக அரசாங்கம் நியமித்தது.

இப்பொழுது கூட, சின்னவிதானையின் கொட்டம் குறைந்தபாடில்லை. ஒருநாள் ஊரின் ஒதுக்குப்புறத்திலுள்ள பெருவெளியிலே சின்னவிதானை துப்பாக்கிச் சூடுபட்டுப் பிணமாகக் கிடந்தான்.

இதற்குப்பின் விதானையார் பெட்டிப் பாம்பானார்.

தங்கம்மாவுக்கு இப்பொழுது வயது இருபத்தாறாகிவிட்டது. சொந்தக்காரர்களின் அறிவுறுத்தலினால் விதானையார் அவளுக்கு மாப்பிள்ளை தேடும் முயற்சியில் ஈடுபடலானார். திறவாத படலைகள் எல்லாம் திறந்தார். முன்பெல்லாம் விதானையார் வீட்டிற் சம்பந்தம் செய்ய அங்கலாய்த்தவர்கள், வலியவந்தவர்கள் இப்பொழுது வேறு காரணங்களைக் கூறி மறுத்து விட்டார்கள். இப்பொழுது பிரச்சினை புதிய தரிசனத்தைக் கொடுத்தது. மறைந்தாண்டுகள் வயதுரு வத்தில் வந்து மேலும் பிரச்சினையைச் சிக்கலாக்கியது. சில இடங்களில் வயது கூடிய காரணத்தாலே தங்கம்மா ஒதுக்கப் பட்டாள். அவளது வயதுக்கேற்ற மாப்பிள்ளை இருந்த இடங்களில் வேறு பிரச்சினைகள் இருந்தன. கலியாணமாகாத தங்கைக்கு மாற்றுக்கு மாப்பிள்ளை கேட்டனர், 'டொனேசன்' என்ற மகுடத்தில் ரொக்கப் பணமும் வேறு ஏதோ எல்லாம் கேட்டனர். எஞ்சியிருந்த சில சாதகங்கள் பொருந்தாது சரிவராமற் போய்விட்டன.

விதானையார் பிற ஊரிலோ, சாதியிலே தன் கணிப்பிற் கடுகளவேனும் குறைந்தவர்களிடமோ சம்பந்தம் செய்வதை அறவே விரும்பவில்லை. 'செம்பும் தண்ணியும் எடுக்காத பகுதியிலே என்ன சம்மந்தம்' என்று சிலரை ஒதுக்கினார். கடைசியில், 'காலம் வரக் கைகூடும்', 'படைத்தவன் படியளப்பான்' எனக் கூறிக்கொண்டே விரக்தியுடன் இருந்தார்

அப்பொழுதுதான் அந்தப் புது மனிதனின் சகவாசம் விதானையார் குடும்பத்திற்குக் கிடைத்தது.

நடந்து வரும் தங்கம்மா, அவர் தங்கள் வீட்டிற்கு வந்த முதல்நாளை இப்பொழுது எண்ணிப் பார்க்கிறாள்.

முன்மாடத்திலுள்ள சாய்வு நாற்காலியில் விதானையார் படுத்திருந்தார்.

"ஐயா! வணக்கம். நான்தான் இந்த ஊருக்கு மாறி வந்த புதிய கிராமசேவகர். பெயர் முருகேசு." எனத் தன்னையே தான் அறிமுகம் செய்து கொண்டு வாசலடியில் நின்முன் அந்த வாட்டசாட்டமான வாலிபன்.

'ஆரோ கோவியப் பொடியன் விதானையாக மாறி வாமுன்' என முன்னமே யாரோ கோயிலடியிற் சொல்லக் கேள்விப்பட்டிருந்தார் விதானையார். வீடுதேடி வந்தவனை உட்காரும்படி கேட்காது, விதானையார் கேட்டார். "நீ எந்தப்பக்கத்தைச் சேர்ந்தனீ?"

"நான் கிட்டிணன்ரை மூத்த மகன். அப்புவும் அம்மாவும் இந்த ஊரவர்கள். நானும் இந்த ஊரிலைதான் பிறந்து, இங்கைதான் படிச்சனான்."

"ஓ நீ இவன் கிட்டிணன்ரை மோனே. உங்கடை ஆக்கள் அந்தக் காலத்திலை எங்களுக்குக் குடிமை வேலை செய்தனவையல்லோ. எனக்கு நல்ல ஞாபகம் நீ பிறந்த உடனை இந்த ஊரைவிட்டு உங்கடை குடும்பம் போட்டுது. அப்ப பழைய விதானையார் இருக்கிமூர்...இப்ப எங்கை இருக்கிறியள்?"

"நாங்கள் கிளிநொச்சியில் குடியேற்றத் திட்டத்திலை வயல் செய்து கொண்டிருக்கிறம். அப்பு செத்துப் போனு. அம்மாவும் ஒரு தம்பியும் ஒரு தங்கச்சியும் இருக்கினம். தங்கச்சிக்குப் போன வருஷம்தான் கலியாணம் நடந்தது; தம்பியும் அம்மாவும் வயல் செய்யினம்."

"அப்ப நீ வந்த சங்கதி என்ன?" —விதானையார் அவனை அங்கிருந்து அனுப்ப அவசரப்படுவது கேட்ட கேள்வியிலும் குரலிலும் பிரதிபலித்தன.

"ஐயா! நீங்கள் இந்த ஊரில் உள்ள ஒரு பெரியவர். என் வேலையைத் திறமையாகச் செய்ய உங்கள் உதவி எனக்கு எண்

டைக்கும் தேவை. நான் பக்கத்திலுள்ள வீட்டிலேதான் வாடகைக்கு இருக்கிறன்.''

விதானையார் ஒன்றுமே பேசவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். 'இந்தப் பொடியன்ரை தகப்பன் கிட்டிணன் - மோன் பிறந்து பேர் வைக்கைக்கை முருகேசு எண்டு சொல்ல மச்சான் விதானையார் முருகன் எண்டெல்லோ பேரைப் பதிஞ்சவர். இண்டைக்கு 'முருகேசு' எண்டு பேர் வந்திட்டுது. காலம் எப்படி எல்லாம் மாறிப் போச்சு.'

''போயிற்று வாறன் ஐயா'' — கைகூப்பி வணங்கி விட்டுப் போய்விட்டான் முருகேசு.

மறுநாள் மதியம் திரும்பிய வேளை; விதானையார் வீட்டுப் பனைச் சீவ வரும் செல்லனுடன் தந்தையார் முருகேசுவைப் பற்றி ஏதோ பேசுவதைக் கேட்கவே அறையைக் கூட்டிக் கொண்டிருந்த தங்கம்மா உற்றுக் கேட்டாள். விதானையார் செல்லனின் உபயத்தை உட்கொண்டுவிட்டால் அவனிடமே உடையது விளம்புவார்.

''செல்லன் இப்ப வந்திருக்கிற விதானைப் பொடியன் ஆரெண்டு தெரியுமே. உனக்குத் தெரியுமெண்டு நினைக்கிறன் என்ரை மச்சான் பழைய விதானையாரை - என்ரை அக்காவெண்டை புருஷன்; அப்ப அவர் விதானை வேலை பாக்கிறார்; இந்தப் பொடியன்ரை பேத்தியார் எங்கடை வீட்டை வேலை செய்ய வாறவள்; இவளோடை மகளும் வாறது. நல்ல வடிவான பெட்டை; பெரிய பிள்ளையான உடனை பெட்டை வாறதில்லை. விதானையார் வீடு தேடிப் போகத் துவங்கி விட்டார்; விஷயம் எக்கச்சக்கமாகப் போக- விதானையார் வலு கெட்டிக்காரன் - கிட்டிணன் என்ற கோவியப் பொடியனைப் புடிச்சுப் பெட்டையைக் கட்டிக் குடுத்திட்டார்.''

"அப்ப, இப்ப வந்திருக்கிற விதானையாரும் ஐயாவுக்கு மருமோன்தான்"

எப்பொழுதுமே சம்யோசிதமாகக் கிண்டல் செய்வதிலே செல்லன் சூரன்.

"பிறகு சொல்லவாக்கும்..." ஆவலைத் தூண்டிக் கதையை வளர்க்க வைக்கிறான் செல்லன்.

"பிறகும் விட்டாரே மச்சான். கிட்டிணன் குடும்பத்தோடை ஊரைவிட்டே ஓடிவிட்டான்... ஏன் செல்லன் இந்தப் பொடியன்ரை முகத்திலை பழைய விதானையாற்றை சாயலும் வீறுப்பும் இருக்குத்தானே"

முருகேசு தோம்புகள், காணி விபரங்கள் முதலியன பற்றிக் கேட்டறிய விதானையாரிடம் அடிக்கடி வருவான். விதானையாருக்கு முருகேசு மேல் ஓர் இனம்புரியாத விருப்பம். அவன் இப்பொழுதெல்லாம் — முன்பு விதானையாரைச் சந்திக்க வருபவர்கள் காத்திருப்பதற்காக வைக்கப்பட்டிருந்த உயரம் குறைந்த ஆசனத்தில் உட்காருவான். விதானையாரை 'ஐயா' என்று குழைவாக அழைப்பான். அவரும் 'தம்பி' என்றுதான் அவனை அழைப்பார்.

முருகேசு கிராமசேவகனாக அந்த ஊருக்கு வந்து ஓராண்டுக்கு மேலாகிவிட்டது. அந்த ஊரில் எத்தனையோ மாற்றங்கள் இந்தக் குறுகிய காலத்தில் நடந்துவிட்டன. இயக்கமற்றுக்கிடந்த 'இளைஞர் மன்றம்' புத்துயிர் பெற்றுள்ளது. வாசிகசாலைக்குப் புதுவாழ்வு கிடைத்திருக்கிறது. கிராம முன்னேற்றச் சங்கம் அமைக்கப்பட்டு தையல்—கைப்பணி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நெசவு நிலையம் திறக்கப்பட்டுப் பெண்கள் பலர் நெசவுக்குப் போகிறார்கள்.

விதானையாரும் முருகேசுவும் ஊரில் உள்ள பிரச்சினைகள், நாட்டின் அரசியலில் உள்ள மாற்றங்கள் இன்னோரன்ன பற்றி இரவில் வெகுநேரம் வரை உரையாடுவார்கள்.

அன்றொருநாள் முருகேசுவும் தந்தையும் பேசிக்கொண்டிருப்பதைச் செவியுற்ற தங்கம்மா திகைப்படைந்தாள். தன் திருமண விடயமாக முருகேசு சிரத்தையெடுப்பதையும் முயற்சி கொள்வதையும் உணர்ந்துகொண்டாள். அவன் சில வேளைகளில் அதிமுக்கிய வேலைகள் இருப்பதையும் பொருட்படுத்தாது இதற்காகவே வருவான்.

தங்கம்மாவுக்கு முருகேசு தந்தையுடன் தர்க்க ரீதியாக, முற்போக்குடன் உரையாடுவதைக் கேட்பதில் அலாதிப் பிரியம். அவன் சில வேளைகளில் நமது கட்டுப்பாடுகளில் உள்ள கருத்தற்ற, காலம் கடந்த தன்மைகளையும் அதனால் நாம்படும் அவலங்களையும் நாசூக்காக வெளியிடுவான். விதானையார் கட்டுப்பாடுகளில் வலிந்து புனிதத்தைப் புகுத்துவார்.

'முருகேசு இவ்வளவு ஆழமாக, அழகாகப் பேச எங்குதான் கற்றுக் கொண்டாரோ? நிறையப் புத்தகங்களைப் படித்திருப்பாரோ?'

இப்பொழுதெல்லாம் தங்கம்மாவுக்குப் பொழுதை நல்ல வழியிற் போக்க ஆசிரியையாகக் கடமையாற்றும் தங்கை நூல்நிலையத்திலிருந்து நிறையப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுப்பாள். ஒருநாள் செல்லனிடம் சொல்லியனுப்ப, சில புத்தகங்களை முருகேசு கொடுத்தனுப்பினான்.

தங்கை கொண்டுவரும் புத்தகங்களைப் படிக்கும் பொழுது தங்கம்மா கற்பனையில் மிதப்பாள், உணர்ச்சிவசப்படுவாள். இலட்சிய வேட்கை வரும்; அவ்விலக்கியங்களில் வரும் மாந்தர்கள் தனிப்பிறவியாக இருக்கும். ஆனால் முருகேசு அனுப்பும் இலக்கியங்களில் அவள் சாதாரண மாந்தரைச் சந்தித்தாள். தன்னுடைய குடும்பத்தின் இன்றைய நிலைக்குரிய காரணங்களை எண்ணிப் பார்த்தாள். சமுதாய முரண்பாடுகளை எதிர்கால வளர்ச்சியின் நம்பிக்கை நோக்குடன் எழுதப்பட்ட படைப்புக்களாகவே அவை இருக்கும்.

ஒரு தடவை அவன் நாடகப் பிரதி ஒன்றினை அனுப்பியிருந்தான். அந்நாடகத்தை அவ்வூர் இளைஞர்கள் சமீபத்தில் நடித்தார்கள். நாடகத்தைப் பார்த்த தங்கம்மாவின் தங்கை நாடகக் கதையை முன்னரே சொல்லியிருந்தாள். சிலருக்கு நாடகக் கதை பிடிக்கவில்லையாம். தங்கம்மாவுக்கு நன்ருகப் பிடித்தது. நாடகாசிரியர் 'யுகபுருஷன்' யார் என்பது யாருக்குமே தெரியாது.

நாடகத்தைப் படித்ததும் முருகேசுவுடன் உரையாட வேண்டுமென்ற ஆவலுடன் இருந்தாள் தங்கம்மா. அவளுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

சென்ற வாரம் ஒருநாள்; எங்கோ ஒரு கலியாண வீட்டுக்குப் போய், திரும்பி வரும் பொழுது விதானையார் வீட்டுக்கு வந்தான் முருகேசு. அப்பொழுது விதானையார் வெளியே போயிருந்தார். தங்கம்மா மட்டும் தனியே இருந்தாள்.

''வாருங்கோ''—தங்கம்மா வரவேற்ருள்.

''ஐயா இல்லையா? நான் போய் பிறகு வாறன்''

''ஏன் என்ன அவசரம்? ஆறுதலாகப் போகலாம்தானே'' நெஞ்சம் 'திக்திக்' என்று அடித்தாலும் மனத் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு கூறினுள்.

நின்றுகொண்டிருந்த முருகேசுவை என்றுமில்லாதவாறு தந்தை உட்காரும் சாய்வு நாற்காலியில் உட்காரும்படி பணித்தாள்.

தயக்கத்துடன் முருகேசு உட்கார்ந்தான். தங்கம்மா தேநீர் தயாரித்துக் கொண்டு வந்து கொடுத்தாள். அன்றுதான் அவன் முதல் முறையாக விதானையார் வீட்டிலே தேநீர் குடித்தான்.

"நீங்கள் எழுதிய நாடகம் மிக நன்ருக இருந்தது."

"யார் சொன்னது நான் எழுதியதென. யுகபுருஷன் அல்லவா எழுதியது?"

"யுக புருஷன் யார்? நீங்கள் தானே? உங்கள் கருத்துக்கள்தானே அதில் இழையோடுகின்றன."

முருகேசு ஒன்றுமே பேசவில்லை. சிரித்துக்கொண்டேயிருந்தான்.

"நாடகத்தில் வரும் கமலாவுக்கு வாழ்வளித்திருக்கிறீர்கள். சரிந்து போகும் நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் நசிந்து போகும் கமலாவின் குடும்பத்தை நன்ருகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறீர்கள். உயர்குடி வேளாள குலத்தைச் சேர்ந்த கமலாவை சாதி என்னென்று தெரியாத நெசவு ஆசிரியருடன் ஓட வைத்திருக்கிறீர்கள்"

"நீங்கள் நாடகத்தை நன்ருக ரஸித்திருக்கிறீர்கள்."

"நீங்கள் நாடகத்தின் மூலம் ஏற்படுத்த நினைக்கும் புரட்சியை உங்கள் சொந்த வாழ்க்கையில் செய்து காட்டுவீர்களா?"

"கட்டாயம் செய்வேன்" — முருகேசுவின் குரலில் உறுதி தொனித்தது.

சிறிதுநேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைத் தங்கம்மாதான் கலைத்தாள். திருமண வீட்டுக்குரிய அழகான உடையணிந்திருந்த முருகேசுவை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கேட்டாள். "உங்களுக்கு எப்ப கலியாணம்?"

"என்ன அவசரம்? தங்கையின் கலியாணம் முடிந்த பின் அம்மாவும் அவசரப்படுத்துகிருதான்."

தங்கம்மா ஒருகணம் ஏதோ கேட்க நினைத்து, மறுகணம் நாவைக் காத்துக் கொண்டதாக ஆறுதலடைந்தாள்;

"இதுவரை நான் கேட்ட கேள்விகள் இவருக்குப் பிடித்திருக்குமோ?'

சிறிதுநேரம் யோசித்துவிட்டு, முருகேசு எழுந்து—"நான் போயிற்று வாறன்" என்று கூறிப் பிரிந்து சென்றுவிட்டான்.

முருகேசு அடுத்துச் சில நாட்களாக விதானையார் வீட்டுக்கு வரவில்லை, தங்கம்மா ஆதங்கம் அடைந்தாள். 'என்னைத் தவருகப் புரிந்துதான் வராது விட்டிருப்பாரோ'

ஒரு வாரம் கழித்து, நேற்றுத்தான் வந்தான் முருகேசு.

தந்தையும் முருகேசுவும் உரையாடுவதை மற்றைய நாட்களைவிட ஆவலுடன் கேட்டுக்கொண்டிருந்தாள் தங்கம்மா.

"இந்த மாத முடிவிலை நான் மாறிக் கிளிநொச்சிக்குப் போறன். நான் நாலு வருஷங்களாகத் தலைவராக இருந்த கிளிநொச்சி வாலிப மன்றத்தினரும், அங்குள்ள காரியாதிகாரிபோலப் பெரிய ஆக்களும் விரும்பிக் கேட்கைக்க நான் எப்படி மறுக்கிறது?"

தங்கம்மா விக்கித்துப் போனுள். முருகேசுவின் நிரந்தரப் பிரிவை அவளால் நினைத்துப்பார்க்க முடியவில்லை: அடிக்குமேல் அடிபட்டுக் கன்றிப்போன தன் வாழ்க்கையில் மீண்டும் இது ஓர் அடியாக அவளுக்குப் பட்டது. 'வாழ்க்கை வெறும் சூனியமாகத் தோன்றிய எனக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்திவிட்டுப் போகிருரே. எமது குடும்பத்திற்கு எவ்வளவு ஆதரவாக இருந்தார்.'

அவள் தன்னை வாட்டிய துயரை யாருக்குமே காட்டாது மனத்திரைக்குள் போட்டு மூடிவைத்திருந்தாள்.

இன்று காலையில் நடந்த அந்தச் சம்பவம்...

அப்பொழுது வீட்டில் யாருமில்லை. தனிமையில் முருகேசு வின் பிரிவைப்பற்றி எண்ணிக்கொண்டிருந்தாள் தங்கம்மா. வீட்டு வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே, முன் கத வைத் திறந்துபார்த்தாள். முருகேசு நின்முன்.

''ஐயா இப்பதான் வெளியிலே போனவர்'' - தங்கம்மா கரகரத்த குரலிற் சொன்னுள்.

முருகேசு தெளிவான குரலிற் பதிலளித்தான்.

''அவர் வெளியிலே போவதைக் கண்டுதான் நான் இங்கு வந்தனுன். ஒரு முக்கிய விஷயம்பற்றி உங்களிடம் இப்ப தனியப் பேசப்போறன். நிதானமாகவும் தீர்க்கமாக வும் யோசித்த பிற்பாடுதான் இந்த முடிவுக்கு வந்திருக் கிறன். நீங்கள் மனமாரவிரும்பினுல் உங்களுக்கு நான் வாழ் வளிக்கத் தயார்.''

தங்கம்மா ஒன்றுமே பேசாது, வாயடைத்துப் போய் —கற்சிலையாய் நின்முள். மீண்டும் அவனே பேசினுன்.

''நான் இந்த மாத முடிவிலே கிளிநொச்சிக்குப் போறன். வேலையைப் பொறுப்பெடுத்து ஓரிரு மாதங்களில் வேலை எல் லாம் சகஜ நிலைக்கு வந்த உடனே — உங்களுக்குச் சம்மத மெண்டால், ஓரிரவு நான் வந்து உங்களைக் கூட்டிக்கொண்டு போறன். ஊரறிய நாம் ஒன்று சேர இந்தச் சமுதாயம் இடம் கொடுக்காது. புதிய ஊரிலே நாங்கள் சந்தோஷமாக வாழ லாம். நீங்கள் தீர யோசித்து நாளைக்குக் காலையிலே உங்கள் முடிவைச்செல்லனிடம் எழுதிஅனுப்புங்கோ... நான்வாறன்''

முருகேசு நிதானமாகக் கூறிவிட்டு, விரைவாக வீட்டை விட்டுச் சென்று விட்டான்.

கலங்கும் கண்களுடன் அவனது உருவம் மறையும் வரை யும் தங்கம்மா பார்த்துக்கொண்டே நின்முள்.

இன்று காலை தொடக்கம் தங்கம்மா இதுபற்றியே யோசித்துக் கொண்டிருக்கிருள். நாளை காலை முருகேசுவுக்கு என்ன முடிவை எழுதுவது? அவளால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை-

தையல் — கைப்பணி வகுப்பாற் திரும்பி வரும் பெண்கள் ஏதோ ஒரு சுவாரஸ்யமான உரையாடலில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்கம்மா அவர்களின் உரையாடலுடன் ஒன்றுது தனது கருத்துக்களைச் சுருக்கமாக - இடைக்கிடை சொல்லிக் கொண்டாலும் அவளது மனம் தான் எடுக்க வேண்டிய தீர்மானத்தைப் பற்றியே மொய்த்துக்கொண்டிருக்கிறது.

'தற்கொலை செய்து கொண்ட பெண்ணைப்பற்றி இப்பொழுது மடத்தில் எவ்வளவு கேவலமாகப் பேசினுர்கள். அது போல நான் அவருடன் போய் விட்டால், 'கோவியப் பொடியனுடன் விதானையாற்றை மகள் ஓடி விட்டாள்' என்று தூற்றுவார்கள். தூற்றும் இவர்களால் எனது வாழ்க்கைக்கு வழிவகுத்துத் தர முடியுமா? இன்றும் இவர்கள் என்னைத் தூற்றவில்லையா? இன்னும் கலியாணமாகவில்லையே என்று கிண்டல் செய்கிறுர்கள்தானே.'

'எனக்குக் கலியாணம் நடக்கக்கூடிய சாத்தியக்கூறு இருப்பதாகவும் தெரியவில்லை. போலிக் குடும்பக் கௌரவத்திற்காக என்னையே நான் பலியிடுவதா? இயற்கையாக எழும் அவசங்களையும், ஆசைகளையும், உணர்ச்சிகளையும் இந்தச் சமுதாயத்தின் கருத்தற்ற கட்டுக்கோப்புகளுக்காக என் மனத்திற் போட்டமுக்கி, அவற்றை மலராது மொட்டில் கூம்பச் செய்வதா? இதுகாலவரை ஊர் உலகுக்கு, குடும்பத்திற்கு ஒரு நல்ல பெண்ணுகவே வாழ்ந்தேன். ஆனுல் என் உள்ளத்தில் அடிக்கடி எழும் மனப் போராட்டங்களையும், அவற்ருல் நான் அடைந்து வரும் மன அவஸ்தைகளையும் இந்த ஊர் உலகம் அறியுமா? எனது உடலில் பருவப் பூரிப்புக் குறைந்து வருவது எனக்கே தெரிகிறது!

முருகேசுவுடன் போய்விட்டால் தன் குடும்பத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளையும், தாக்கங்களையும் எண்ணிப்பார்க்கிறுள் தங்கம்மா.

'உடைந்து சிதறிவரும் பழம் பெருமைகளையும் கௌரவங்களையும் பொருத்தி மனநிறைவு கண்டுவரும் பழைய சமுதாயத்தின் பிரதிநிதியான ஐயா, நான் குறைந்த சாதிக்காரனுடன் ஓடிப்போவதை ஒருநாளும் விரும்பமாட்டார். ஆனுல் அவரது உள் ஆத்மா தன் மகள் கண் கலங்காமல் காப்பாற்றக்கூடிய ஒருவனைக் கைப்பிடித்து விட்டாளே என்று களிப்படையும், ஆசீர்வதிக்கும். ஐயா முருகேசுவின் குணத்தை, வேலைத்திறனை எத்தனை நாள்-எத்தனை பேருக்கு, எப்படி யெல்லாம் புகழ்ந்திருப்பார். 'தங்கமான ஒரு பொடியன், வேலையில வலு விண்ணன்'

தங்கம்மா அரசாங்கப் பாடசாலையைத் தாண்டி முச்சந்திக்கு வந்துவிட்டாள். கூடவரும் பெண்கள் கிளைபிரியும் தெருவில் விடை கொடுத்துப் பிரிகிறுர்கள். தன்னந் தனியாகத் தங்கம்மா போய்க்கொண்டிருக்கிறுள். அவள் முன் இளவயதுப் பெண்ணொருத்தி பத்துப் பன்னிரண்டு வயதிருக்கும் மகன் ஒருத்தனுடன் சென்றுகொண்டிருக்கிறுள். தங்கம்மா குறிப்பாகப் பார்க்கிறுள். 'கந்தன் கட்டாடியின் மகளா இவள்!' அவள் ஆரம்ப பள்ளிக்கூடத்தில் தங்கம்மாவுடன் கூடப்படித்தவள். தங்கம்மா பள்ளிக்கூடத்திற் படிக்கும் பொழுது விதானையார் மகள் என்று உபாத்தியாயர்களிடம் எவ்வளவு மரியாதைகள்...! உபசாரங்கள்!! அந்தப் 'பெட்டை' சிந்திய மூக்குடனும் எண்ணெய் வடியும் தலையுடனும் பள்ளிக்கூடம் மிக அருகிலிருந்தும் நேரம் சென்றுதான் வருவாள். உபாத்தியாயர் 'உனக்கேன்ரி படிப்பு அழுக்குத் துணிகளைச் சுமந்து கொண்டு துறைக்குப்போறதுக்கு' என்று சொல்லிப் பிரம்பால் அடிப்பார். இன்று அவள் கொண்டை போட்டு, அழகான சேலைகட்டி, காற்சட்டையும் சப்பாத்தும் அணிந்த வடிவான மகனுடன் ஒய்யாரமாகப் போகிறுள். தங்கம்மா பெருமூச்சுடன் போகிறுள்.

தங்கம்மாவுக்குப் பாதையின் இருமருங்கிலும் உள்ள கட்டடங்கள் ஊரில் நடந்த மாற்றங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றன. முன்பு 'கல்வீடு' என்றால் அது விதானையார் வீட்டைத்தான் குறிக்கும். இன்று அது சுவர்கள் வெடித்து, சிதைந்து, நீண்ட நாட்களாக வெள்ளையடிக்கப்படாமற் கிடக்கிறது. இப்பொழுது ஊரில் எத்தனை புது வீடுகள் எழுந்திருக்கின்றன. கோவிற் காணி என்று ஒதுக்கப்பட்ட காணியிற்கூட ஓர் அழகான வீடு, சுற்று மதில், 'லயிற்.'

தங்கம்மா காலமாற்றம் என்னும் தராசிலே தங்கள் குடும்பத்தில் நடந்த சம்பவங்களை எடைபோட்டுப் பார்க்கிறாள்.

'இளைய அண்ணர் சாதி என்ன என்று தெரியாத வேதக்காரப் பெண்ணை மணம் முடித்ததிற்காக ஒரு சில நாட்கள் தானே எங்களால் ஒதுக்கி வைக்க முடிந்தது. முதலில்பயந்து பயந்து தனியாக வந்தார்; பின் குழந்தையுடன் வந்தார்; நாளடைவில் அண்ணியையும் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார். இளையண்ணர்தானே, ஐயா மூத்தண்ணராற் பட்ட கடன்களைக்கட்டி ஈட்டிலிருந்த காணிகளையும் மீட்டார். இப்பொழுது சின்னத்தங்கச்சியை அவர்தானே கொழும்பில் வைத்துப் படிப்பிக்கிறார்.'

'ஆரம்பத்தில் எனக்குப் பேசிவரும் கலியாணங்கள் ஒன்றுமே கைகூடாமற் போன பொழுது நான் ஆசிரியத்தொழிலுக்குப் போகப் போகிறேன் என்று ஒற்றைக்காலில் நின்றேன்; அப்பொழுது மூத்தண்ணர் உயிருடன் இருக்கிறார். 'என்ரை பெம்பிளைப்பிள்ளை எனக்கு உழைச்சுத் தரவோ' என்று ஐயா சொல்ல, 'பெண்கள் உழைக்கிறது எங்கள் குடும்பக் கௌரவத்திற்குச் சரியோ' என்று மூத்தண்ணர் ஒத்தூதினார். காலம் எவ்வளவு மாறிவிட்டது. தங்கச்சியை ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பிக்கச் சொல்லி ஐயாதானே சொன்னார். சின்னத் தங்கச்சியைக் கொழும்புக்குப் படிக்க வரும்படி இளையண்ணர் கேட்க ஐயா ஒன்றுமே பேசவில்லை.

நானும் 'தையல்-கைப்பணி வகுப்புகளுக்குப் போகப் போகி றேன்' என்று கேட்க ஐயா மனமுவந்துதானே அனுமதி யளித்தார்.

இன்று என்னை நோக்கியிருக்கும் இந்தக் கேள்வியும் இப் படி ஒரு காலமாற்றத்தின் விளைவுதானோ?

தங்கம்மாவுக்குத் திடீரென்று முருகேசுவும், நாடகத்தில் வரும் ஓடிப்போகும் கமலாவும், அவள் ஓரிடத்தில் கூறுவதும் நினைவுக்கு வருகின்றன.

'சமுதாய அமைப்பு நிலையானதல்ல. காலத்தின் தேவைக் கேற்ப அது மாறிக் கொண்டேயிருக்கும். சமுதாய மாற் றத்தைக் கண்டு முகத்தைச் சுளித்து ஒதுங்குபவர்கள் மனிதகுல வளர்ச்சியில் நம்பிக்கையற்றவர்கள்.'

தங்கம்மா வீட்டுக்கு வந்து விட்டாள். விதானையார் சாய்வு நாற்காலியிற் படுத்துக்கொண்டு சதா சிந்தனையிற் சிக்கியிருக்கிறார். அவர் சில நாட்களாக இப்படித்தான். 'பாவம் ஐயா, அவருக்கு என்னால்தான் எந்நேரமும் யோசனை. நான் ஒரு சுமையாக, தீர்த்து வைக்க முடியாத பிரச்சினையாக இருக்கிறேன். அவர் இந்தத் தள்ளாத வயதில் என்னைக் கரை சேர்க்க எத்தனை பாடுபடுகிறார்?

அவள் பெருமூச்சொன்றை உதிர்த்த வண்ணம் அறைக் குட் புகுகிறாள். தன்னால் தந்தை படும் துயரை எண்ணும் பொழுது அவள் துயரம் இரட்டிப்பாகிறது.

வெளியே வெளிச்சம் இருந்தாலும் வீட்டுக்குள் இருட் புகுந்திருக்கின்றது. விளக்கேற்றி வைத்துவிட்டு வீட்டு வேலை களைச் செய்யத் தொடங்குகிறாள். முறுக்கிவிட்ட சூத்திரப் பாவைபோல அவள் கைகள் இயங்கினாலும் எண்ணங்களெல் லாம் முருகேசுவின் கேள்வியிற்தான் இருக்கின்றன.

தங்கை மாலையாகி வெகுநேரம் கழித்துத்தான் வந்தாள். பாடசாலையில் ஏதோ கலைவிழாவுக்கு ஒத்திகை நடைபெறுகின்றதாம். அவளுக்குத் துணைக்கு வந்த ஆசிரியர் வீட்டு வாசல்வரை வந்து திரும்பி விட்டார்.

எல்லோரும் சாப்பிட்டு விட்டுப் படுத்து விட்டார்கள். தங்கம்மாவுக்கு உறக்கம் வர மறுத்தது. வாதப் பிரதிவாதங்களால் அவள் மனம் அலைக்கழிந்து கொண்டிருக்கிறது.

உடற்சோர்வினுற் கண்ணயர்ந்தவள் துடித்துக்கொண்டெழுந்தாள். இன்னும் விடியவில்லை.

தங்கம்மா புத்துணர்வு பெற்றவளாக நிற்கிருள். அவள் உள்ளத்திற் றெளிவு உதயமாகி, திடகாத்திரமும் பிறந்து விட்டது.

முன் அறையில் விளக்கேற்றி வைத்துவிட்டு, தன் சம்மதத்தை முருகேசுவுக்குச் சிறு கடிதம் மூலம் எழுதுகிருள். காலையிலே செல்லனிடம் கடிதத்தைக் கொடுத்துவிடவேண்டியதுதான்.

தங்கம்மா யன்னலைத் திறந்து வெளியே பார்க்கிருள்; பனங்கூடலுக்குமேலே செவ்வானம் படர்ந்திருக்கிறது. இருள் மண்டிக்கிடந்த கிழக்கு வானம் வெளுக்கிறது.

விதானையாரின் குறட்டை ஒலி தேய்ந்து ஒலிக்கிறது.

புதிய நாள் ஒன்று உதயமாகிறது.

—1972

# ஒருநாட் பேர்

மூட்டத்தினுள்ளே தோட்டம் மூழ்கிக்கிடக்கிறது.

லயத்துக் காம்பராவின் முகப்பிற் தொங்கிக் கொண்டிருந்த கொழுந்துக் கூடையை லாவகமாகத் தலையில் மாட்டிக் கொண்டு, கைக்குழந்தையை இடுப்பில் ஏந்தியபடி வேலைக்குப் புறப்பட்டுவிட்டாள் பாப்பாத்தி: நிறுவைத் தட்டிலே போடும் கொழுந்து போலத் தூக்கத்திற் துவண்டு, துவண்டு விழுகிறது குழந்தை.

பாப்பாத்தியின் உடலிலும், உள்ளத்திலும் இன்று ஒரு வேகம்.

"ஏலரைக்கு முந்தியே கொழுந்துக் காட்டிலெ நிக்கணுமே...! இன்னைக்கி பத்தாம் நெம்பர் மலைக்கி போவனும்... ஆத்தாடி...! கொலந்தய மடுவத்துல ஆயம்மாக் கெழவிக்கிட்ட வுட்டுட்டு நம்ப தோட்டத்துப் பவுண்டரித் தொங்க போய்ச்சேர எத்தனை மணி ஆகுமோ...? போன மாசம் சம்பளத்தன்னைக்கும் அந்த மலைதான்..! அன்னைக்கி பிந்திப் போனேன்னு பெரிய தொர லயத்துச்சே வெரட்டி ஒருநாப் பேரும் போச்சி.. இன்னைக்கி பெரிய தொர வந்தாலும் வருவாரு..., சம்பளம் கொண்டு வர கொழும்புக்கும் போனவரு திரும்பி வந்திருப்பாரு...'

மூன்று நாட்களாகத் தொடர்ந்து பெய்யும் மழையுடன் கூடி, ஆடிமாத வாடை தன் தனித்தன்மையைக் காட்டிக் கொண்டிருக்கிறது. இன்று கோழி கூப்பிடும் நேரத்துக்கெல் லாம் பாப்பாத்தி கண் விழித்து விட்டாள். மூட்டு, மூட் டாகக் கழல்வதுபோல் இரவு பூராவும் அவளுக்குக் கைகளும், கால்களும் வலியெடுத்துக் கொண்டிருந்தன. நேற்றுப் பகல் சாப்பிட்ட 'ரொட்டி'த் துண்டுக்குப் பின் வயிறு 'சாய'த் தண்ணீரை மட்டும்தான் கண்டது. ஒரு சாண் வயிறு என் ருலும் தன் பசி தீராவிட்டால் சும்மா இருக்குமா? வயிற் றுக்குள் ஏதோ செய்யவே விடியுமுன் மூன்று தடவைகள் 'சாய'த் தண்ணீரை ஊற்றிக் குடித்துவிட்டாள். மழை யினுலே தண்ணீர்த் தட்டுப்பாடு அன்று லயத்தில் இருக்க வில்லை. லயத்துப் பீலிக்குத் தண்ணீர் கடந்த ஆறு மாதங் களாக வராவிட்டாலும், காம்பராவுக்கு முன் உள்ள அரை 'ட்ரம்'மில் விழுந்து வழியும் மழைத்தண்ணீர் இருக்கவே இருக்கிறது!

நாளைக்குத்தான் தோட்டத்தில் அரிசி போடுவார்கள். பாப்பாத்திக்கு மூன்று நாட்களுக்கு முன்பே அரிசியும் மா வும் முடிந்து விட்டன. அடுத்தகாம்பரா அஞ்சலை அக்கா விடம் கடனுக வாங்கிய நாலு சுண்டு மாவில் நேற்று ரொட்டி சுட்டு, மகனின் பசியைப் போக்கிவிட்டு அவள் அரைப்பட்டினி இருந்தாள். இன்று மகனுக்கு மட்டும் இரண்டு நேரத்திற்கு ரொட்டி சுட்டு வைத்திருக்கிறுள்; அவள் முழுப்பட்டினி.

முதல்நாள் மலைக்கு உடுத்து, மழையில் நனைந்து இன்னும் காயாத நனைந்த படங்கையும், சேலையையும் வரிந்து கட்டிக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டு, தூங்கிக்கொண்டிருந்த கைப்பிள்ளையைத் தூக்கும்போது, அதற்குப் பக்கத்திற் கூத லாற் கூனிக் குறுகிக் கிடந்த சின்னவனைப் பெருமூச்சுடன் பார்த்தாள் பாப்பாத்தி. சின்னவனுக்கு இந்த ஆடி பதி னெட்டு முடிய நாலு வயசும் முடிந்து விடும்.

அவள் மலைக்குப் போனபின் அவனே எழுந்து, மூஞ்சி கழுவி, ஆயா சுட்டு வைத்திருக்கும் ரொட்டித் துண்டைத் தின்று விட்டு, லயத்துப் பிள்ளைகளுடன் விளையாடப் போய் விடுவான்.

'பாவம்... அவங்கூட அவனூட்டு அக்காவும் இருந்துக்கிட்டா நல்லாயிருக்கும்.. பெரிய கிளாக்கர் ஐயா கேக்றப்போ எப்புடி இல்லேங்கிறது... கௌாக்கரம்மாவுக்கு எடுபுடி வேலைக்கு நம்ம புள்ளய வேனுமின்னுங்க... லயத்துக்காட்டில இருந்தீச்சின்னு லயத்துக் களுசறைகளோட சேர்ந்து ஊதாரியாப் போயிரும்... ஐயா வூட்டுல இருந்தா நாலு நல்ல பழக்கங்களை படிச்சிக்கிரும்... இப்ப தன்னோட வகுத்துக்கு சாப்பிட்டுக்கிட்டு கொழு கொழுன்னு இருக்கு... ஐயா வூட்டுக்குப் போயி மாசமும் ஆறுகப் போவுது, இன்னம் சம்பளமுந் தறல்லே... எப்புடிப் போய் கேக்றது...? ஐயாவூட்டுக் காலைக் கையப் புடிச்சித்தானே பேரப் பதிஞ்சிக்கணும். அவரு மனசு வச்சா அடுத்த பயணம் டெம்பேரியாவாச்சும் பேரு பதிஞ்சிக்கலாம்... பெறகு தோட்டத்துச் செக்ரோல்ல பேரும் போட்டுக்கலாம்... அப்பறம் நம்ம பாடு கொஞ்சம் தேவலை...'

''ஆயா! வேலைக்குப் பொறப்புட்டுட்டியா?''

இஸ்தோப்பில் இருந்து கொண்டு அடுத்த காம்பரா அஞ்சலை குரல் கொடுக்கிறாள்.

''ஆமாக்கா... இன்னைக்கி பத்தாம் நெம்பருக்குப் போவணும். ஒங்களுக்கு புது மலை மட்டக் கொழுந்துதானே... கொஞ்சம் சொணங்கிப் பொறப்புடலாமே...''

''சரி... ஆயா... நீ போயிட்டு வா... நம்ம மவனும் மார்ரிமுத்து ராவு இஸ்டோர் வேலைக்குப் போனிச்சி... இன்னம் வரல்ல... வந்திருச்சின்னு... நான் ரொட்டியையும்

தேத்தண்ணியையும் கொடுத்துட்டு மலேக்குப் பொறப்புட்டுடலாம்... ச்சீ... என்னு இந்த மழை மூணு நாளா தொண தொணக்குது... கொழுந்துக்காட்டுல குட்டிங்க பேசிக்கிற மாதிரி நம்ம தோட்டத்துல சம்பளத்தண்ணேக்கி சொல்லி வச்ச மாதிரி மழையும் வந்துரும்...''

பாப்பாத்திக்கு அஞ்சலேயின் பேச்சு, காற்றும் மழையும் எழுப்பும் 'சோ' என்ற சத்தத்தில் தேய்ந்து ஒலிக்கிறது. அவளது பச்சைக் குழந்தையை வாடை சீண்டி, தன் ஊசிக் கரங்களாற் குத்தி விளையாடுகிறது. பாப்பாத்தி சென்ற மாதம் சம்பளத் தினத்தன்று 'ஒத்த'க் கடையில் வாங்கிய 'ரெட்டா'ல் குழந்தையை மூடி மறைக்கும்போது அவளது உடலும் பாதி நனேகிறது.

பாப்பாத்தி அந்த 'ஒத்த' லயத்துக் கோடிக்கு வந்து விட்டாள். வெளிக்கிப் போன தொங்கக் காம்பரா பொட்டு திரும்பிக்கொண்டிருக்கிறுள்.

''என்னு... பொட்டு இன்னேக்கி வேலேக்குப் போகல்லியா..?''

''இல்ல பாப்பாத்தி எனக்கு மேலுக்கு சொகமில்ல''

கூதல் கூடிவிட்டால் பொட்டு வேலேக்குப் போக மாட்டாள். கண்டக்கையா வேலேக்காடு சுற்றிவிட்டு, பொட்டுவைத்தேடி தொங்கக் காம்பராவுக்கு வருவார். தோட்டக் கணக்கிற் தன் புலன் வெறியைத் தீர்த்துவிட்டுப் போவார். பொட்டுக்கு அன்றைக்குக் கட்டாயம் பேர் விழுந்து விடும். கண்டக்கையா யாருடைய கண்ணுக்கும் தட்டுப்படாமற் பொட்டுவின் வீட்டுக்கு வந்து போவது அவரது வேலே பார்க்கும் திறன்போலத் தனித்திறனே! கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது எட்டி அடி வைக்கிறுள் பாப்பாத்தி.

''கொழும்புக்குப் போன பெரியதுரை வந்துட்டாரோன்னு தெரியலியே''

பெரியதுரை தோட்டத்தில் இருக்கும் நாட்கள் இருக்காத நாட்களிலும் எவ்வளவோ குறைவு.

பெரியதுரை தோட்டத்தில் இருந்தால் எல்லோரையும் ஒரு கலக்குக் கலக்கி விடுவார். நேரத்திற்கு வேலைக்கு வராதவர்களை வீட்டுக்கு விரட்டியடிப்பதன்மூலம் தன் நிர்வாகத் திறனைக் காண்பிப்பார். அவரது வேட்டையாடும் கண்கள் ரோட்டில் 'வானி'ல் பவனி வரும்போதே, குறுக்குப் பாதையிற் பதுங்கி வருபவர்களை எப்படியாவது கண்டுவிடும். "ஏ... கங்காணி அந்தாப் பாரு இப்பத்தான் ஒரு பொம்பள வேலைக்கு வாறது .. நீ மனுஷன் இப்ப மணியைப் பாரு... அந்த ஆளை லயத்துக்கு வெரட்டிப் போடு." சில வேளைகளில் பகல் ஒன்றரைக்கு முன்பே பெரியதுரை மலையில் நிற்பார். பகற்கொழுந்து நிறுத்துவிட்டு ஒரு மணிக்கு லயத்தை அடையும் பெண்கள் தின்று பாதி, தின்னுமற் பாதியாக இளைக்க இளைக்க மலைக்கு ஓடி வருவார்கள். காலையிலே பேருக்குத் தேவையான இருத்தலுக்குமேல் கொழுந்தெடுத்தாலும் பெரியதுரையிடம் அகப்பட்டுவிட்டால் — ஐந்து நிமிடம் பிந்திவிட்டாலும் அவர்களுக்கு அன்றைக்குப் பேர் கிடைக்காது.

பாப்பாத்தி இருக்கும் இந்த 'ஒத்த' லயத்தை ஏன்தான் இந்த ஒதுக்குப் புறத்திலே கட்டினூர்களோ? கூட்டமாக இருக்கும் லயன்களின் வெகு தூரத்தில் ஒற்றையாக ஒத்த லயம் இருக்கிறது. கொழுந்து மடுவம், பிள்ளைக் காம்பரா, அரிசி மடுவம், ஸ்டோர் எல்லாமே 'ஒத்த' லயத்துக்குத் தூரந் தான். ஆபீஸும், பெரிய பங்களாவும் தான் கொஞ்சம் அருகில் இருக்கின்றன. வெள்ளைக்காரத் துரைமார்கள் தங்கள் பங்களாக்களிலே கூலிவேலை செய்பவர்கள் இருப்பதற்கு இந்த ஒத்த லயத்தைக் கட்டி இருக்கவேண்டும்.

பாப்பாத்தி அந்த ஏற்றத்தைத்தாண்டி, பங்களா 'ரோட்'டுக்கு வந்துவிட்டாள். அவளது கைகள் கால்களெல்லாம் அசந்துபோகின்றன. வரக்கட்டுகளிலே கன்றுக்குட்டியாக ஒரு

காலத்திலே துள்ளியவள் இன்று இந்த ஏற்றம் ஏற முடியாமல் இளைப்பு வாங்குகிறது.

பங்களா 'ரேட்'டில் காவற்காரன் வேலு வந்து கொண்டிருக்கிறான்.

"'அண்ணே... பெரிய தொர வந்துட்டாரா?''

"'இல்லே பாப்பாத்தி... பகல் தீனிக்குத்தான் வருவாருன்னு அப்பையா சொல்லிக்கிட்டாரு... டவுணுக்கு எறச்சி பொட்டிக்கு 'வேன்' அனுப்ப டீமேக்கர் ஐயாகிட்ட சொல்லச் சொல்லி எங்கிட்ட சொன்னாரு.''

பாப்பாத்திக்கு வேலு சொன்னவற்றில் மனம் நாட்டம் கொள்ளவில்லை. வேலுவைப் பார்த்ததும் ஒரு மொட்டும் இரு இலைகளுமாக வயிற்றில் ஒன்றையும் வேறு இரண்டையும் அவளிடம் பாரம் கொடுத்துவிட்டுத் தேயிலைச் செடிக்கு உரமான தன் கணவனை நினைத்துப் பார்க்கிறாள்.

'வேலு அன்னைக்கி விருந்தாளியாக தோட்டம் போகாம இருந்தா...'

அப்பொழுது வேலு கண்டக்கையாவின் மாட்டுக்காரனாக வேலைசெய்து கொண்டிருந்தான். அவனுக்கு ஐயா வீட்டில் வேலைசெய்தாலும் துரைக்கணக்கில் வேலை செய்ததாக ஒவ்வொருநாளும் பேர்விழும். வேலு விருந்தாளியாக மகள் வீட்டுக்குப்போக, பாப்பாத்தியின் கணவனான பிச்சை 'மாத்துக் கட்டு' மாட்டுக்காரனானான். அன்று மாட்டுக்குப் புல்லுப் பற்றாமல்போக, குழை வெட்ட பலாமர உச்சிக்குப் போனவன் கால் தவறித் தலைகுப்புற விழுந்துவிட்டான். மயக்கமுற்ற நிலையில் 'டவுண்' ஆஸ்பத்திரிக்குப் போனவன் 'மைய'ப் பெட்டியிலே தோட்டத்துக் கொழுந்து லொறியிற் கொண்டு வரப்பட்டு, அவனது காம்பராவின் நடுவில் வைக்கப்பட்டான்.

'சும்மா சொல்லப்புடாது. பழைய கண்டக்கையா மவராசன். ஆஸ்பத்திரில அவரப் போயிப் பாத்த வரு, கரு'மாதிக்கு அம்பது ருவா குடுத்தாரு... ரொம்ப புத்திமதியும் சொன்னுரு. இப்ப வந்தி ருக்ற புதுக் கண்டக்கையாவோட பழையவர சேத்துப் பாத்தா அவரு எவ்வளவோ ஒசத்தி! உண்மையில அவரு மவராசன்தான்.'

பாப்பாத்திக்குப் போன மாதம் புதுக் கண்டக்கையா போட்ட திட்டத்தையும், நடந்த அந்த சங்கதியையும் எண்ணிப்பார்க்கும்போது அடிவயிறு பகீரென்கிறது.

கண்டக்கையா தனது கையாளான மேட்டு லயத்துக் காளிமுத்துக் கங்காணியை அவளிடம் தூதனுப்பியிருந்தார். கொழுந்து நிறுத்துவிட்டு கவலையுடன் வீடு திரும்பிக்கொண் டிருந்த பாப்பாத்தியை முடக்கில் மறித்துக்கொண்டு கேட்ட அந்த அசிங்கமான கேள்வியை முற்றும் முழுதாக இப்பொ ழுதும் நினைத்துப் பார்க்க அருவருப்பாய் இருக்கின்றது.

''பாப்பாத்தி! ஐயாவுக்கு ஒன்னைய ரொம்பப் பிடிச் சிருக்காம்... நீ மட்டும் ஒத்துக்கிட்டியன்ன ஒவ்வொரு நாளும் தப்பாம பேர் விழும்... ஐயா கூடக்கொறைய ருத்தலும் போடுவாரு... எத்தனையோ சங்கதிகளை சும்மாவே செஞ்சிக்கலாம்.''

கொழுந்துக் கூடையாற் கங்காணியை 'மொத்த' வேண் டும்போல் அவளுக்குத் தோன்றுகிறது. கோபம் பொங்கி வருகிறது. 'நம்ம ஊட்டுக்காரரு உசிரோட இருந்தா கங் காணியையும், கண்டாக்கையும் துண்டு துண்டா வெட்டிக் கூறு போட்டிருப்பாரு.'

காளிமுத்துக் கங்காணி பாப்பாத்தியை விட்டபாடில்லை. கண்டக்கையாவிற்குத் தேன் எடுக்கப் போகும் கங்காணி தன் கைகளையும் நக்கிப் பார்ப்பதுண்டு.

தன்னைத் தீண்ட வந்த காளிமுத்துக் கங்காணியை நோக்கிப் பாப்பாத்தி தன் கையிலிருந்த மட்டக் கத்தியை ஓங்குகிருள். கங்காணியின் கையில் இரத்தமும், முகத்தில் அசடும் வழிகின்றன.

''பாப்பாத்தி... ஒனக்கு இந்தக் காளிமுத்தோட சங்கதி நல்லாத் தெரியல...''

பாப்பாத்திக்கு அன்று இரவு பூராவும் தூக்கம் வரவில்லை.

''அக்கா... வேலைக்கு வெள்ளெனவே பொறப்புட்டுட்டீங்களே.'' அடுத்த வீட்டு அஞ்சலையின் மகன் — ஸ்டோர் இரவு வேலையாளான மாரிமுத்து இப்படிக் கேட்கிருன்.

''ஆமா... தம்பி. தோட்டத்துப் பவுண்டரித் தொங்கலுக்குப் போவனுமே...''

'ம்...' பெருமூச்சு விட்டுக்கொண்டே மாரிமுத்து சொல்கிருன். ''ஆமா அக்கா... இன்னமே ரொம்ப நாளைக்கு இந்தக் கஷ்டம் நம்மளுக்கு இருக்காதுக்கா.''

மாரிமுத்து இப்படித்தான் ஏதோவெல்லாம் சொல்லுவான். பாப்பாத்திக்கு பாதிக்குமேற் புரியாது. ஆனல், அவன் பிரச்சினைகளை எடுத்து, அடித்துப் பேசும் விதத்தைக் கண்டு அவள் பல தடவைகள் வாயிற் கையை வைத்திருக்கிருள்.

''அக்கா சின்னவன் எந்திரிச்சிட்டான?''

''இல்லை... தம்பி, அவன கொஞ்சம் பாத்துக்கங்க''

பாப்பாத்திக்கு தன் மகனைப்பற்றி மாரிமுத்து விசாரித்தது மனத்தில் மகிழ்ச்சியை அரும்பச் செய்கிறது. சின்னவன் மாரிமுத்துகூடவேதான் இருப்பான். ஒருநாள் மாரி

முத்து "அக்கா... சின்னவன் ரொம்பக் கெட்டிக்காரனு வருவான்போலே இருக்கு .. அவன் பேசுற பேச்சிலும் கேக்கிற கேள்வியிலும் தெரியுது... வெளேயும் பயிரை மொலேயில தெரியுதக்கா" - பாப்பாத்தி பூரித்துப் போனுள். அதுவும் மாரிமுத்து பாராட்டுவதென்ருல்...!

மாரிமுத்துவைப்போல அவன் வருவான் என்ற நம்பிக்கை அவளுக்குத் துளிர் விடுகிறது. மாரிமுத்துவின் கெட்டித்தனங்களே ஒருமுறை எண்ணிப்பார்க்கிருள். அவன் 'ஒத்த'க் கடையிலே சாமான் வாங்குவதில்லே. டவுணுக்குப் போய் நாலு கடைகளில் விலேகளே விசாரித்துத்தான் வாங்குவான். 'ஒத்த'க் கடையில் வாங்கும் சாமானின் ஒவ்வொரு இருத்தலுக்கும் டவுணுக்குப் போய்த் திரும்பும் பஸ்கூலி பதுங்கி இருப்பதைப் பலருக்கும் சுட்டிக் காட்டுவான். வீட்டில் தான் ஒரு 'செக்ரோல்' வைத்திருப்பான். தனது தாய், அக்கா, தங்கச்சிமார்கள் எடுக்கும் கொழுந்து இருத்தல் விபரங்களேயும், வேலே செய்யும் நாட்களேயும் அவனே எழுதி வைத்திருப்பான். ஒரு பயணம் கண்டக்கையா ஒரு நாட் பேரைப் போடாது விட்டு விட்டார். மாரிமுத்து பிரட்டுக்களத்திலே பெரிய ரகளே பண்ணி விட்டான். அதற்கிப் பிறகு கண்டக்கையா அவனது குடும்ப விடயத்தில் வாலாட்ட முடியாது. அநியாயம் அதிகரித்துவிட்டால் உரிய இடங்களுக்குத் தெரியப்படுத்தி விடுவான்.

மாரிமுத்து போனமாதம் தோட்டத்தில் நடந்த சங்கத் தேர்தலில் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளான். 'நம்ம மவனும் ஒரு நாளேக்கி இப்புடி வருவான்.'

பாப்பாத்தி பிள்ளே மடுவத்துக்குச் சிறு தூரம் வரும் போதே, ஆயம்மாக் கிழவியின் இருமலும், திணறித்திணறி மூச்சை வெளியே விடும் சத்தமும் கேட்கின்றன. ஆயம்மாக் கிழவிக்குக் கூதல் கூடிவிட்டால் இந்தத் தீராத வியாதியும் துணேக்கு வந்து விடும். பாவம் அவள் என்ன செய்வாள், ஒருநாட் பேர் போட்டாற் தானே அவளே நம்பியிருக்

கும் நான்கு வயிறுகளுக்குக் கஞ்சி ஊற்ற முடியும்.

பிள்ளைக்காம்பரா மழைச்சாரலினுலே 'தெப்ப'க்குளமாக இருக்கிறது. மூலையிலே பிள்ளையைத் தொட்டிலிற் போட்டு விட்டு மலையை நோக்கிப் போகிறுள். குழந்தை அழும் குரல் அவளுக்குக் கேட்டுக்கொண்டே இருக்கிறது.

இன்னும் நடந்து வந்த தூரத்திற்கு மேல் பத்தாம் 'நெம்பர்' மலைக்கு நடக்க வேண்டும். ஒரே ஏற்றம். பாரமேறிய கரத்தையை இழுக்கும் காளைபோல மூச்சு வாங்கிக்கொண்டு மலையை அடைகிறுள் பாப்பாத்தி. மற்றப் பெண்கள் நிரை பிடித்துக் கொழுந்து எடுக்கத் தொடங்கிவிட்டார்கள்.

''என்ன பாப்பாத்தி குளிரு காஞ்சிட்டு வாறியா?'' காளிமுத்துக் கங்காணி மலையில் நின்று கொண்டு அவளை வரவேற்கிறுன்.

''சின்ன தொர கண்டுக்கிட்டா சத்தம் போடப்போறுரு ...ம்...வெரசா...''—கங்காணியின் அதட்டலுடன் அன்றைய வேலையை ஆரம்பிக்கிறுள் பாப்பாத்தி.

அவள் மலையில் இயந்திரமாஞள். கூடைக்குட் கொழுந்து மந்திர வித்தைபோல் வந்து விழுகிறது. மற்றைய பெண்களையும் முந்திவிட்டாள்.

பாப்பாத்தியை முதற் தொங்கலுக்கு இழுத்தடிக்கிறுன் காளிமுத்துக் கங்காணி.

''இங்க பாரு பாப்பாத்தி! ஒன் நெரையில மட்டத்துக்கு மேலெ முடிச்சியெல்லாம் ஒடிக்காமக் கெடக்கு... வங்கி ஒடிக்கல்ல... வாது ஒடிக்கல்ல. என்னுபுள்ள புதுசா பேருபதிஞ்சி இன்னைக்கித்தான் வேலைக்கி வந்திருக்கியா..? போன மாசமும் சின்ன தொர ஒனக்கு அஞ்சஞ்சி ரூவா தெண்டம் போட்டிருக்காரு... நீ என்னு சொன்ன பேச்சி கேக்கமாட்டியா...?''

பாப்பாத்தி சின்னதுரை போட்ட தெண்டத்தைப்பற்றிப் பெரிதாக நினைக்கவில்லை. சின்னதுரை எப்போதும் அப்படித்தான். எங்காவது குற்றங் கண்டுவிட்டால்—லயத்துப் பீலியிற் கூட யாரும் குளிப்பதைக் கண்டுவிட்டால்—'ஒனக்கு அஞ்சு ரூவா தெண்டம்' என்பார். அது அவரது பேச்சோடு போய்விடும். தோட்டத்துப் 'பசங்கள்' அவருக்குத் 'தெண்டத்துரை'யென்றே பட்டமும் சூட்டிவிட்டார்கள்.

காளிமுத்துக் கங்காணி இப்பொழுது தினமும் பாப்பாத்தியின் நிரையிலே குற்றம் கண்டு பிடிப்பான்.

சம்பள நாளென்றால் ஒரே நேரத்துக்கு வேலை விட்டுவிடுவார்கள். காலைக் கொழுந்தைத் தாமதித்து நிறுப்பார்கள். பகற்கொழுந்தை இரண்டரை மணிக்கு நிறுப்பார்கள். பகற்சாப்பாட்டிற்கு இவர்கள் போகமுடியாது. பள்ளிக்கூடம் போகாத பிள்ளைகள், பென்சன் எடுத்த கிழடுகள் மலைக்குத் தண்ணீர் கொண்டு வருவார்கள். பாப்பாத்திக்கு யார் இருக்கிறார்கள்? அவளுக்கு இப்போது இரவில் எடுத்த வயிற்றுவலி மெல்ல ஆரம்பிக்கிறது.

அடுத்த நிரை மாரியாயி தனக்குவந்த 'தேத்தண்ணியை' தான் குடிக்க முன்பு பாப்பாத்திக்கு நீட்டிக் கேட்கிறாள்:-
''பாப்பாத்தி நீ கொஞ்சம் குடிச்சிட்டுத்தா ஆயா...''

பாப்பாத்தி மறுத்துவிட்டாள்.

மாரியாய் லேசுப்பட்டவளல்ல. ''இந்தா பாப்பாத்தி நீ குடிக்காட்டி மாரியாத்தா சத்தியமா நானும் குடிக்காம தூர வீசிப்புடுவேன்..''

பாப்பாத்தியால் மாரியாயியின் அன்புக் கட்டளையைத் தட்டிக்கழிக்க முடியவில்லை. முன்பு ஒருநாள் பாப்பாத்தி குடிக்காததால் மாரியாயி தான் குடிக்காமல் வீசியே விட்டாள்.

பாப்பாத்திக்குத் 'தேத்தண்ணி' வயிற்றுக்குள்போனதும் வலி கொஞ்சம் குறைகிறது.

சாக்குக்காரன் சத்தம் போட எல்லோரும் கொழுந்துக் காட்டைவிட்டு மடுவத்திற்குப் போகிருர்கள். எல்லோர் முகங்களிலும் இன்று ஒரே பூரிப்பு; ஒரு மாதமாகப்பட்ட இமிசைக்குப் பலன் கிடைக்கப் போகும் சம்பள நாளல்லவா!

பாப்பாத்தி தன்கொழுந்தைத் தட்டிற் போடும்பொழுது கண்டக்கையா துள்ளிக் குதித்தார். ''இது கொழுந்தா...? எல்லாம் காம்பெலே, முத்தெலே, தொப்புலெலேயாகக் கெடக்கு... இந்தா கொட்டிப் பொறக்கு...'' தட்டுப் பிடிக்கும் பிள்ளைகள் திருப்பிக் கூடையிற் கொட்டுகிருர்கள்.

எல்லோருடைய கொழுந்தும் நிறுத்து முடிந்து விட்டது.

''ஏ பாப்பாத்தி ஒனக்கு வேலே பாக்க ஒரு தனிக் கங்காணியும், கணக்கப்புள்ளேயும் வேணுமா..? இந்தா கொண்டு வந்து தட்டில கொட்டு. ஒனக்கு இன்னேக்கி மணிதான் பேரில்லே.''

பாப்பாத்தி காலேயிற் கொடுத்த அந்த அரை அங்குலச் சதுரத் துண்டைப் பயபக்தியுடன் இரு கைகளாலும் கண்டக்கையாவிடம் நீட்டுகிருள். கண்டக்கையா அதைக் கிழித்து வீசிவிட்டுப் பேர் போடாது மணி போடுகிருர்.

பாப்பாத்தி மடுவத்தை அடைந்ததும் குழந்தை 'வீல் வீல்' என்று கத்தும் குரல் கேட்கிறது. ஆயம்மாக் கிழவி குழந்தையை அவளிடம் கொடுத்துக்கொண்டே சொல்கிருள்:- ''பாப்பாத்தி ஒம் புள்ளேக்கி வவுத்துவலிபோலெருக்கு ஒரே தா 'வரக்கத்து' கத்திக்கிட்டுக் கெடக்கு... டாக்டரய்யாக்கிட்ட காமிச்சி மருந்து வாங்கிக் குடு ஆயா.''

குழந்தைக்கு வயிற்று வலியா அல்லது பசியா என்பது தாய்க்கு மட்டும்தானே தெரியும். குமிழை வாய்க்குள் பொருத்தியதும் குழந்தையின் அழுகை ஓய்ந்துவிட்டது; தாயை விழித்துப் பார்த்துக் கொண்டு இரத்தத்தை உறிஞ்சுகிறது.

ஒத்த லயத்தை நோக்கி, பங்களா ரோட்டுக்கு வந்து கொண்டிருக்கிறாள் பாப்பாத்தி. துரையின் பிள்ளையைத் தள்ளு வண்டியில் வைத்து பங்களா ஆயா தள்ளிக் கொண்டிருக்கிறாள். கோவிற் திருவிழாச் சப்பறத்தில் வீற்றிருக்கும் விக்கிரகம் போலத் துரையின் குழந்தை தள தளவென இருக்கிறது. பாப்பாத்தி பெருமூச்சு விட்டுக் கொண்டே தன் குழந்தையை இறுக அணைத்து முத்தம் கொடுக்கிறாள்:

பாப்பாத்தி தன் காம்பராவிற்கு வந்ததும் கூட்டாளிகளோடு கிட்டியடித்து விளையாடிக்கொண்டிருந்த சின்னவன் அவளை வரவேற்கிறான்-''ஆயா வந்திருச்சி ஆயா வந்திருச்சி''

தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைப் படுக்கப்போட்டு விட்டு ஈரமாக இருந்த படங்கையும், சேலையையும் இஸ் தோப்புக் கொடியிலே காயப்போடுகிறாள்.

வேலைவிட்டு வரும்போது லேசாக இருந்த வயிற்றுவலி திகு திகுவென்ற நெஞ்சுக்காந்தலுடன் சேர்ந்து 'ரொம்ப'வும் மோசமாகிறது. 'கொஞ்சம் சாயத்தண்ணி குடிச்சிக்கிட்டா தேவலே.'

ஈய முட்டியிலே தண்ணீரை நிறைத்து அடுப்பில் ஏற்றி விட்டு, தேயிலைத்தூளைத் தேடிப் போகிறாள்: காலையிலே தூட்கொத்துக்காலியாகிப் போனதை அவள் அறவே மறந்து விட்டாள். சீனி இல்லாமலே 'தேத்தண்ணி' குடிக்கலாம். தேயிலைத் தூளில்லாமல் 'தேத்தண்ணி' குடிக்கமுடியுமா? எடுத்ததற்கெல்லாம் அடுத்தவீட்டு அஞ்சலையையே எப்படித்தான் கேட்பது! சுட்டு ஆறிய நீரை வாய்க்குள் ஊற்றிக்கொள்கிறாள். வயிற்றுவலி கொஞ்சம் குறைவதுபோலத் தெரிகிறது.

சம்பளத்துக்கு நேரமாகிவிட்டது.

அவள் புருஷன் எப்போதோ ஒரு தீபாவளிக்கு எடுத்துக் கொடுத்ததும், எத்தனையோ சம்பளங்களைக் கண்டதுமான அந்தச் சேலையைக் கட்டிக் கொண்டு போனமாதம் சம்பளத்

துக்குப் போட்டுக்கொண்டு போய்விட்டு, அடிப்பெட்டியில் மடித்து வைத்திருந்த தலேவேட்டியை எடுத்துக் கொங்காணி யாக மடித்துத் தலேயில் மாட்டிக் கொண்டு சம்பளத்துக்குப் புறப்பட்டு விட்டாள்.

''ஆயா! எனக்கு ஆட்டுக்கால் விசுக்கோத்தும், சீனிக் கட்டியும் மறந்திரும வாங்கிக்கிட்டு வா, நானும் பேர்பதிஞ்சி வேலேக்காட்டுல புல்லு வெட்டி எங்க ஆயாவுக்கு நல்ல சீலேயும், பட்டுச்சீத்த லவுக்கையும் வாங் கிக் குடுப்பேன்.''

'ஒத்த' லயத்தைவிட்டுப் பிரியும் போது சின்னவனின் பேச்சு அவள் கண்களேக் கலங்கச் செய்கிறது.

போகும் பாதையில் இம்மாதச் சம்பளத்தில் இருக்கும் செலவுகளே எண்ணிப் பார்க்கிருள் - 'சம்பளம் எம்புட்டு இருக்கோ தெரியலே. ஒத்தக்கடை மொதலாளிக்கு பழைய பாக்கில பத்து ருவாசரி குடுக்கணும்... அரிசியும் மாவும் வாங்கணும்... ரெண்டு மூணு மாசமா தோட்டத்துல கொச் சிக்காயும் குடுக்கல... அதுகும் வாங்கிக்கணும்... கொலம் புத் தண்ணிக்கு ஒன்னுமில்ல... கையோடே எதுலயாச்சும் ஒரு ருத்தல் காய்கறியும் வாங்கிக்கணும்... சின்னவனுக்குக் கண்டிப்பா அவங் கேட்டதையும் வாங்கிக்கிட்டுப் போவ னும்... பாவம். அப்பனுமில்ல... அவனூட்டு ஆசையைத் தீக்க யாரு இருக்கா...? சின்னவன் தலேயெடுத்தாத்தான் நம்ம குடும்ப கஷ்டம் கொஞ்சம் கொறையும்...'

சம்பள வாசலுக்குப் பாப்பாத்தி வந்து விட்டாள்.

சின்னதுரை சம்பளம் போட்டுக்கொண்டிருக்கிருர். பச் சை நோட்டுக்கள் பல ரகங்களில் கட்டுக்கட்டாக மேசை யில் வைக்கப்பட்டிருக்கின்றன. கண்டக்கையா, கணக்கப் பிள்ளே, 'சுப்பேசர்' எல்லோரும் துரையைப் புடை சூழ்ந்து நிற்கின்றனர். கண்ணுடிக் கிளாக்கரய்யா மேசையிலே 'செக் ரோலே' வைத்து, சத்தமாகப் பெயரையும் சம்பளத்தொகை யையும் வாசிக்கிருர்.

''மருதுமுத்துக் கங்காணி காளியம்மா.. பத்தொன் பது ரூவா இருவத்தஞ்சி சதம்''

அடுத்து வரும் பெயர் பாப்பாத்தியினுடையது. அவளது நெஞ்சம் 'திக்திக்'கென்று அடித்துக்கொள்கிறது. துரைக்குச் 'செலாம்' வைத்துவிட்டு, பயபக்தியுடன் இருகைகளையும் நீட்டிக்கொண்டு முன்னுக்கு வருகிறாள்.

''மூணும் பிரட்டு பாப்பாத்தி அரிசிக் கடன் ரெண்டு ரூவா அறுபத்தேழு சதம்.''

துரை உரக்கக் கத்துகிறார் - ''இந்தா பாப்பாத்தி நீ ஒழுங்கா வேலைக்குப் போவனும்.. பெரிய துரை சொல்லி இருக்கார். செக்ரோலில் அரிசிக்கடன் இருக்கப்படா துண்ணு.. ஒனக்கு அடுத்த கெலமை அரிசி நிப்பாட்டுறது.. வெளங்கிச்சா?''

பாப்பாத்தி தலையைக் குனிந்து கொண்டு, சம்பள வாசலை விட்டு வெறுங்கையுடன் போகிறாள்.

பாப்பாத்தியின் அரிசிக் கடனும் கொழுந்து பறிக்கும் ஒரு பெண்ணின் ஒரு நாட் சம்பளமும் ஒரே எண்ணிக்கை யாக வந்து பொருந்தியதை ஒரு கணம் ஆங்கிலத்தில் அரு கில் உள்ள உத்தியோகத்தர்களிடம் சொல்லி ரசிக்கிறார் சின்ன துரை.

கண்ணாடிக் கிளாக்கரய்யா தொடர்கிறார். ''பொட்டு... முப்பத்தியெட்டு ரூவா ஒம்பது சதம்..''

கொண்டை போட்டு, குங்குமப் பொட்டிட்டு, குருத்துப் பச்சை நிறச் சேலைகட்டி ஒய்யாரமாகப் பொட்டு வருகிறாள்.

''வெரி குட்... பொட்டு மாதிரி சம்பளம் எடுக்கணும்'' சின்னதுரை கடைக்கண்ணாலே பொட்டுவைப் பார்க்க, பொட்டு ஓரக்கண்ணாலே கண்டக்கையாவைப் பார்க்க, கண்டக்கையா தன்னை மறந்து பல் இளிக்கிறார்.

பாப்பாத்திக்கு ஒன்றுமே புரியவில்லை.

'எனக்கு எப்புடி அரிசிக்கடன் வந்திச்சி...?போன மாசம் ரெண்டுநாத்தானேவேலையில்ல .. பத்தாந்தேதி சம்பளத்தண்ணைக்கி நேரஞ்செண்டு போச்சுன்னு பெரியதொர வீட்டுக்கே வெரட்டிப்புட்டாரு... அப்பறம் ஒரு நா கைப்புள்ளைக்கி காச்ச நெருப்பா அடிச்சி கண்ணு முழியெல்லாம் மேலே போயி பேச்சு மூச்சில்லாம டாக்டரய்யாக்கிட்ட எடுத்துக்கிட்டுப் போனதினுல அன்னைக்கி வேலைக்கிப் போகக் கெடைக்கல... போன மர்சம் ஒன்னுந் தேதி எனக்கு மேலுக்கு ரொம்ப சங்கடமா இருந்திச்சி... ஒண்ணுந்தேதி சீக்கு இருக்கப்புடாதுண்ணு மலைக்குப் போயி மேல் வெடவெடக்க கொழுந்தெடுத்து எப்புடியோ அன்னைக்கி பேரும் போட்டுட்டேன்... இது கண்டாக்கு, காளிமுத்தோட திருக்கிசாத்தான் இருக்குமோ? இதுக்குத்தான் காலையில மலையில சின்னத்தொர தெண்டம் பேர்ட்டாருண்ணு சொல்லிக் காமிச்சானோ...? சம்பளக் கிளாக்கரய்யா செக்ரோல்ல மா றிக் கீ றி போட்டிருப்பாரோ? நாளைக்கி ஆபீஸுக்குப் போய் பெரியய்யா வூட்டுக் காலுல விழுந்து சம்பளக் கணக்கை பாத்துக்கணும். இன்னைக்கி ஏசண்டு தொர தோட்டத்துக்கு வர்றதினுல ரெண்டு மூணு நாளைக்கி ஆபீஸ் பக்கம் தலை காட்ட ஏலாதே...! இந்த அநியாயத்த நம்ம மாரிமுத்துக்கிட்டயும் சொல்லி வைக்கனும்'

பாப்பாத்தியைக் கண்டதும் ஒத்தக்கடை முதலாளி சிறிசேன நோட்டுப் புத்தகத்தைப் பிரித்துக்கொண்டே 'எங்கிட்டுப் பாத்துக்கிட்டுபோற பாப்பாத்தீ... நம்ம கடைப் பாக்கி பதனஞ்சி ரூவா இரிக்கி... பத்து ரூவாவாச்சும் இந்த மாச சம்பளத்ல பாத்துக் குடுக்றது.

பாப்பாத்தி மெல்லிய குரலிற் சொல்கிருள்.

''மொதலாளி எனக்கு அரிசிக்கடனுங்க'' — அவளுக்குச் சொல்லவே வெட்கமாக இருக்கிறது.

''செக்ரோல்ல அரிசிக் கடன் இரிக்றப்போ நம்மட்ட வேறே கடன் வாங்குறது... கொடுக்ற வேலைக்கி ஒழுங்காப் போகாம லயத்துல சோம்பேறியா சுருண்டு படுத்துக்கிட்டு நம்ம கடைக்கு குட்டிச் சாக்கத் தூக்கிக்கிட்டு வர்றது... கடனுக்கு அள்ளிக்கிட்டுப் போக... ச்சீ... இதுகளுக்கு மானம், மரியாதை இருந்தாத்தானே.''

சிறிசேனு சொல்லிய வார்த்தைகள் — நெஞ்சில் யாரோ முள்ளுக்குத்துவதுபோல் அவளுக்கு வலியைக்கொடுக்கின்றன.

ஒத்த லயத்தை நோக்கி வேதனையுடன் விரைகிருள். அவளுக்கு வயிற்றுவலி இந்தப் பயணம் வாரிச்சுருட்டிக் கொண்டு வருகிறது. கீழுதட்டைப் பற்களால் கடித்துக் கொள்கிருள்.

ஒத்த லயத்து ஒற்றையடிப் பாதைக்கு வந்துவிட்டாள் பாப்பாத்தி.

பொறுக்க முடியாத — புழுவாய்த் துடிக்க வைக்கும்— வயிற்றுவலியுடன் தலையும் சுற்றுகிறது. மலைகள் ஒத்த லயம் எல்லாமே 'இஸ்டோர்' காற்ருடிபோலச்சுற்றுகின்றன.

''எனக்கு எங்க ஆயா ஆட்டுக்கால் விசுக்கோத்தும், சீனிக்கட்டியும் வாங்கிக்கிட்டு வருது.''

பெருங்குரலில் சின்னவன் போடும் சத்தம் அவளின் காதுகளிற் தேய்ந்து ஒலிக்கிறது.

மயக்கத்திலை பாப்பாத்தியின் உடற்பாரத்தைத்தாங்க முடியாத கால்கள் சோர்வடைய, கைகள் இருமருங்கிலும் உள்ள தேயிலைச் செடிகளின் வாதுகளை ஊன்றுகோலாகப் பற்றிக்கொள்கின்றன.

[ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 150வது ஜயந்தி விழாவை யொட்டி, நாவலர் சபையினுல் அனைத்திலங்கை ரீதியில் நடாத்தப்பெற்ற சிறுகதைப் போட்டியில் முதற்பரிசுபெற்ற கதை.]

'நாவலர்சபை' நடாத்திய அனைத்திலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற் பரிசினை வென்ற புலோலியூர் க. சதாசிவம் அவர்களின் 'ஒரு நாட் பேர்' என்னும் சிறுகதை அதன் ஆசிரியருடைய மனித வாழ்க்கையை ஊன்றி அவதானிக்கும் தன்மையினையும், சிறுகதை புனையும் வன்மையினையும் காட்டுவதாய் அமைந்துள்ளது. வாழ்க்கையையும் அதன் முரண்பாடுகளையும் பல்வேறு மனித உணர்ச்சிகளையும் தத்ரூபமாகச் சித்திரிக்கும் ஆற்றலை இவரிடம் காண முடிகிறது. சம்பவங்களையும் மொழியினையும் செம்மையாக ஆளும் அவரது திறன் பாராட்டத்தக்கது. மானிடப் பரிவும் அபிமானமும் மிக்க திரு. சதாசிவம் வரவேற்றுப் போற்றப்படவேண்டிய ஒரு சிறுகதையாசிரியர் என்பதிற் சந்தேகமில்லை.

சி. தில்லைநாதன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
இலங்கைப் பல்கலைக் கழகம்-பேராதனை.

**

இந்நூலாசிரியரின் கதைகள் எல்லாமே மண்வாசனை கமழ்வனவாய் உள்ளன.

கிராமப்புறஞ் சார்ந்த காட்சிகளையும், வாழ்க்கைக் கூறுகளையும் உருக்கமாகவும் நேர்மையாகவும் சித்திரிக்கும்திறன் ஆசிரியருக்கு நிறைய உண்டு.

மொழிநடையையும் உணர்ச்சி வெளிப்பாட்டையும் ஆசிரியர் அழகாக அடக்கியாண்டிருக்கிறார்.

கலாநிதி க. கைலாசபதி

## புலோலியூர்
## க. சதாசிவம் அவர்கள்



1961-ம் ஆண்டு 'இலக்கிய ரசிகர் குழு' நடாத்திய அகில இலங்கைச் சிறுகதைப் போட்டியில் முதற் பாராட்டுப் பெற்ற சிறுகதையின் மூலம் ஈழத்து இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். இவர் அனைத்திலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டிகளில் இரு தடவைகள் முதற்பரிசு பெற்றவர்.

1971-இல் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசாகத் தங்கப்பதக்கம் பெற்றார். 1972-இல் 'நாவலர் சபை' நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்று, நாவலர் 150-வது ஜெயந்தி விழாவிற் கௌரவிக்கப்பட்டார். வேறு பல போட்டிகளிலும் இவரது கதைகள் தராதரமானவையாகக் கணிக்கப்பட்டன. இவர் ஆக்க இலக்கிய ஆற்றல்மிக்கவர். இவரது கதைகள் ஆழ்ந்த சமுதாய ஆராய்ச்சியின் விளைவுகள்; படைத்துள்ள பாத்திரங்கள் உயிர்ச்சித்திரங்கள். சமுதாய நோக்கு ஆழமாகப் பதிந்த உள்ளடக்கத்தையும், கலையழகு பொலியும் உருவத்தையும் கொண்டுள்ள இவரது கதைகள் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்கு வளத்தையும் வாளிப்பையும் கொடுக்கின்றன. இத்துறையில் ஈட்டிய சாதனைகள் இவருக்கு ஈழத்து இலக்கிய வரலாற்றில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுக் கொடுக்கும் என இலக்கிய விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

1942-ம் ஆண்டு ஈழத்தின் வடபகுதியில் உள்ள புலோலியூரில் புற்றளை என்ற கிராமத்திற் பிறந்த இவர், கொத்மலை 'கற்றபூலா குரூப்' உதவி வைத்திய அதிகாரி (A. M. P.) யாகக் கடமையாற்றுகிறார்.

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் — நாவலப்பிட்டி.